Registered as a News Paper
பக்கம் – 16

# ஈழநாதம்

விலை: 12.00

வெள்ளிநாதம் Weekly

நாதம்–14 வெள்ளி–04 21–27மார்ச் 2003



## ஜப்பானில்...





## சமாதானம் தொலைந்துபோகுமா? தொலைதூரமா?



## ரணிலுக்கான தெரிவுகள்



ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ். சாலை, கிளிநொச்சி. 21–03–2003

# YOU TOO PIERIS...(பீரிஸ் நீங்களுமா?)

முல்லைத்தீவுக்கடற்பரப்பில் விடுதலைப்புலிகளின் சரக்குக் கப்பலைத் தாக்கியழித்த கடற்படையினரின் அடாவடித் தனத்தை நியாயப்படுத்துவதில்- அதனைத் தாக்கியழிக்க உத்தர விட்ட சந்திரிகாவின் அதிகாரத்தை அங்கீகரிப்பதில் சிங்களத் தலைமைகள் தீவிரம் காட்டி வருகின்றன.

சர்வதேசக் கடற்பரப்பில் நடைபெற்ற இந்த அட்டூழியம் சர்வதேச விதிமுறைகளுக்கு எதிரானது என்ற கருத்து வலுப்பெறத்தொடங்கியதும், இச்சம்பவம் சிறிலங்கா கடற்பரப்பு எல்லைக்குள்தான் நடந்தது என்று பாதுகாப்புச் செயலர் அதனைக் 'கடல்மைல்' கணக்குக் காட்டி நியாயப்படுத்தப் பொய்கூறினார்.

கடற்படையே சர்வதேசக் கடற்பரப்பில் தான் இச்சம்பவம் நடந்ததென அறிவித்த பின்னர், கரைக்கு வெகுதொலைவில் இருந்து கொண்டே இந்த அறிக்கையை ஒஸ்ரின் பெர்ணான்டோ விடுத்தது தான் அபத்தமானது.

தாக்கியழிக்கப்பட்ட சரக்குக் கப்பலில் எரிபொருட்கள் தான் ஏற்றிச் செல்லப்பட்டுக் கொண்டிருந்தது என்று கப்பலுக்குரியவர்களான விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ள அதே வேளை, கப்பலுள் என்ன இருக்கென்றே தெரியாத நிலையில் அதனைத் தொலைவில் இருந்தே தாக்கியழித்து மூழ்கடித்த கடற்படையினர் பின்னர் அதிலிருந்ததாக அவர்கள் 'கனவு கண்ட' ஆயுதங்களின் பட்டியல் ஒன்றை மிகத்துல்லியமாக எண்ணுக் கணக்குப்பிசகாது வெளியிட்டமை அதனை விடவும் கோமாளித்தனமானதாகும்.

ஆக, அந்தக் கப்பலை ஆயுதக் கடத்தல் கப்பலாகக் காட்டவேண்டும். அதனை இலங்கைக் கடல் எல்லைக்குள் வைத்தே தாக்கியழித்ததாக நிருபிக்கவேண்டும் என்பவைதான் பாதுகாப்பு செயலரினதும் கடற்படைத் தலைமையினதும் குறியாக இருந்துள்ளமை தெளிவாகியுள்ளது.

இவர்களுக்கு எல்லாம் ஒருபடி மேலாகவே நின்று கொண்டு அந்த புகழ்பெற்ற சந்திரிகா காலத்து 'தீர்வுப்பொதி' அமைச்சரான பேராசிரியர்- சமாதானப் பிரதம பேச்சாளர்- ஜி.எல் பீரிஸ் கருத்தொன்றை வெளியிட்டுள்ளார்.

'முல்லைத்தீவுக் கடலில் புலிகளின் கப்பல் தாக்கப்பட்ட சம்பவத்தில் கடற்படையினர் சர்வதேசச் சட்டப்பிரமாணங்களையோ அல்லது போர் நிறுத்த உடன்பாட்டையோ மீறவில்லை' என்று அவர் கூறியுள்ளார்.

இதன் மூலம் கடற்படையினரின் செயற் பாடுகளுக்கு பாதுகாப்புக் கவசம் ஒன்றை அவர் வழங்க முற்பட்டுள்ளார் என்றே கூற வேண்டும்.

ஜப்பானில் நடைபெறும் பேச்சுவார்த்தைகளில் இக் கப்பல் விடயம் மிகமுக்கிய அம்சமாகக் கவனத்தில் கொள்ளப்படும் என்ற நிலைமையிருக்கையில், முன்கூட்டியே அது குறித்து ஒரு அபிப்பிராயத்தை முன்வைத்து தனது நிலைப்பாட்டை அமைச்சர் வெளியிட்டுள்ளார் என்றே கூறவேண்டும்.

அந்தக் கப்பல் விவகாரம் குறித்த கண்காணிப்புக் குழு வினரின் விசாரணைகள் தொடர்பான அறிக்கை விபரம் வெளியாக முன்னரே அவசரப்பட்டு இந்தக் கருத்தை வெளியிட்டதன் மூலம் தனது பேரினவாத முகத்தை இனங்காட்டியுமுள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் கூறுகையில் 'படை யினருக்கு யாரும் உத்தரவிடத் தேவையில்லை. நாட்டின் இறைமையைப் பாதுகாக்க வேண்டியது அவர்களின் பொறுப்பு, இதைத்தான் அவர்கள் செய்துள்ளார்கள்' என்று கடற்படையினரின் கடமை யுணர்வுக்கு பாராட்டு வழங்கித் தட்டிக்கொடுத்துமுள்ளார்.

ஆக, இதேபோன்ற காரியங்களைத் தொடர்ந்து செய்யுங்கள் இதற்கு யாருடைய அதிகாரபூர்வ உத்தரவையும் எதிர்பார்க்கத் தேவையில்லை என கடற்படையினருக்கு இதன் மூலம் உற்சாகமும் அளித்துள்ளார்.

அது மட்டுமல்லாது இக்கப்பலைத் தாக்கியழிக்க சனாதிபதிதான் உத்தரவிட்டார் என்பதை நிராகரித்து, அவருக்கு இந்தப் பெருமை போய் பேரினவாதிகள் மத்தியில் அவருக்கு செல்வாக்கு அதிகரித்து விடக்கூடாது என்பதிலும் மிகக் கவனமாகவே இருந்துள்ளார்.

சமாதானம், அரசியல் தீர்வு, அதிகாரப்பரவலாக்கல் என்றெல்லாம் அரசியலில் நுழைந்த காலம் தொட்டு அபரிமிதமாகப் பேசிவரும்பீரிஸ், அத்தகைய முயற்சிகளுக்கும், அமைதிச் செயற்பாடுகளுக்கும் அச்சுறுத்தலாகவே தொடர்ந்து இருந்து வருகின்ற ஆயுதப்படை யினரை, குறிப்பாக கடற்படை யினரை பாதுகாக்க அவர்களின் நியாயமற்ற அத்துமீறல் நடவடிக்கைகளை நியாயப்படுத்த முயன்றிருப்பதானது அவர் மீதான மென்மையான- அறிவுபூர்வமாகச் சிந்திக்கும். யதார்த்தமான பேராசிரியர் என்ற அபிப்பிராயத்தை சிதைக்கச் செய்திருப்பதுடன் அவரும் ஒரு அரசியல்வாதி தான், பேரினவாத சிந்தனைகளை ஆழ்மனதில் புதைத்துவைத்துள்ள அமைச்சர்தான் என்ற எண்ணத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

எல்லாவற்றிலும் மேலாக 'இத்தாக்குதல் குறித்து போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு ஒரு தீர்ப்பை வழங்கும் என அவர் கூறியிருப்பதற்கமைய, அக்குழு கடற்படை மற்றும் பாதுகாப்பு அமைச்சின் அறிக்கைகளுக்கிடையே முரண்பாடுகள் உள்ளதாக தெரிவித்துள்ளமை குறித்து பீரிஸ் என்ன சொல்லப்போகிறார்?

ஆயுதப்படைகள் தரப்பை நியாயப்படுத்திக் கொண்டு சுய அரசியல் இலக்குகளை எட்டுவதற்காக, சமாதானத்தை ஒரு கருவியாகப் பயன்படுத்துவதன் மூலம் காலத்தைக் கடத்தும் மூலோபாயம் நீண்ட காலத்திற்கு நிலைக்க முடியாது....

இதுவும் வரலாறு கூறும் பாடமே!

## தூரனின் பார்வை

# சமாதானம்! தொலைந்து போகும் நம்பிக்கையா? தொலை தூரத்து நம்பிக்கையா?

விடுதலைப்புலிகள் மீண்டும் ஒரு தடவை சமாதானத்தின் மீதான ஒரு நியாயபூர்வமான அரசியல் தீர்வின் மீதான தமது பற்றுறுதியையும் சர்வதேச சமூகத்தின் அமைதி முயற்சிகளுக்கு வழங்கிவரும் தமது ஒத்துழைப்பின் மீதான உறுதிப்பாடையும், நிருபித்துள்ளார்கள்.

ஜப்பானில் ஆறாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடக்குமா, நடக்காதா என்ற ஐயம் அனைவர் மத்தியிலும் எழுந்திருந்தவேளை யில்...

தம் பிடியில் சிக்கியிருந்த போர்க்கைதிகளை விடுவித்து, என்பதை நிருபித்து அனைவர் முகத்திலும் கரியைப் பூசியதன் மூலம், சமாதான சக்திகளுக்கு நம்பிக்கையூட்டி அவர்களது முயற்சிகளுக்கான தமது பூரண ஒத்துழைப்பினை தொடர்ந்தும் வழங்குவதற்கான உறுதியை வெளிப்படுத்தி யுள்ளார்கள் விடுதலைப்புலிகள்...

இதனை சர்வதேச சமூகம் நன்கு புரிந்து கொள்ளவேண்டும். ஒருதலைப்பட்சமாக முதலில் போர்நிறுத்தத்தை பிரகடனம் செய்து பின்னர் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டு,

இத்துடன் அமைதிப் பேச்சுவார்த்தைகள் முறிந்தால் நல்லது என சிறிலங்காவின் எதிர்க்கட்சிகளும், பேரினவாத வெறியர்களும், அவர்களின் அடிவருடிப் பிழைப்பு நடத்தும் தமிழின விரோத சக்திகளும் 'வீணீர்' விட்டபடி எதிர்பார்த்துக் காத்திருந்த வேளையில்....

மீண்டும் சண்டை தொடங்கப் போகிறோம்... ஏன் யாழ்ப்பாணம் போகின்றீர்கள்? அங்கு போய் சண்டையில் சிக்கி சாகப் போகிறீர்களா என சில சிறிலங்காப் படையிலுள்ள யுத்த வெறியர்கள் முகமாலைச் சோதனைச் சாவடியில் வைத்து, எமது போராளிகளையே அச்சுறுத்திக்கொண்டிருந்த வேளையில்....

எல்லாவகையிலும் பொறுமைகாத்து, ஜப்பான் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டு, எந்த நிலையிலும் அமைதி முயற்சிகளை குலைக்கமாட்டோம்

A9 பிரதான பாதையைத் திறந்து விட்டு, விடுதலைப்புலிகள் கடந்த ஓராண்டு காலப்பகுதிக்குள் சமாதானத்தின் மீதான தமது நம்பிக்கையை வெளிப்படுத்தி வந்துள்ளமையை அரசும் அறியும்... சர்வதேசமும் அறியும்....

இந்த ஓராண்டு கால சமாதானப் பொழுதுகளை நிம்மதியாகவும் உல்லாசமாகவும் அச்சமின்றியும், அனுபவிப்பவர்கள் தென்னிலங்கையின் பெரும்பான்மைச் சிங்களமக்களேயாவர்.

போர் தான் ஓய்ந்ததே யொழிய, வடக்குக் கிழக்கு மக்களுக்கு சமாதானம் இன்னமும் தூரத்துப் பச்சையாகவே உள்ளது.

இன்னமும் அந்த மக்கள் தமது இருப்பினை உறுதிப்படுத்த வழியின்றி அல்லாடிக் கொண்டேயிருக்கின்றனர்.

இடம்பெயர்ந்து அகதிகளாக, நாடோடிகளாக, காட்டுவாசிகளாக அலைந்து துன்பத்தின் உச்சங்கள் அனைத்தையும் அனுபவித்து. சகல வகையான இழப்புகளையும் சந்தித்து. வெந்து நொந்து போன மக்கள். இந்தச் சமாதான காலத்தில் தமது வேர்களைத் தேடி. தங்கள் வாழ்வியல் மூலங்களைத் தேடி சொந்த முற்றத்திற்குச் செல்ல இன்னமும் முழுமையான அனுமதியில்லை.

எங்கள் மக்களின் முற்றங்கள் இன்னமும் இராணுவ ஆக்கிரமிப்பு நிலையில். உயர்பாதுகாப்பு வலயங்கள் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு முட்கம்பிவேலிகளாலும், காவலரண்களாலும் சூழப்பட்ட நிலையிலே உள்ளது.

சிங்கள இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளில் இன்னமும் கிலோ மீற்றருக்கொரு காவலரண் சமாதான காலத்திலும் துப்பாக்கியின் விசையில் விரல் பதிந்துள்ள நிலையில் மக்களை சந்தேகப்பார்வையுடன் குறிவைத்தப்படி குரோத உணர்வு கொப்பளிக்கும் விழிகளுடன் நிற்கும் ஆயுதப்படையினர் எங்கள் மக்களுக்கான அமைதியை வழங்குவார்கள் என எவருமே நம்பமுடியாது.

சமாதானத்திற்கும் அமைதிக்கும் எதிரான ஆதிக்க அதிகார வெறியுடன் கூடிய ஆபத்தான சக்தியாக விளங்கும் சனாதிபதி சந்திரிகாவின் ஆதரவு அநுசரணையின்றி எந்த விதமான அரசியல் தீர்வையோ. புரிந்துணர்வு ஒப்பந்த சட்டவிதிகளின் எந்த ஒரு அம்சத்தையும் அமுலாக்க சுயாதீனமான உரிமையையோ. வலுவை போ அற்ற அரசாங்கம் பேச்சுவார்த்தையை ஒரு பிரசார சாதனமாகப் பயன்படுத்திக் கொண்டு. கடந்த ஓராண்டு காலத்தை கடத்தியதன் மூலம் தென்பகுதி மக்களுக்கு அமைதியை வழங்கி. வெறுமையாகிக்கிடந்த திறைசேரியையும். வறுமையாகிக்கிடந்த நாட்டையும் மட்டும் சர்வதேச சமூகமளித்த சமாதானத்திற்கான பிச்சை மூலம் முழுமையான வரட்சியிலிருந்து பாதுகாத்துள்ளார்கள் என்பதே யதார்த்தம்.

போரின் அழுத்தங்களை கடந்த இரு தசாப்தங்களாக அனுபவித்து வந்த வடக்குக் கிழக்கில் சமாதானம், அமைதி என்பதெல்லாம் பத்திரிகைகளில் வெளிவரும் செய்திகளில் காணப்படும் வெறும் வார்த்தைகளாக மட்டுமே உள்ளது.

அமைதியை அடுத்து சமாதான யாத்திரைகளை மேற்கொள்ளும் சர்வதேச ராஜதந்திரிகளும், ராணுவ தந்திரிகளும். மூன்றாந்தர அரசியல் வாதிகளுக்கேயுரிய வார்த்தைஜாலங்களுடன் வாக்குறுதிகளை மட்டும் மூட்டை மூட்டையாக சுமந்து வந்து எமது மக்கள் மத்தியில் கொட்டிவிட்டு, போரின் அனர்த்தங்களால் சிதையுண்ட எமது மண்ணையும், பேரினவாத வெறியின் ஆதிக்க ஒடுக்குமுறையின் அவலங்களைச் சுமந்த எமது மக்களையும், இதேசர்வதேச சக்திகளின் ஆலோசனையுடனும், ஆயுத அன்பளிப்புகளுடனும், இராணுவ பயிற்சிகளுடனும் சிங்கள அரசின் ஆயுதப்படைகளும் கூலிப்பட்டாளமும் நடத்திய ஆக்கிரமிப்பு யுத்தத்தை எதிர் கொண்டு முறியடித்து நிமிர்ந்து நிற்கும் விடுதலைப்புலிகளையும் வியப்புடன் பார்த்துச் செல்லும் பார்வையாளர்களாகவே தென்படுகின்றன.

இந்த ஓராண்டு கால இவர்களின் சமாதான கோஷங்களால் இந்த நாட்டின் பேரினவாத சக்திகளின் குரலை ஒடுக்கிவிட முடியவில்லை.

மாறாக அந்தக்குரல்கள் இன்னும் அதிகஅளவில் வெளிப்படையாக ஓங்கி ஒலிக்கத் தொடங்கியுள்ளதை வேடிக்கை பார்ப்பவர்களாகவே இவர்கள் உள்ளனர்.

இந்த அமைதி விரோத சக்திகளின் ஆர்ப்பாட்டப் பேரணிகளில் ஒலிக்கும் போர் வெறிக்குரலின் அதிகாரத் தொனியை அடக்கும் வல்லமையற்ற சர்வதேச சமூகம் பேச்சு வார்த்தைகளுக்கான மேசைகளை ஒழுங்குபடுத்தி அலங்கரிப்பதில் மட்டும் தீவிரம் காட்டுகிறது.

தீர்வுகளை அமுல் செய்யும் வல்லமை சமாதானத்திற்கு எதிரான பேரினவாத தலைமைகளின் அதிகார எல்லைக்குள் இருக்கும் போது வெறுமனே பேசிக்கொண்டிருப்பதன் மூலம் சமாதானத்தின் பெறுபேறுகள் உண்மையில் யாரைச் சென்றடைய வேண்டுமோ அவர்களுக்கு. அதாவது தமிழ் மக்களுக்கு. எவ்வித பயனும் ஏற்படப்போவதில்லை என்பதையே இந்த ஓராண்டு கால அமைதிச் சூழல் நிரூபித்துள்ளது.

இதனை நாம் மட்டும் சொல்லவில்லை சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே வெளிநாட்டில் வைத்து பகீரங்கமாக ஒப்புக்கொண்டுமுள்ளார்.

எமது மக்கள் தமது சொந்த மண்ணில் மீண்டும் வேரோடி நிலைத்து நிற்கும் உரிமையைத் தீர்மானிக்கும் சுதந்திரம் கூட இல்லை எனில் இந்தச் சமாதானத் துக்கு என்னதான் அர்த்தமாம்?

எமது மண்ணில் எமக்குள்ள பாரம்பரிய உரிமையை, சுயாதீனமாக வாழும் சுதந்திரத்தை பற்றித்தீர்மானிக்க, அன்னியர்களான நம்பியாரும் ஆர்மிரேஜ் ஜ"ம் இன்னும் ஆராரோவும் கூறும் முடிவில்தான் தங்கியிருக்க வேண்டுமென்றால் எமக்கான சுதந்திரத்தின் அர்த்தம்தான் என்ன?

இதுஒரு அவமானகரமான நிலையல்லவா?

இது பேரினவாதத்துடன் வல்லாதிக்க சக்திகள் ராஜதந்திரரீதியில் கைகோத்துக் கொண்டு - சமாதானம் என்ற போர்வைக்குள் மறைந்துகொண்டு - எமது மக்களுக்கு எதிரான மிக நாகரீகமாக மேற்கொள்ளும் ஒரு 'சதி' மூலோபாயமாகத் தென்படவில்லையா?

போர் நிலையை விடவும் இந்தச் சமாதானச் சதி நிலைதான் மிகவும் ஆபத்தானது. இதில்தான்- இந்தக் கட்டத்தில் தான்- நாம் எச்சரிக்கையாகவும் நிதானத்துடனும் தொலைநோக்கு சிந்தனையுடனும் செயற்படவேண்டியுள்ளது.

(15 ஆம் பக்கம் பார்க்க)

# சமாதானத்தின் எதிர்காலம்?



நிலாந்தன்

வங்கக் கடலில் புலிகளின் கப்பலை மூழ்கடித்தவர் கள் எதை நினைத்து அதைச் செய்தார்களோ அந்த இறுதி இலக்கைப் பொறுத்தவரை தோற்றுவிட்டார் கள் என்றே சொல்ல வேண்டும்.

கப்பலை அவர்கள் மூழ்கடித்த நேரமும், மூழ்கடித்த விதமும் தற்செயலானவை அல்ல. இதன் மூலம் புலிகளை உணர்ச்சிவசப் படுத்தி ஒன்றில் ஆறாம் கட்டப் பேச்சுகளில் இருந்து புலிகளை பின் வாங்க வைப்பது அல்லது சமாதானத்தை ஒரேயடியாக முறித்து விடுவது என்பதே கப் பலை மூழ்கடித்தவர்களின் இறுதி இலக்கு.

ஆனால் புலிகள் ஜப்பானுக்குப் போனதன் மூலம் சமாதானத்தின் எதிரிகளை தோற்கடித்துவிட்டார்கள் என்பதே சரி.

ஜப்பான், இந்தியாவை மீறி நேரடியாக சமாதான முயற்சிக ளில் இறங்கிய பின் வந்திருக்கும் ஒரு முக்கியமான கட்டம் இந்த ஆறாம் கட்டப் பேச்சுவார்த்தை.

சமாதானத்துக்கான நிதி விவகாரத்தைப் பொறுத்தவரை இது ஒரு தீர்மானகரமான கட்டமா யிருக்கும் என்ற எதிர்பார்ப்பு பர வலாக உண்டு.

நோர்வேயில் கடந்த ஆண்டு நடந்த சமாதானத்துக்கு ஆதரவான மாநாட்டைப் போலவே ஜப்பான் மாநாடும் சமாதானத்துக்கு ஆதரவான சர்வதேச சமூகத்தின் பங்களிப்பை உறுதிப்படுத்தும் ஒரு முக்கிய கட்டமாயிருக்கிறது.

இங்கே ஒன்றை நாம் கவனிக்க வேண்டும். சர்வதேச கடற்பரப்பில் புலிகளின் கப்பல் தாக்கி அழிக் கப்பட்ட போது புரிந்துணர்வு உடன் படிக்கையும் போர் நிறுத்தமும் செயலிழந்து விட்டன. யுத்த நிறுத் தக் கண்காணிப்புக்குழு ஒரு பொருட்டில்லை என்றாகியது.

சர்வதேச சமூகம் சமாதானத் துக்கு ஆதரவாக தனது பலத்தைப் பிரயோகித்திருந்திருக்க வேண்டிய ஒரு சந்தர்ப்பம் அது. சர்வதேச கடற்பரப்பு அது என்பதாலும் இது விசயத்தில் சர்வதேச சமூகத்தின் பொறுப்பு ஒப்பீட்டளவில் அதிகம்.

ஆனால் சம்பவத்தின் போதும் அதன் பின்னரும் சர்வதேச சமூகம் சமாதானத்தைப் பாதுகாக்கும் அதன் பொறுப்பை சரிவர நிறை வேற்றவில்லை என்பதே இங்குள்ள கவலை தரும் யதார்த்தம்.

மேற்குலகின் ஆசீர்வாதத் துடனும் வழிகாட்டல்களுடனும் நிகழும் சமாதான முயற்சிகளில் தாங்கள் ஓரங்கட்டப்பட்டுவிட்ட தாகக் கருதும் எல்லாத்தரப்பின ரும் பிராந்திய மட்டத்தில் ஒரு பலமான அணியை உருவாக்கி வரும் ஒரு நிலையில், இந்த சர்வதேச சமூகம் தனது பொறுப் பை உருப்படியான ஏதாவது ஒரு விதத்தில் நிரூபிக்க வேண்டி யிருக்கும் ஒரு தருணத்தில், ஜப்பான் மாநாடு கூடியிருக்கிறது.

இதில் சர்வதேச சமூகத்தின் பொறுப்பு எனப்படுவது மூன்று விதமாக அமைய முடியும்.

முதலாவது சமாதானத்துக்கான நிதியை வழங்குவதன் மூலம்.

இரண்டாவதாக சமாதானத்தின் எதிரிகள் மீது இராஜதந்திர அழுத்தத்தைப் பிரயோகிப்பதன் மூலம்.

மூன்றாவதாக ரணில் விக்கிரமசிங்கவிற்கு அவருடைய பொறுப்பை உணர்த்துவதன் மூலம்.

கடந்த சுமார் ஓராண்டு கால யுத்த நிறுத்த மீறல்கள் அநேக மானவற்றின் போது ரணிலை குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுவிக்கும் ஒரு போக்கே உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் பரவலாகக் காணப்படுகிறது.

ஒரு புறம் ரணில் பலவீன மானவராகக் காணப்படுகிறார் என்பது மெய்தான்.

ஆனால் இன்னொரு புறம் அவர் தன்னை அப்படிக்காட்டிக் கொள்வதன் மூலம் தனது ஆகக் குறைந்தபட்ச பொறுப்புக்களைக் கூடத் தட்டிக்கழிக்கிறார் என்ற குற்றச்சாட்டுக்கள் அதிகரித்து வரு கின்றன.

ஏனெனில் சமாதானம் தான் அவருடைய இன்றைய அரசிய லின் அடித்தளம்.

அவருடைய எழுச்சி எனப்ப டுவது சமாதானத்துடன் தான் ஆரம் பமாகிறது.

சமாதானம் தான் அவரிடமுள்ள ஒரேயொரு துருப்புச்சீட்டு.

அதை விட்டால் அவருடைய எதிர்காலம் தளம்பத் தொடங்கி விடும்.

எனவே குறைந்த பட்சம் தனது எழுச்சியைப் பாதுகாக்க வேண்டி யேனும் அவர் சமாதானத்தை பாதுகாத்தாக வேண்டும்.

இந்நிலையில் சமாதானத்தைப் பாதுகாக்கும் பொறுப்பின் பெரும் பகுதியை அவர் எப்படிப் புலிக ளின் தலையில் மட்டும் சுமத்த முடியும்?

இதுவரையிலுமான எல்லா யுத்த நிறுத்த மீறல்களிலுமாக மொத்தம் 14 க்கும் குறையாத தமது உறுப்பினர்களைப் புலிகள் இழந்து விட்டார்கள். தவிர பொது மக்களின் தொகை ஒன்றும் உள்ளது.

அதே சமயம் அரசாங்கத்துக்கு இழப்பு வீதம் ஒப்பீட்டளவில் குறைவே.

இந்நிலையில் - சமாதானத் துக்காக தியாகம் செய்யும் பொறுப்பை புலிகளிடம் தள்ளி விட்டு ரணில் எவ்வளவு காலத்துக் குத் தப்பியிருக்க முடியும்?

சமாதானத்துக்காக இது வரை யிலும் அவரும் அவரது சகாக் களும் செய்துள்ள தியாகங்கள் எவையெவை?

சில சமயம் யுத்தம் வெடிக்கிறது என்று ஒரு கதைக்காக வைத்துக் கொள்வோம். அப்பொழுது அரசாங்கம் என்ற கோதாவில் ரணில் யுத்தத்தில் வெற்றிகளைக் காட்ட வேண்டியவராய் இருப்பார்.

முன்பு சந்திரிகா செய்ததைப் போலவே, பிரேமதாச செய்ததைப் போலவே அவரும் யுத்த களத்தில் எதையாவது சாதிக்க வேண்டி யிருக்கும்.

இதை இன்னும் சரியான வார்த்தைகளில் சொன்னால் - இருபத்தியொராம் நூற்றாண்டின் சிங்கள இனவாதத்துக்கு அவர் தலைமை தாங்க வேண்டிவரும்.

அப்படியொரு பாத்திரத்தை ஏற்ற பிறகு அடுத்த சனாதிபதித் தேர்தலில் அவரால் சமாதானத் துக்காக வோட்டுக் கேட்க முடி யாது.

ஒன்றில் சமாதானத்தைக் காட்டி வோட்டுக் கேட்க வேண்டும்.

அல்லது யுத்தத்தின் வெற்றிக ளைக் காட்டி வோட்டுக் கேட்க வேண்டும்.

இப்பொழுதுள்ள களநில வரத்தின் படி சமாதானத்தைக் காட்டி வோட்டுக் கேட்பவரே வெல்ல முடியும்.

ஆனால் யுத்தம் என்று இறங்கி விட்டால் பிறகு யுத்தத்தின் தோல் விகளால் சிங்களவர் சலிக்கும் வரை சமாதானத்தைப் பற்றிக் கதைப்பது கஸ்ரம்.

அப்பொழுது யார் கூடுதலாக இனவாதம் கக்குகிறார்களோ அவர்கள் தான் வெல்லமுடியும். அது மிகவும் நிச்சயமற்ற ஒரு அரசியலாய் இருக்கும். இப்பொழு தைப் போலன்றி சிங்களவர்கள் மிகவும் குளம்பிப் போயிருக்கும் ஒரு தேர்தல் களமாக அது இருக் கும்.

தவிர அது அதிகம் குருதி சிந்தப்படுகின்ற ஒரு தேர்தல் களமாகவும் இருக்கும். தேர்தல்கள் ஊரடங்குச் சட்டத்தின் நிழலில் தான் நடக்கக் கூடியதாயும் இருக் கும்.

சிங்கள வாக்காளர்கள் மிகவும் தளம்பிக் கொண்டிருக்கும் அத்தகைய ஒரு தேர்தல் களத்தில் ரணிலின் வெற்றியை நிச்சயித்துக் கூறுவது சாத்தியமில்லை.

மாறாக, இப்பொழுதுள்ள களநிலவரத்தின் படி ரணில் தான் வெற்றிப் பாதையில் நிற் கிறார். ஒரு தேர்தல் நடந்தால் குறைந்தபட்ச பெரும்பான்மை யோடாயினும் வெற்றி அவருக்கே.

இனியும், இப்பொழுதுள்ள இந்த நிலைமைகளை எப்படியாவது பல்லைக் கடித்துக் கொண்டு இரண்டே இரண்டு ஆண்டுகளுக்கு நீடித்து விட்டால் நிச்சயமாக அடுத்த சனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறும் வாய்ப்புக்கள் ரணிலுக்கே மிகவும் அதிகம்.

சமாதானத்தின் பேரால் அடுத்த சனாதிபதியாகும் ஆகக் கூடியபட்ச வாய்ப்புக்களை உடையவராக அவர் காணப்படுகிறார்.

இதற்கு அவர் இப்பொழுதுள்ள புரிந்துணர்வைப் பேணியாக வேண்டும்.

எனவே நிலவும் யுத்தநிறுத் தத்தை எப்படியாவது இன்னும் இரண்டு ஆண்டுகளுக்கு அதா வது அடுத்த சனாதிபதித் தேர்தல் வரையிலும் இழுத்திழுத்துக் கொண்டு போவதே ரணில் விக்கிர மசிங்கவுக்கு எல்லா விதத்திலும் பாதுகாப்பானது புத்திசாலித்தன மானது.

ஆனால் இதற்காக அவர் சில தியாங்களையாவது செய்ய வேண்டும்.

எதை இழந்து எதைப் பெறுவது என்பதை அவர் முடிவெடுக்க வேண்டிய ஒரு தருணம் இது.

சமாதானத்தின் மீது உறுதியாக நிற்கும் வரை அவரை யாராலும் அசைக்க முடியாது.

ஆனால் நோகாமல் சமாதானம் கிடைக்காது.

யுத்தத்தின் வெற்றிகளுக்காகத் தியாகம் செய்யப் பலர் உண்டு. சமாதானத்தின் வெற்றிக்காக தியாகம் செய்ய யாருண்டு?

இப்பொழுது நாட்டுக்குத் தேவை சமாதானத்துக்காக தியா கம் செய்யவல்ல சிங்களத் தலை வர்களே.

ரணில் விக்கிரமசிங்கவும் அவரது சமாதான பிரிகேட்டும் ஒரு விசயத்தை உற்றுக் கவனிக்க வேண்டும்.

கடந்த சுமார் ஓராண்டுக்கு முன்புவரை யுத்தத்தின் வெற்றிக் காக தியாகம் செய்து காட்டிய புலிகள் சமீப காலங்களில் சமாதா னத்துக்காகவும் தியாகம் செய்து வருகிறார்கள்.

இது ஒரு அடிப்படைப் பண்பு மாற்றம்.

இம்முறை சமா தானம் இவ்வளவு காலம் நீடித் திருப்பதே இந்தப் பண்பு மாற்றத்தின் பேறா கத்தான்.

முன்னைய காலங்களில் சமா தானத்தை முறிக்கப்போதுமா யிருந்த அதே விதமான சம்ப வங்கள் அடுத்தடுத்து நடந்து விட்டன.

ஆனால் புலிகள் மிகவும் அசா தாரணமாக பொறுமை சாதித்து வருகிறார்கள்.

புலிகளை உணர்ச்சி வசப்படுத்தி தமது இலக்குகளை அடையும் முயற்சிகளில் சமாதானத்தின் எதிரிகள் தொடர்சியாக அடைந்து வரும் தோல்விகள் இத்தகைய அடிப்படைப் பண்பு மாற்றத்தையே நிரூபித்து வருகின்றன.


சர்வதேச அரங்கில் புலிகளுக்கு மதிப்பையும் அந்தஸ்தையும் பெற் றுக் கொடுத்திருக்கும் இந்த பண்பு மாற்றமே இப்பொழுது நிலவும் சமாதானத்துக்கான ஆகப் பெரிய அடிப்படை.

இந்த அசாதாரணமான பண்பு மாற்றாத்தை ரணில் விக்கிரமசிங்க தீர்க்கதரிசனத்துடன் கையாள வேண்டும்.

இந்த பண்பு மாற்றத்தைப் பாதுகாத்தால் தான் சமாதானத் தைப் பாதுகாக்க முடியும் என்பதை அவர் விளங்கி வைத்திருக்கிறாரா?

அல்லது குறைந்த பட்சம் தனது எழுச்சியைப் பாதுகாக்கவேனும் அவர் இந்தப் பண்பு மாற்றத்தை பாதுகாக்க வேண்டும். மதித்தாக வேண்டும்.

இல்லையென்றால் - இருபத்தி யொராம் நூற்றாண்டின் சிங்கள இனவாதத்துக்குத் தலைமை தாங்குவதைத் தவிர அவருக்கு வேறு எந்தத் தெரிவும் இருக் கப் போவதில்லை.



# மதவடி மயிலர்

**செய்தி :- புத்தி கெட்ட பிக்குகள் குழுவினரே சமஷ்டிக்கு ஆதரவு தெரிவிக்கின்றனர் என்கிறார் அத்தங்கனே ரத்னபால தேரர்.**

**மயிலர் :-** அடடா எவ்வளவு பெரிய கண்டுபிடிப்பை இந்த புத்தியுள்ள பிக்கு கண்டுபிடித் திருக்கிறார். இந்த நாட்டில் புத்தியில்லாத பிக்குகள் ஏதோ நல்லதைச் சொல்லுகி றார்கள் போல இருக்கு... இந்தப் புத்தி மிக்க பிக்குகள் புத்தரையே அவமதிக் கின்றனர்... நாடுவேண்டாமென்று ஆட்சியைத் துறந்து ஆன்மஞானம் பெற்றவர் புத்தர். நாளைக்கு இந்த நாட்டைக்காக்கும் பிக்குகள் அவரையும் புத்தி கெட்ட புத்தர் என்று சொன்னாலும் சொல்லுவார்கள்... என்ன நான் சொல்லுறது பிழையே பாருங்கோ.

**செய்தி :- தப்பியோடிய படையினரின் எண்ணிக்கை சமாதான காலத்திலேயே அதிகம்.**

**மயிலர் :-** பிக்குகள் நாட்டைப்பாதுகாக்க வெளிக்கிட்ட பிறகு தங்களுக்கு என்ன வேலை யென்று நினைத்து விட்டார்கள் போலும்.... பாதுகாப்புப் படையில் இருப்பதை விடவும் பாதாள உலகத்தினருடன் இணைவது இன்னும் லாபகரமானது என்று எண்ணியிருக்கவும் கூடும். படையில் சிப்பாயாகவோ அதிகாரியாகவோ தான் இருக்கலாம். ஆனால் பாதாள உலகத்தவராக இருந்தால் சனாதிபதி பாதுகாப்பு பிரிவில் உயர் செல்வாகக்குடன் கூடிய வசதியான வாழ்க்கையும் கிடைக்கும் என்றும் எண்ணியிருக்கலாம்.... எதுவானாலும்.... விரட்டாமலே ஓடுகிறார்கள். அதுதான் வினோதம் பாருங்கோ.... அப்ப ஓடுகிறவர்களை தேடி ஓடிப்பிடித்து விளையாடப் போகினம் என்று சொல்லுங்கோவன்.

**செய்தி :- நாடு பிரிக்கப்படுவதைத் தடுக்க தலதாமாளிகையில் விசேட பூசை பௌத்த பிக்குகள் நடத்துகின்றனர்.**

**மயிலர் :-** அட.... எந்தச் செய்தியை எடுத்தாலும் பிக்குகள் பற்றிய செய்தியாத்தான் இருக்கு....இப்ப சிறிலங்காவிலை மிகமிக முக்கிய பிரமுகர்களாக அவை தான் இருக்கினம்... அது கிடக்கட்டும்.... பிரச்சினைக்கு நியாயமான தீர்வு காணவும் விடமாட்டினம், நாடு பிரிவதையும் விடமாட்டினம் தம்மபதத்தில் இது எந்தப்பக்கம் கூறப்பட்டுள்ள தத்துவம் எண்டே தெரியேல்லை... அதுசரி பூசை நடத்தினா மட்டும் ஆசை நிறைவேறிவிடுமோ.....?

**செய்தி :- சமாதான முயற்சியை மிக ஆர்வத்துடன் அமெரிக்கா அவதானித்து வருகிறது என்கிறார் அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ்.**

**மயிலர் :-** ஆள் அஷ்டாவதானி தான் பாருங்கோ... ஈராக்கிலை பிரச்சினை வட கொரியாவில குழப்பம், ஐரோப்பாவிலை எதிர்ப்பு. ஈரான் மீது கோபம், துருக்கி மீது கோபம், பின்லேடனை நினைத்துப் பயம், ஆசியா மீது கவனம்... இதுகளுக்கிடையிலை இலங்கைமீதும் அவதானம்... ஆர்வத்தோடு அவதானிக்கிறோம், உன்னிப்பாகக் கவனிக்கிறோம் என்று ஆரும் சொன்னால் அடிவயித்தை கலக்குது பாருங்கோ... உப்பிடித்தானே முந்தி இந்தியாவும் சொல்லிக் கொண்டிருந்துவிட்டு பிறகு என்ன செய்தது எண்டு தெரியும் தானே....!

எக்காலத்திலும் புதுமையாய்ப் பொலிவதே, கலைப்படைப்பின் சிறப்புக்குச் சான்று. - ரால்ஃப் வால்டோ எமெர்ஸன்

# யுத்த எச்சங்கள் வரலாற்றுப் பொருளாக வியாபாரிகள் அனுமதிப்பார்களா?

**பு**ல் நுணியின் பனி முத்துக்கள் கரைந்து விலகா ஒரு வைகறைப் பொழுது அது. மூடு பனியை ஊடுருவி சூரியக்கதிர்கள் மண்ணை முத்தமிட சிரமப்பட்டன. எனினும் கிளிநொச்சிப் பாடசாலைகளின் மாணவர்கள் சிலர் பனியையும் குளிரையும் பொருட்படுத்தாது சிறிலங்கா உதைபந்தாட்ட சம்மேளனத்தின் போட்டி ஒன்றிற்காகவும், ஜேர்மனியில் இருந்து வருகை தரவுள்ள பாடசாலை மாணவர் அணி ஒன்றுடனான போட்டி ஒன்றிற்காகவும் தம்மைத் தயார்படுத்திக் கொண்டிருந்தனர்.

இலங்கை மட்ட போட்டிகளிலும், வெளிநாட்டு அணிகளுடன் போட்டியிடுவதற்கான வாய்ப்புக்களை கிளிநொச்சி, முல்லைத்தீவு மாணவர்கள் இப்போது தான் வாய்க்கப் பெற்றுள்ளனர். இதன் விளைவே கடந்த வருட அகில இலங்கைப் போட்டியில் கிளிநொச்சி இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவிகள் உடற்திறன் காட்சிப் போட்டியில் முதலிடத் தைப்பெற்று தங்கப்பதக்கத்தை சுவீகரித்துக்கொண்டது. இதே போன்று ஆண்களுக்கான போட்டியில் உருத்திரபுரம் மகாவித் தியாலயம், கொக்கிளாய் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை என்பன முறையே ஐந்தாம், ஆறாம் இடங்களையும் பெற்றமையுமாகும்.

பயிற்சி நடந்து கொண்டிருக்கும் போது தமிழீழ காவல் துறையினர் மைதானத்தில் பாதுகாப்பு எற்பாடுகளை செய்யத் தொடங்கினர். விளையாட்டு மைதானமாகவும், உலங்கு வானூர்தி இறங்கு தளமாகவும், பயன்படும் கிளிநொச்சி பொது மைதானத்துக்கு கொழும்பில் இருந்து வருகைதரவுள்ள இலங்கை விமானப்படையின் உலங்கு வானூர்தியின் வருகைக்கு காவல் துறையினரின் பாதுகாப்பு ஏற்பாடுகள் கட்டியம் கூறின.

உள்ளூர் பத்திரிகையாளர்கள், யாழ்ப்பாண, வவுனியாப் பத்திரிகையாளர்கள், விருந்தினர் களை வரவேற்கும் புலிகளின் பிரமுகர்கள், என எதிர்பார்ப்புடன் கூட்டம் சேரத் தொடங்கியது.

ஒரு இளம் ஐரோப்பிய பெண் ஒருவர் ஈருருளியில் வந்திறங்கினார். கம்பீரமான தோற்றமுடைய அவருடைய தோள் பட்டையில் "ஆன்.எஸ்.எல்.எம்.எம்." எனும் அடையாளப் பட்டியிருந்தது. மைதானத்துள் நடந்து திரிந்தவர் குனிந்து நிலத்தில் இருந்து எதையோ பொறுக்கத்தொடங்கினார். படிப்படியாக, எல்லோருடைய கவனமும் அவரிடம் திரும்பியது. 'சந்தேசிய' செய்தியாளர் ரத்துகமகே அவரிடம் கேட்ட போது தன்னுடைய கைகளை விரித்துக்காட்டினார். பல ஆண்டுகளாக மண்ணுள் கிடந்த வெற்றுத் துப்பாக்கி ரவைக்கோதுகள். ஆண்டுகள் ஆனதால் அவை துருப்பிடித்து சிதையத்தொடங்கியிருந்தது. ஓயாத அலைகள் - இரண்டிற்கும் முன்பு இந்த மைதானம் சிறிலங்காப் படையினரின் சூட்டுப்பயிற்சித்திடலாக இருந்தது இதற்கென அமைக்கப்பட்டிருந்த மண்ணணை கடந்த வருடம் முற்றாக அகற்றப்பட்டு, மைதானத்தில் இருந்த காப்பரண்களும் மூடப்பட்டு சமப்படுத்தப்பட்டது. "இவை வரலாற்றின் எச்சங்கள். இவை மீண்டும் திரும்பா வரலாறாகவே இருக்க வேண்டும் என விரும்புகிறோம்" என்றார் அனா. கேள்விக்குறியுடன் அவருடைய மனம் இதனை திருப்பி கூறியதை முகம் வெளிப்படுத்திற்று.

அன்று வருகைதந்தவர்கள், போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் ரெலிவ்சன், மற்றும் முன்னைய தலைவர் ஜெனரல் புறூவ் ஹொவ்டே ஆகியோரே. ஒரு வருடப் பணிமுடிவில் புதியவர் பொறுப்பேற்றுக்கொள்கிறார். புரிந்துணர்வு உடன்படிக்கைமட்டும் , செயல் வடிவத்தைச் சந்திக்காது உடன் படிக்கையாகவே இன்னும் இருக்கிறது. யுத்த நிறுத்தமோ, பல்வேறு தடவைகள் உரசல்களில் இருந்தும் தீப்பிடிக்காது தன்னைக்காப்பாற்றி வருகிறது.

கடந்தமாத இறுதியில் திருகோணமலை குச்சவெளி கல்லம் பற்றையில் தொடக்கப்பட இருந்த நாலாம் கட்ட ஈழப்போர், புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறையினரின் பொறுப்புணர்வு நிறைந்த நடவடிக்கையால் தவிர்க்கப்பட்டுவிட்டது. புலிகளின் பூரணகட்டுப் பாட்டுப் பகுதியில் இருந்த கல்லம் பற்றைப் பகுதியூடான பொதுமக்களின் போக்குவரத்து போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் வேண்டுகைக்கு அமைவாகவே புலிகளினால் அனுமதிக்கப்பட்டது.

இப்பகுதிக்குள் அத்துமீறி புகுந்து கொண்ட கடற்படையினர் தமது நாளாந்த கடமைகளில் ஈடுபட்டிருந்த புலிகளை சுற்றி வளைத்ததும், அவர்களை புலிகள் சுற்றி வளைத்ததுமான சம்பவம் இடம்பெற்றது. இந்த சம்பவம் இடம் பெற்றவேளையில் இலங்கை கடற்படைத் தளபதி, தயாசந்தகிரி, இராணு வத்தளபதி ஜெனரல் பலகல்ல, விமானப் படைத்தளபதி டொனால்ட்பெரேரா ஆகியோர் யாழ்ப் பாணத்தில் இருந்தனர். பலாலி இராணுவக் கட்டளை அறையில் இருந்தே மூவரும் யுத்தத்தை முனைப்பாக்கு வதற்கான கட்டளைகளைப் பிறப்பித்துள்ளனர்.



இவர்களுடைய கட்டளைகளின் அடிப்படையில் இரண்டு இராணுவக்கொமாண்டோ அணிகள் குச்ச வெளிக்கு நகர்த்தப்பட கட்டளையிடப்பட்டிருந்தது. திருகோண மலையில் இருந்து ஆட்லறிகளும், குச்சவெளிக்கு எடுத்துவரப்பட்டு, முழு அளவிலான தாக்குதலுக்கு தயார் படுத்தப்பட்டிருந்தது. இரண்டு 'பெல்' ரக உலங்கு வானூர்திகள் இராணுவக் கொமாண்டோக்களை ஏற்றியிறக்குவதற்கு விமானப்படைத் தளபதியால் தயார்படுத்தப்பட்டிருந்து.

அது மட்டுமல்ல இந்த ஏழு விடுதலைப்புலிகளையும், கைது செய்யத்தவறியமை இன்றைய ஐக்கியதேசிய முன்னணி அரசின் பொறுப்பற்ற நிலைப்பாடு எனக்குற்றம் சாட்டியது ஜே.வி.பி. அது மட்டுமல்ல, திருகோணமலையின் கரையில் இருந்து இருநூற்று இருபது கடல்மைல் தொலைவில்

**அ. அன்ரன் அன்பழகன்.**

சர்வதேச கடற்பரப்பில் வைத்து விடுதலைப் புலிகளின் நடுத்தர கப்பல் ஒன்று பதினொரு போராளிகளுடன் மூழ்கடிக்கப்பட்டது. இதன போது போர் நிறுத்த கண்காணிப்பு குழுவினர் அழைத்துச்செல்லப்படவில்லை என்பதுடன், பொறுப்பற்ற அரசியல் பீடங்களின் மனோ பாவத்தையும், சமாதான சூழலை சிதறடிக்க முனையும் பிராந்திய வல்லரசொன்றின் ஓநாய்த்தனத்தையும் உலகின்முன் உரித்துக் காட்டியுள்ளது.

படைத்தளபதிகள் இன்னும் யுத்தவியாபாரிகளாகவே (War Mongers) இருக்க பேரினவாதிகளோ இனவாத உடுக்குகளை இன்னும் வேகமாக அடித்துக் கொண்டிருக்கிறார்கள். சமாதானம் பற்றி பல்வேறு குழப்பமான கருத்துக்கள் இப்போது சிங்கள மக்களிடையே பரப்பப்பட்டு வரப்படுகிறது. யுத்தத்தின் எச்சங்கள் மீண்டும் திரும்பாவரலாறாக வேண்டும் எனில், யுத்த வியாபாரிகளும், பேரினவாதிகளும், சிறிலங்கா மக்களால் ஓரம் கட்டப்பட வேண்டும்.

அதுமட்டுமல்ல சர்வதேச சமூகத்தாலும் புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

"தமிழ் மக்களைப் பொறுத்தவரை, விடுதலைப் புலிக ளும், மக்களும் சமாதானத்துக்கான பக்கத்தில் ஓரணியிலேயே நிற்கின்றனர்"

இதுவே தமிழ் மக்களின் பிள வுகள் அற்ற ஒரு அரசியல் அடித் தளமாக விடுதலைப்புலிகள் அமைப்பு உள்ளது என்பதன் சாட்சியமாகும். புலிகள் இல் லாத சமாதானப் பேச்சுவார்த்தை என்பது அபத்த மானது.

இப்போது நம்மிடையே ஒரு புதிய சந்தேகம் விதைக்கப்பட்டுவிட்டது. பலஸ்தீனத்தி லும், கொலம் பியாவிலும் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம் போன்று ஒரு சண்டை தவிர்ப்பு ஒப்பந்தமா. இலங்கையில் செய்யபட்டுள்ளது. பலஸ்தீனத்திலும், கொலம் பியாவிலும செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள். இஸ்ரவேலையும் ஊழல் நிறைந்த கொலம்பிய அரசையும் பலங்கொள்ள வைத்தது. கடந்த காலங்களைப் போலவே சிறிலங்கா அரசு பலவீனப்படுகிற போதெல்லாம் அதனை வலுப்படுத்தும் ஊடகமாக இந்த ஒப்பந்தமும் ஆகிவிடுமோ எனும் கேள்வி எழுகிறது. தமிழ் மக்களின் பிரச்சினையின் அடித்தளங்களை அணுகவேண்டும் என்ற அழுத்தத்தைக் கொடுக்க ஏன் சர்வதேச சமூகம் முன்வரவில்லை எனும் கேள்வியும் எழுகிறது. அடிக்கடி வீட்டுக்காவலில் வைக்கப் படுகின்ற பலஸ்தீனத்தின் யசிர் அரபாத்தின் நிலை அல்லது, ஐந்து வருட யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் பின் தமது கட்டுப்பாட்டு நிலங்களின் பெரும்பகுதியை இழந்துவிட்ட கொலம்பிய FARC புரட்சிகர அமைப்பின் நிலை எமக்கு ஏற்படக்கூடாது. "ஜெரிக்கோ என்கின்ற ஒரு எலும்புத்துண்டை விட்டுச் சென்றார்கள், கூரைகள் அற்ற இடிந்து போன பலஸ்தீனம் என்கின்ற ஹோட்டலைத் தந்தார்கள்" என கோபமுற்ற நிசார் கம்பானி என்கின்ற பலஸ்தீன அறிஞனின் "கோபக்காரனின் செய்யுள்" போன்ற சூரல்கள் எமது நிலத்தில் இருந்து எழுப்பக்கூடாது.

அகவயமான சுய நிர்ணைய உரிமையுடன் கூடிய தமிழர் தாயகத்தில் சமத்துவமான வாழ்வுடைய சமஷ்டிக் குடியரசு, இல்லாது போனால் புறவயமான சுயநிர்ணய உரிமையுடன் தமிழர் தனியரசு இவற்றில் எது என்பதை தீர்மானிக்கும் பொறுப்பு இப்போ சிங்கள மக்களிடம் கையளிக்கப்பட்டுவிட்டதாக கூறுகிறார் விடுதலைப் புலிகளின் மதியுரைஞ்ஞர் கலாநிதி. அன்ரன் பாலசிங்கம் அவர்கள். மீண்டும் , யுத்த வியாபாரிகளின் கரங்களை பலப்படுத்துவார்களா இல்லையா என்பதே இலங்கைத்தீவு வரலாற்றின் திருப்பு முனையாக அமையப்போகிறது.

# பதிவுகள் முடிந்துவிட்டன! உதவிகள் எப்போது வரும்?



**பு**ரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு ஓராண்டு பூர்த்தியாகி இரண்டாம் ஆண்டில் அது பிரவேசிக்கிறதாகப்பெருமை பேசப்படுகிறது. வன்னியில் குறிப்பாக கிளி நொச்சி மாவட்டத்தில் போரினால் இடம் பெயர்ந்த மக்கள் தங்கள் சொந்த இடங்களில் குடியமரத் தொடங்கி இரண்டாண்டுகளா கின்றன. இம் மாவட்டத்தில் மொத்தம் 27374 குடும்பங்கள் இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்தன. செயலக புள்ளி விபரங்களின் படி 31.12.2002 வரை 14269 குடும்பங்கள் மீளக்குடிய மர்ந்துள்ளன. இன்று வரை நூற்றுக்கணக்கான குடும்பங்கள் சொந்த வாழ்விடங்களுக்கு வந்துள்ளன.

சத்ஜெய இராணுவ நடவடிக்கையின் போதே அதிகளவு மக்கள் இடம்பெயர நேர்ந்தது. தொடர்ந்து அவ்வப்போது நிகழ்ந்த போர் நடவடிக்கைகளின் போதும் மக்கள் தத்தம் வாழ்விடங்களிலிருந்து வெளியேறினர். சத்ஜெயவிலிருந்து பார்த்தால் இடம் பெயர்ந்து வாழ்ந்த சுமார் ஆறாண்டு காலமும் கொடுமை யானதே. இந்த ஆறாண்டு காலத்திலும் மண்ணைமட்டுமே நம்பி வாழ்ந்த மக்களின் காணிகளும் வீடுகளும் வயல்நிலங்களும் அழிந்துபோயின. நோயிலும் வறுமையிலும் காடுகளில் அழிந்த காலம் மீளவும் சொந்த வாழ்விடங்கள் அடர்ந்த காடுகளாயிருந்தன. வாழ்வளித்த தென்னையும் மாவும் பலாவும் அழிந்து அந்த இடங்களை முட்பற்றைகள் நிரப்பியிருந்தன. உயிர்கொல்லும் மிதிவெடிகளும் நச்சுப்பாம் புகளும் அவ்விடங்களை ஆக்கிரமித்திருந்தன. வியர்வையும் இரத்தமும் சிந்தி மீண்டும் நிலம் துப்புரவாக்கப்பட்டு அங்கிருந்த காட்டு மரங்களைக்கொண்ட கொட்டில்களை அமைத்து மக்கள் அதில் குடியமர்ந் துள்ளனர். இரண்டாண்டுகளாகியும் அவர் களுக்கு எந்தவொரு உதவியும் கிடைக்கப் பெறாமை சோகமானதுதான். மீள்குடியமர்ந்த அந்த மக்களுக்கான உடனடித்தேவைக் காகவேனும்எவ்வித உதவிகளும் வழங்கப்படவில்லை. அவ்வாறு வழங்குவதற்கான எந்தவொரு வேலைத்திட்டமும் அரச நிர்வாகத்தினால் மேற்கொள்ளப்படவுமில்லை. ஏனெனில் 2002 யூலைமாதம் மீளக் குடியமர்ந்தோருக்கென அனுப்பி வைக்கப்பட்ட ஒருதொகைப்பணம் பகிர்ந்தளிக் கப்படாமல்கிடந்தது. நவம்பர் மாதமே அப்பணம் 1889 குடும்பங்களுக்கு 15000 ரூபாவீதம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

இப்போது மீளக்குடியமர்ந்தோருக்கான உதவியாக முதற்கட்டமாக 25000 ரூபாவும் அடுத்தகட்டம் வீடமைக்கவென 75000 ரூபாவும் வழங்கப்பட முடிவு செய்திருப்பதாகவும் கூறப்படுகிறது.பதிவுகள்.. பதிவுகள் என வேலைகள் நடைபெற்றுக்

**வேனிலவன்**

கொண்டிருக்கின்றனவே தவிர உதவிகள் கைக்கெட்டுவது எப்போது என்பதுதான் தெரியாமலுள்ளது.

இப்போது பதிவுகள் யாவும் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டு பணவருகைக்காகக் காத்திருப்பதாக செயலகம் கூறுகின்றது.

இம்மக்களின் இழப்புக்கள் தனியே உடமைகள் ரீதியானவை மட்டுமல்ல அரசினால் வழங்கப்படவுள்ளதாக கூறப்படும் நிவாரணம் அவர்களின் எல்லா இழப்புக்களையும் ஈடுசெய்ய வல்லனவல்ல. இயல்பு வாழ்க்கை என்பது ஏற்பட அடிப்படையானவை என்ன என்பது அதற்கென முதல் செய்ய வேண்டிய பணிகள் எவை என்பதும் இன்னும் அடையாளம் காணப்பட்டதாக கருதமுடியவில்லை.

கிளிநொச்சியில் 90 வீதத்திற்கு மேல் மண்குடிசைகளே மக்களின் உறைவிடங்களாகக்காணப்படு கின்றன.மழைக்கு ஒழுகாத கூரைகளும், வெள்ளத்தால் அள்ளிச் செல்லாத சுவர்களும் கொண்ட ஒழுங்கான சிறு வீடு ஒன்றை ஒவ்வொரு குடும்பமும் அமைத்துக்கொள்வதற்கான வேலைத்திட்டமொன்றை முதலில் மேற்கொள்ளவேண்டிய அவசியம் உள்ளது. பாதைகளும் பயணங்களும் தேவையான வையே! அதற்கு முதல் தேவையானது இருப்பிடம்.

தற்போது உலக நாடுகளின் பங்களிப்போடு வரப்போகும் உதவிகளின் மூலம் கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி புனர்வாழ்வு புனரமைப்பு நடவடிக்கைகளின் போது மக்களுக்கான இருப்பிட வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதில் முதலிடம் கொடுக்கப்பட வேண்டும் என்பதே இம்மண் ணில் வாழும் மக்களின் முதல் எதிர்பார்ப்பாகும்.

# நறுக்கென...

செங்குட்டுவன்

## பொ.ஐ. முன்னணியானது தே.ஐ. கூட்டணியாகின்றது



சிறிலங்காவில் மற்றொரு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற் கொள்வதற்கான தீவிரமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத்தெரிகிறது.

அதாவது சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும் ஜே.வி. பிக்கும் இடையிலான, சுய அபிலாஷை இலக்குகளை தனித்தனியாக இரு தரப்பினரும் கொண்டுள்ள - உடன் பாடொன்றை மேற் கொள்வதில் இருதரப்பினரும் ஒரு புரிந்துணர்வுக்கு வர முயன்று கொண்டிருப்பதைத் தான் கூறுகின்றோம்.

ஏற்கனவே பொதுசன ஐக்கிய முன்னணி என்ற பெயரில் நீண்ட காலமாகவே ஒரு புரிந்துணர்வின் அடிப்படையில் இடதுசாரிக்கட்சிகளுடனும் ஏனையசில உதிரிக்கட்சிகளுடனும் சிறிலங்கா சுதந்திரக்கட்சி வைத்துள்ள கூட்டு ஜே.வி.பி.யின் நுழைவால் குழப்பத்திற்குள்ளாக்கியுள்ளது.

இந்தக் குழப்பத்தை ஏற்படுத்தியதன் மூலம் ஜே.வி.பி தனது முதலாவது இலக்கை ஓரளவு எட்டியுள்ளது என்றே கூறமுடியும்.

ஜே.வி.பி யுடனான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் புதிய நெருக்கமானது அக்கட்சியின் சிரேஷ்ட தலைவர்களையும், ஏனைய இடதுசாரித்தலைமைகளையும் அதிருப்தியடையவைத்துள்ளதுடன், கட்சிக்குள் முரண்பாடுகளையும் ஏற்படுத்தியுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் எதிர்காலத் தலைமைத்து வத்திற்கான போட்டி பொ.ஐ.முன்னணிக் கூட்டமைப்பை உடைவு நிலைக்குக்கொண்டு போகும் நிலைக்கு இட்டுச்சென்றுள்ளது.

ஜே.வி.பியினர் தமது அரசியல் இலக்குகளை தனித்து நின்று எட்டமுடியாத நிலையில் சி.ல.சு. கட்சியைத் தம்வசப்படுத்தும் நோக்குடன் அநுரா பண்டாரநாயக்கா, மங்கள சமரவீர போன்றோரை கருவிகளாகப் பயன்படுத்துவதின் மூலம் கணிசமான அளவு வெற்றியைப்பெற்றுள்ளார்கள்.

ஜே.வி.பியை முழுதாக விழுங்கவோ, விழுங்கிய அளவுடன் கக்கவோ முடியாது இக்கட்டான நிலை சந்திரிகாவுக்கு...

அநுராவுக்கு கட்சிக் குள்ளோ, பொ.ஐ. முன்னணியிலோ செல்வாக்கு இல்லாத நிலையில், ஜே.வி.பியினரின் ஆதரவுத்தளத்தை உதாசீனம் செய்ய முடியாத நிலையேயுள்ளது.


இதேவேளை பொ.ஐ. முன்னணியின் பேச்சாளர்களில் ஒருவரான சரத் அமுனுகம சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கும்-ஜே.வி. பிக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்பாடு தொடர்பான நகல் அறிக்கை தற்போது தயாராகி வருவதாகத் தெரிவித்துள்ளார். அது மட்டுமல்ல இந்தக்கூட்டு தவிர்க்கமுடியாதது என்றும் கூறியுள்ளார்.

இதேவேளை பொ.ஐ முன்னணி இனிமேல் தேசிய ஐக்கிய கூட்டணியாக உருமாறும் என்ற செய்தியும் வெளியா கியுள்ளது.

ஆகவே பொ.ஐ. முன்னணி தனது இறுதி மூச்சுக்கான காலத்தைஎதிர்நோக்கி யுள்ளது எனத்தெரிகிறது.

ஆர் என்ன சொன்னாலும் எப்படி எதிர்த்தாலும் சி.ல.சு.கட்சி-ஜே.வி.பி புரிந்துணர்வு உடன்பாடு ஏற்படுவது உறுதி என சரத் அமுனுகம கூறியது இதனை உறுதி ப்படுத்துவ தாகவே உள்ளது என்ன செய்வது....கெடுகுடி சொற்கேளாது....

## தகுதியான பாதுகாப்பு அமைச்சர்...?



சிங்கள ஊடகங்களாலேயே 'கோமாளி இளவரசர்' என வர்ணிக்கப்படுவர் அநுராபண்டாரநாயக்க

அவரது தோற்றமும் செயல்களும் மட்டுமல்ல அண் மைக்காலமாக அவரது பேச்சுக்களும் கூட கோமாளித்தனமாகவே உள்ளது.

அதுவும் சனாதிபதி சந்திரிகாவின் ஆலோசகராக பதவி யேற்றபின்னர் அவரது அறிக்கைகள் அனைத்தும் கோமாளித் தனமாக மட்டுமல்ல மற்றவர்களை ஏமாளிகளாக்கும் தன்மைக ளைக் கொண்டவையாகவும் உள்ளன.

இது பண்டாரநாயக்க குடும்பப்பாரம்பரியம்தான்....

முன்னர் இவர் ஐ.தே. கட்சியில் இருந்தபோது, முல்லைத்தீவு இராணுவமுகாம் விடுதலைப்புலிகளால் தாக்கியளிக்கப்பட்ட வேளையில் அவரது மாமனாரும் அப்போ தைய பிரதிப் பாதுகாப்பு அமைச்சரான- கொலைக்குற்றங்களுக்காக இப்போது சிறைவாசியாக இருக்கும் அந்த அரசியல் ஜெனரலான ரத்வத்தையை நோக்கி

'யாழ்ப்பாணத்தைப் பிடித்ததற்காக சனாதிபதி உங்களுக்கு ஜெனரல் பதவியை வழங்கினார். முல்லைத்தீவைக் கோட்டைவிட்டதற்காக பிரபாகரன் உங்களை 'லான்ஸ் கோப்ரல்' பதவிக்கு இறக்கிவைத்துள்ளார்' என்று கூறினார்.

இப்போது பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவை நோக்கி... இல்லை இல்லை தாக்கிப் பேசுகையில்... 'திலக்மாரப்பனவுக்கு பாதுகாப்பு அமைச்சராக என்ன தகுதி உள்ளது. துப்பாக்கியால் ஒரு ரவையைக் கூட சுட்ட அனுபவம் அவருக்கு உள் ளதா?' என்று கேட்டுள்ளார்.

சரியான கேள்விதான்.

ஆனால் அவர் 'பாதுகாப்புத்துறைபற்றி எந்த அனுபவமும் அற்ற மாரப்பனவை பதவி நீக்கிவிட்டு, சனாதிபதி பாதுகாப்புத்துறையைப் பொறுப்பேற்கவேண்டு மென்றும் அப்போது கூறியுள்ளதுதான் அதிக கோமாளித்தனமானது.

மிஸ்ரர் கோமாளி இளவரசரே... உங்களிடம் ஒரு கேள்வி.

'பாதுகாப்பு அமைச்சராக இருக்க மாரப்பனவுக்கு தகுதி இல்லாமல் இருக்க லாம் . ஆனால், முப்படைத் தளபதியாக இருக்க உங்களின் அருமை அக்காவுக்கு அதாவது சனாதிபதிக்கு என்ன தகுதியுள்ளதாம்... எத்தனை போர்க்கள அனுபவ முள்ளதாம்... எத்தனை பேரை துப்பாக்கியால் சுட்ட அனுபவமுள்ளதாம் ஒரு வேளை ஆயிரக்கணக்கிலை தமிழ் மக்களை பால்வேறுபாடு வயது வேறுபாடு பாராமல் கொன் றாழிக்க ஆயுதப்படைகளுக்கு வெறும் அதிகார ஆணவத்தையும் பயன்படுத்தி கட்டளை யிட்ட அனுபவமிருக்கலாம்... அவ்வளவுதான்'

அதுசரி பாதுகாப்பு அமைச்சர் துப்பாக்கிதாரியாகத்தான்- துப்பாக்கி ரவையை பயன்படுத்திய அனுபவம் உள்ளவராகத்தான் இருக்கவேண்டுமென்றால் அநுரா அவர்களே... உங்களின் ஜே.வி.பி தோழர்களில் ஒருவரை சிபார்சு செய்து ஆலோசனை கூறலாமே... அவர்களுக்கு 'விஜயகுமாரணதுங்க' உட்பட பலரைக் கொல்லத் துப்பாக்கி ரவைகளைப்பயன்படுத்திய அனுபவம் உண்டல்லவா? "சனாதிபதியும் அதை ஏற்றுக் கொள்வா... இப்ப அவர்கள் தானே அவரின் நம்பிக்கைக்குரிய கூட்டாளிகள்...."

## இனவாத பகைப்புலமும் சமாதானப் புறாவும்...



சிறிலங்காவின் இரட்டை ஆட்சியின் முரண்நிலை அணுகு முறைகள் சமாதான சூழ்நிலையின் எதிர் காலம் குறித்து சந்தேகங் களை எழுப்பத் தொடங்கியுள்ளது.

ஒவ்வொரு சமாதானப் பேச்சுவார்த்தை நடவடிக்கைகளின் போதும் பரபரப்பாக, பெருமெடுப்பில், ஆர்ப்பாட்ட மிக்க பிரச் சாரங்களுடன் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கவும், அதன் மூலம் 'வங்குரோத்து' நிலையில் உள்ள சிங்கள தேசத்தின் பொரு ளாதாரத்தை மீட்டெடுக்க 'நிதி' பிச்சைகளை வாங்கிக் குவிக்கும் செயற்பாடுகளைத் தீவிரப்படுத்தவுமே சிறிலங்காவின் அரசுகள் முயன்று வந்துள்ளன.

நிதிவாய்ப்புக்களுக்கான வாக்குறுதிகளை புனர்வாழ்வு, புனரமைப்பு என்ற அடிப்படையில் சர்வதேச சமூகத்திடமிருந்து பெற்றுக்கொண்டதும் மெல்ல மெல்ல தமது பேரினவாத சுபாவத்தை வெளிப்படுத்தி, விடுதலைப்புலிகளையும், தமிழ் மக்களையும், அவர்களின் சமாதானம் தொடர்பான விசுவாசமான எதிர்பார்ப்புக்களையும் கொச்சைப்படுத்தி 'பேய்க்காட்டும்' தமது அரசியல் பாரம்பரியத்தை தொடர்ந்தமை ஒரு தொடர்ச்சியான வரலாறாகவே நிகழ்ந்துவந்துள்ளது.

பேச்சுவார்த்தைகளின் முறிவுகளுக்கு சிறிலங்கா அரசாட்சியாளர்களின் இனவாத அணுகுமுறைகளே, நியாயமான அரசியல் தீர்வெதையும் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு முன்வைக்கத் திராணியோ, விருப்பமோ அற்ற தன்மைகளே, காரணமாக இருந்துவந்துள்ள போதிலும் இறுதியில் மிகவும் கெட்டித்தனமாக விடுதலைப் புலிகளின் மேல் பழியைப் போடும் படலங்களே தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டும் வந்துள்ளது.

தற்போதைய பேச்சுவார்த்தைகள் சர்வதேச மட்டத்தில், உலக சமூகத்தின் கண்காணிப்பில் மேற்கொள்ளப்பட்டாலும் கூட பேரினவாதிகள் தம் இயல்பை மாற்றிக் கொள்ளும் தன்மை தென்படவேயில்லை.

சந்திரிகா ஒரு நாடகத்தின் கதாநாயகி

ரணில் அதே அரங்கில் நடைபெறும் மற்றொரு நாடகத்தின் நாயகன் இரு நாடகங்களினதும் பேசு பொருள் 'சமாதானம்' தான் ஆனால் அடிப்படைக் கருப்பொருள் 'பேரினவாதம்' மட்டுமே.

நாடகத்தின் பெயர்கள்- சமாதானத் தீர்வுப்பொதி, சமாதானத்திற்கான யுத்தம் சமாதானத் தீர்வை நோக்கி, யுத்தமற்ற சமாதானம், என மாறி மாறி வைத்துக் கொண்டாலும் கருப்பொருளின் தன்மைமாறியதே இல்லை.

இப்போது நடைபெறும் சமாதான நாடகத்தின் பெயர் 'நிரந்தர சமாதானம் நோக்கி' என ரணில் அரசால் பெயர் சூட்டப்பட்டாலும் கூட, தற்காலிக அமைதியைக்கூட தக்க வைக்கும் கருப்பொருள் அதில் இருப்பதாகத் தெரியவில்லை.

பிரசாரபலத்தில்- கவர்ச்சியில் ஓராண்டுக்கு மேலாக நாடகம் நடந்து வருகின்ற போதிலும் இந்த வெற்றியை தக்கவைக்க ரணில் அரசால் முயலுமா என்பது கேள்விக் குறியாகிவிட்டுள்ளது.

காலங்கடத்துதல் ஒரு பேரினவாதத் தந்திரோபாயம்.

ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளிடையேயான கருத்தியல் 'உடன்பாட்டில்' வெளிப் படையாகத்தோன்றும் 'சிநேகமுரண்பாடுகள்' இருதரப்பும் மாறி மாறிக் கையாளும் அரசியல் மூலோபாயமே....

இந்த நிலையில் சமாதானத்திற்கான குரல் வளையை பேரினவாதம் மீண்டும் தனது இயல்பான இலக்குடன் மெல்ல மெல்ல நெரிக்கத் தொடங்கியுள்ளது.... அதுவும் சமாதான கீதத்தை உரக்க உரக்கப் பாடியபடியே... தமிழ்மக்கள் மீதான, தமிழ்ப் போராளிகள் மீதான ஒடுக்கு முறையின் அவலக்குரல் வெளியே கேட்டுவிடாது வெகுநுட்டமான 'பின்னணி' ஆதரவு ஆரவாரங்களுடன்....


இந்நிலையில்-

தமது சொந்த மண்ணில் இயல்பு வாழ்வொன்றை இடிபாடுகளிடையேகூட வாழ அனுமதிக்க பின்வாங்கும் அரசும், அதற்கு ஆதரவு நல்கும், நியாயம் கற்பித்து உதவும் புறசக்திகளும், அவர்களுக்கான சுயாட்சி உரிமையை வழங்க முன்வருமா?

இனவாதக் கூண்டு திறக்கத் தொடங்கியுள்ளது...

அதனை சமாதானப் புறா அச்சத்துடன் பார்த்துக்கொண்டிருக்கிறது

## கடற்படையின் காடைத்தனத்தை நியாயப்படுத்தும் 'மாரப்பன'



விடுதலைப்புலிகளின் சரக்குக் கப்பலை சிறிலங்காவின் கடற்படையினர் சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து அநாகரிகமான முறையில் உலகின் பொதுவிதிகளைப் புறந்தள்ளித்தாக்கி அழித்ததைத் தொடர்ந்து சிங்களப் பேரினவாதிகள் மகிழ்ச்சியும் சுறுசுறுப்பும் அடைந்துள்ளனர்.

அந்தச் சம்பவத்தை நியாயப்படுத்தி கடற்படைக்கு அனுசரணையாக ஆதரவு அறிக்கை விடுவதிலும் அதற்கான உரிமையைக்கோருவதிலும் காட்டும் தீவிரம். சமாதான எதிர்ப்பா ளர்களிடம் மட்டுமல்லாது சமாதான ஆதரவுக் கோஷம் போடும் அரச தரப்பினரிடமும் தலை யெடுக்கத் தொடங்கியுள்ளது.

குறிப்பாக பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பன, உள்துறை அமைச்சர், ஜோன் அமரதுங்க, பாதுகாப்பு செயலர் ஒஸ்ரின் பெர்னாண்டோ போன்றோர் இச்சம்பவம் தொடர்பாக விடுத்துள்ள அறிக்கைகளில் கடற்படையினரின் காட்டு மிரண்டித்தனங்க ளைக் கண்டிக்காது அதனை அவர்களின் கடமைப் பொறுப்புடன் கூடிய நடவடிக்கை என நியாயப்படுத்த காரணங்களை உருவாக்கும் கண்ணியமற்ற அணுகுமுறைகளே தென் படுகின்றன.

குறிப்பிட்ட இரு அமைச்சர்களும் ஏற்கனவே நம்பிக்கையில்லாப் பிரேரணைகளை எதிர்கொண்டு தப்பியவர்கள். பாதுகாப்புத் துறையுடன் தொடர்பான பொறுப்புக்களைக் கொண்டவர்கள்.

தங்கள் மீதான நம்பிக்கையை அரச மட்டத்தில் உறுதிப்படுத்திக்கொள்வதுடன் தங்கள் அமைச்சுப் பதவிகளையும் பாதுகாத்துக்கொள்ளவேண்டிய அவசியமும் அவர்களுக்கு ஏற்பட்டுள்ளநிலையில் 'சுயசார்பு' நிலைப்பாடுகளில் நிலைகொண்டு ஆயுதப்படைகளுக்குச் சார்பாக அறிக்கைகளை விடவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகி யுள்ளனர்.

இது சமாதான நகர்வுகளை இடையூறு செய்ய முனையும் நடவடிக்கையாகவே உள்ளது.

சர்வதேச கடற்பரப்பில் வைத்து சிங்கள கடற்படையினரால் தாக்கி அழிக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் சரக்குக் கப்பலில் போர்த்தளபாடங்கள் இருந்தன என்ற கடற்படையினரின் கூற்றை ஆராயாது, அப்படியே ஏற்றுக்கொண்டு அத்தாக்குதலை நியாயப்படுத்தும் மாரப்பனவின் அறிக்கை அவரின் ஆழ்மனதில் அடைந்திருக்கும் பேரினவாத சார்பு சிந்தனையின் வெளிப்பாடேயாகும்.

இத்தனைக்கும் கடற்படையையோ அல்லது வேறெந்த ஆயுதப்படையையோ தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் அதிகாரவலு எதுவுமில்லாத ஒரு பொம்மை அமைச்சராகவே மாரப்பன இயங்கிவருவது அனைவருக்கும் தெரியும்.

அதிகார கடிவாளம் சந்திரிகாவின் கைகளிலேயே உள்ளது. எனவே சந்திரிகாவின் கட்டுப்பாட்டுக்குள் அவரின் அபிலாசைகளுக்கு இணங்க 'ஆமாசாமி' போடவேண்டிய நிலையே இவருக்கு உள்ளது. எனவே சந்திரிகாவின் அதிகார ஆணவத்தை போர் உணர்வு மிக்க நடவடிக்கைகளை நியாயப்படுத்தி பாதுகாக்கும் அமைச்சராகவே பாதுகாப்பு அமைச்சர் இருக்கிறார். இதுவே சமாதானத்திற்கான பெரும் அச்சுறுத்தலாகவும் வளர்ந்து வருகிறது.

அனைத்தும் மறையும், கலை மட்டும் நிலைத்து நின்று நமக்குக் கிட்டும். - ஆஸ்ட்டின்டாப்ஸன்.

# காற்றுள்ள போதே...!



சில மனிதர்கள் ஏனோ பட்டெனப் பதிந்து போகிறார்கள். சிலரோ காலம் காலமாய் பழகியும் கண்டு கொள்ளப்படாமல் காணாமலே போய்விடுகிறார்கள்.

சிலர் ஏனோ சட்டெனப் படிந்து போகிறார்கள். பழகாமலே சிலரை ஏனோ பழகியும் பிடிப்பதே இல்லை.

விசித்திரமான மனம்! அம்மையாரின் மனம் போல.

மனம்! அது என்ன? எங்கதான் இருக்கு? எனக்கும் தெரியாது. ஆனா அதுகின்ர விசித்திரமான இயல்புகளை நினைக்க விசித்திரமாய் இருக்கும்.

ஒருக்கா உலகத்திலேயே தான் தான் உயர்ந்தவன் போல அடையவேண்டிய பேற்றையெல்லாம் அடைந்து விட்டது போல; வாழ்க்கையின் அர்த்தங்கள் எல்லாம் அத்துப்படியானது போல; உலகமே அன்பு மயமானது போல எத்தனையோ ஆகாசங்கள் தழுவ ஆர்ப்பரிக்கிற மனம்! சிலபோது ஏனோ சிதிலமாகிப் போய்விடுகிறது.

சுதந்திரம் கிடைச்சு இத்தனை வருசங்கள்!-55 வருட நிறைவு! குடியரசு தினம்! குடிகள் எல்லாம் குழப்பத்தில! கொடிகள் மட்டும் குடியரசு தினம் எண்டு கும்மாளம் போடுது!

ஆக்கிரமிப்பு, இடப் பெயர்வு, அகதி வாழ்வு அவலம்.... சை... என்ன வாழ்கை!

சூனியமாய்! சூழச் சூழச் சூனியமாய்! எங்கும் ஏகாந்தமாய்! எல்லோரையும் ஒதுக்கப்பட்டது போல; எல்லாரையும் ஒதுக்கி விட்டது போலவும் எல்லாமே அநீதிகளாய் அர்த்தமற்றதாய் உலகமே மாயையாய் ஊழித் தாண்டவம் ஆடுவது போல.....

அந்தக் கணமே எல்லாத்தையும் உடைச்சுக் கொண்டு பறக்கோணும் போல; முடியாட்சி அந்தக்கணமே மடிந்து விடவேணும் போல... எத்தினை துடிப்புக்கள் துலங்கல்கள்

மழையைக் கண்ட மயில்கள் ஆனந்தக் கூத்தாடுவது போல ஆடும் மனம், ஏனோ கணங்களில் காற்றுப்போன பலூனாய் கருகிப்போன செடியாய்.... என்ன இது? எத்தினையோ தடவைகள் என்னையே கேட்டுப் போட்டன்... பேரனைப் போலவே ஒண்டுமாத் தெரியேல்ல!

என்ர தேடலுக்கு, தேவைக்கு விடை கிடைக்கும் வரை ஓயமாட்டன். ஓயவிடாது, 'அது' எப்பவும் புஸ்பவாணமாய் மேல வாறதும் பூந்திரியாய் பூத்துப் பூத்து பூபாளம் பாடுவதும், கணத்தில் அணைந்து முகாரிபாடுவதும் தினம் தினம் நிகழ்ந்து கொண்டிருக்கும்.

எல்லாம் வெறுத்துப் போனாலும் இந்தப் பேரனை மட்டும் பிடித்துப் போனது. அவன் கேள்வியாலேயே.

என்ன செய்தனிங்கள்? என்ன செய்து கொண்டிருக்கிறியள்? நான் எத்தனையோ தடவைகள் என்னையேகேட்டுக் கேட்டு விடைகாண முடியாமல் ரணமாகிப் கொண்டிருக்கும் கேள்வியை அவன் கேட்டபோது அவனில எனக்கேற்பட்ட பிடிப்பது.

அவன் கேட்ட கேள்விகள், 'கேட்கப்பட வேண்டியது! விடை காணப்படவேண்டியது.' ஆனா எனக்கே பதில் தெரியாத போது எப்பிடி நான் பதில் சொல்ல முடியும்.

வானம் பார்த்து விவசாயம் செய்யும் விவசாயிகள் போல என் வாழ்வு! என் கையில் இல்லை எண்டுறது என்னைப்போல அவனுக்கும் விளங்கேல்லப் போல.

எத்தினை உழைப்பு உழைச்சும் என்ன? வானம் கொட்ட முதலே வரம்புகட்டி உழுதுபண்படுத்தி நேராத நேர்த்திகள் எல்லாம் நேர்ந்து வானம் இறங்கிவர வசப்படுத்தி, வசப்பட்டு, விதவிதைச்சு, நாற்றுநட்டு, களைபிடுங்கி, களைநாசினி தெளித்து, கதிர்வெட்டி, கதிர்கூட்டி, சுமந்து அடிச்சுக் கட்டாய்கட்டி வீடு வருகிறவரைக்கும் எத்தினை உழைப்பு எத்தினை உலைப்பு!

விதைப்பவர் உவமை போல விதைத்த விதைகளில் சில வழியோரம் விழுந்து மிதிபட்டன. வானத்துப் பறவைகள் வந்து அவற்றை விழுங்கி விட்டன. வேறு சில விதைகள் பாறை மீது விழுந்தன. அவை முளைத்த பின் ஈரமில்லாததால் கருகிப்போயின. மற்றும் சில விதைகள் முட் செடிகளின் நடுவே விழுந்தன. கூடவே வளர்ந்த முட்செடிகள் அவற்றை நெருங்கி விட்டன. இன்னும் சில விதைகளோ நல்ல நிலத்தில் விழுந்தன. அவை நூறு மடங்கு விளைச்சலைத் கொடுத்தன.

பலவும் கடந்து நல்ல நிலத்தில் விழும் விதைக்கான உழைப்பும் எத்தினை தடவை உழைப்பு உழைப்பாய் வந்தது!

கதிர் முற்றி தலை சாய்த்தது சல சலக்கேக்க காலப் பொருத்தமற்று ஜே.வி.பிக் கூட்டுப் போல வானம் கவுண்டு கொட்டி பட்டினியாய், பரதேசியாய கழிந்து போன ஆண்டுகளும் நாலு நாள் முளையிலேயே இராணுவத் தலையீட்டால் ...பாதுகாப்புக்குழு கலைக்கப்பட்டது போல' நாலு வாட்டி நாயாய் பேயாய்ப் பெய்த மழையால நாசமாய்ப் போன ஆண்டுகளும் பச்சைப் பசேலென பட்டுக் கம்பளம் விரித்த மாதிரி பச்சைசாத்தின மாதிரி கிறங்கடிச்ச பயிர்கள் 5ம் கட்டப் பேச்சுத் துடங்கியதும் உயர்பாதுகாப்பு வலயப்பிரச்சினை தீராமல் சமாதான நம்பிக்கைகள் இழக்கப்பட்டுக் கொண்டிருப்பது போல பாவி மழை ஏய்க்க ஏய்க்க கருகிக் கருகிப் போன ஆண்டுகளும்....

பாழாய்ப்போன கால நிலை பொய்த்துப் போய் கதிகலங்கிய ஆண்டுகள் தான் அப்படியெண்டால் சாவு விளைச்சல் என்பார்களே அது போல' விளையோ விளை எண்டு விளைந்து எத்தின காலங்களில, கட்டின பெஞ்சாதியை நட்டாற்றில விட்டுட்டுப் போனவன் மாதிரி விட்டிட்டு வீதி வீதியா விந்தி விந்தித் திரிந்த விசர்பிடிச்ச ஆக்கிரமிப்புக் காலங்கள்......

இயற்கை தான் கசங்கிச் செண்டா மனிசனை மனுசனே கலைக்கிற சண்டித்தனத்தை என்னெண்டு சொல்லுறது......

எங்கட நிலம் எங்களுக்குச் சொந்தமில்லை. வந்தான் வரத்தானுகள் எல்லாம் வாய்க்கு வாய் கதைக்கிற கதை....

எனக்கு ஒண்டுமா விளங்கேல்ல... இயக்கர் நாகர் எண்ட எங்கட எச்சங்கள் எங்க....? இவனுகள் எங்க....?

உன்னானைத்தான் சொல்லுறன் உவையள ஒருக்கா என்ர மண்ணுக்கு வரச் சொல்லுங்கோ! எத்தினை தடங்கள்! எத்தினை எச்ச சொச்சங்கள்! இப்பவும் கிடக்கு!

புஸ்பரட்ணத்தாற்ற தொல்லியல் ஆராட்சிக் கட்டுரைகள் உவனுகளிட கண்ணுல படுறதில்லையே....

நாகதேவன் துறை, கல்முனை, கௌதாரிமுனை, ஸ்கந்தபுரம், பூநகரி... எண்டு எத்தினை இடங்களில தடங்கள்.....

எங்கட கொப்பன், கொப் பாட்டன், முப்பாட்டான் எண்டு முடிவேஇல்லாத மூத்த குடிகளின்ர கதை சொல்ல இவனுகள் இடையால வந்து நிண்டு ஏப்பம் விட்டம் கதை கதைக்கிறானுகள்.

எட்டிஉதைக்கிறஉதையிலஎட்டப்பானுகள் ஓடுறஓட்டத்தில எட்ட நிண்டு ஏமாளிக்கிற கோமாளிகள் வழிக்கு வருவினம்.

அண்டைக்கு அவன் கேட்ட கேள்வி என்னை எப்பிடி மாத்திப்போட்டுது 'மாற்றம்' என்ன 'மாற்றம்' நான் தான் 'கண்ணை மூடிக்கொண்டிருந்து' போட்டு 'கண்ணைத் திறந்திருக்கிறன்.

என்ன செய்தனியள்? என்ன செய்து கொண்டிருக்கிறியள்? என்ர பேரன் அரசியல் 2nd ஆண்டு மாணவன். எப்பிடியும் 'கிளாஸ் அடிச்ச' 'ஒணஸ்' ஆகிப்போட வேணும் எண்ட தவிப்பில இருந்தவன்.

சும்மா இருந்தா கிளாஸ் கிடைக்குமே....? ஒரு நிமிசத்தையும் வீணடிக்காதபடிப்பு!

அவனவன் போட்ட எந்தக் கத்தலும் அவன்ர காதில விழேல்ல விழேல்ல எண்டிறதை விட விழுத்தேல்ல.

B.Aயும், M.Aயும் உங்களைக் காப்பாற்றத்தான் போகுது! நெட்டித் தள்ளிக்கொண்டு வாறவனுக்கு B.A, M.A, MSC..... என்று பட்டத்தைக் காட்டுங்கோ பரவசமாய் அணைச்சுக் கொள்ளுவானுகள்.

உண்மை தான் 1995 மாபெரும் இடப்பெயர்வு! பலே அணைப்புத்தான். செம்மணியிலையும், செங்குருதிலையும் செம்மையான அணைப்பு.

அடிக்கடி சொன்ன அர்த்தங்கள் அரட்டல் அல்ல என்பது புரிய எத்தனை இழப்புக்கள் இடப்பெயர்வுகள்: இன்னல்கள்...

'அனுபவம் மாதிரி ஆசான் இருக்க முடியாது' தான்.

விவஸ்த்தையில்லாம காதில வாங்காம கண்டு கொள்ளாம பிரடிக்க கண்ணை வைச்சுக் கொண்டு இருந்து போட்டு ஓடின ஓட்டத்தில ஒரு நாள் இரண்டு நாளே... 07 வருடங்கள் போச்சு!

07 வருடங்களிலையும் எத்தினை இடங்கள்... வன்னி தானே! வனவாசம் தானே! எண்டது போய், வன்னிக்குள்ளையும் வாந்தி எடுப்பு..... காலம் காத்திரமான மருந்து தான்! கையாண்ட மருந்து தான்! கைப்புண்ணுக்கு கண்ணாடி தேவையில்லை, எண்டு கற்றுக் குடுத்த எங்களுக்கு கண்ணாடியிருந்தும் கைப்புண் தெரியவில்லையே!

சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தது போல! தானும் தன்ர படிப்புமா இருந்த பேரனை ஊதி உந்துதல் குடுத்துப் போட்டியள்.

நாகம் படம் எடுத்தா எல்லோருக்கும் தெரியும்! என்ன நடக்குமெண்டு! நல்ல பாம்பு தான்!

நல்ல பாம்பை நல்ல பாம்பாய் பார்க்கவேணும்! நசுக்கினா.... நசுக்கல் தெரியும்! நாக பாணம் பொல்லாதது!

நாங்களும் பொல்லாதவர்களாக; நாங்கள் என்ன செய்யிறது நீங்கள் தானே வழி கோலினியள்.

உங்கட சோலிக்கு எப்ப எண்டாலும் வந்தனாங்களே! சச்சரவு வேண்டாம். சமாதானமா வாழுவம் எண்டு எத்தினை தடவைகள் சொன்னம்.

எங்கட பிள்ளைகள் எத்தினை தடவைகள் உங்கட மமதைய மறந்து மன்னிச்சு பரியாதயாக் கேட்டவங்கள் 'போர் எண்டா போர் எண்டியளே!....'

மண் கவ்வேக்க மட்டும் நாங்கள் வேணுமே....

தம்பிமார் சத்தியமாய்ச் சொல்லுறன்! எங்கட பிள்ளையள் நல்லவங்கள்! நாங்கள் மனுசராய் வாழப் பிரியப்படுறம் நீங்களும் மனிசராய் வாழ வேணும் எண்டு பிரியப்படுறம் மனிசராய் வாழப் பிரியப்பட்டால் வம்பு தும்பு செய் யாம வடிவாப் பேசுங்கோ!

உண்மைகளைப் புரிஞ்சு கொள்ளுங்கோ!'உரிய உரிமைகளை' 'உங்கடய இல்ல எங்கடயளைத் தாங்கோ! 'எங்கடயள எங்களிட்டைத்தர உங்களுக்கென்ன வலிப்பு...?

தயவு செய்து குறண்டாதையுங்கோ! பேந்து காக்கா வலிப்பில கிடப்பியள். கண்டிப் பாய்தான் சொல்லுறன். கனதியாய் நிண்டு தான் சொல்லுறம். ஒதுக்காதையுங்கோ:- ஒதுக்காதையுங்கோ!'காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள வேணும்!'

பழுத்த பழம் சொல்லுறன் பகிடியில்ல. பழசுகளை மறந்து போடுவம். அழகான தீவை அழகு படுத்துவம் புரிதலால சமத்துவத்தால அறிவால அன்பால.

கண்ணைத் திறந்து பாருங்கோ உலகம் கணினியுகத்தில! கண்ணுறாவியள் உருப்படுகிறியளும் இல்லை; உருப்படுகிறவங்களையும் விடுகிறியள் இல்லை.

உருப்படுவம்; உலகப் போக்கோட ஓடுவம்! இல்ல உலகப்படத்தில நீங்களும் தான் காணாமல் போவியள்.

என்ன காணாமல் போகப் போறியளோ? கண்டு கொள்ளப் போறியளோ! கண்டு கொள்ளுவியள் எண்டு நினைக்கிறன்.

ஆதித்த நிலா

## பன்முகம் - 13

# கிழட்டுச்செல்வங்கள்



தமிழிலே "பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழு" என வாழ்த்தும் போது மொத்தம் 16 செல்வங்கள் உண்டு என்று சொல்வர்.. முத்தமிழ்க்காவலர் திரு.கி.ஆ.பெ. விசுவநாதன் கூடவே இன்னுமொரு செல்வத் தையும் குறிப்பிடுவார் அது 'கிழட்டுச் செல்வம்' என்பர்.

பழசுகள் என்று இளம் வட்டங்கள் கூறிப் பகிடி பண்ணினாலும் உண்மையிலேயே வீட்டில் இருக்கும் வயது போனவர்கள் தேடக்கிடைக்காத செல்வங்களே! ஏனெனில் அவர்களது வாழ்க்கை அனுபவங்கள் பல எமது வாழ்க்கையில் கண்டு கேட்டு அறியாதவை. நாம் படித்துக் கேட்டு அறிய வேண்டியவற்றை அவர்கள் பட்டறிவின் மூலம் எமக்குக் கூறிவிடுவர். அதனாற்தான் 'புதுச் சேலை கிடைத்தாலும் பழஞ்சேலை தேடக்கிடைக்காது' என்ற ஒருசொல் வழக்கும் எம்மிடையே உண்டு.

வன்னி இயல் ஆய்வாளரும், எழுத்தாளருமான திரு. முல்லைமணி (வே.சுப்பிரமணியம்) அவர்களின் மூத்த சகோதரன் திரு.சபாபதி அடிக்கடி நாங்கள் இருக்கும் வீட்டுக்கு வருவார். வயது அவருக்கு எழுபத்துஒன்பது என்றாலும் அந்த வயதுக்குரிய தளர்ச்சி எம்மோடு ஒப்பிட்டுப் பார்த்தால் அவரிடம் இல்லையென்றே கூறலாம். சில வேளைகளில் பம்பலாக எம்முடன் பேசிக் கொண்டிருப்பார். ஆங்கிலம் கலவாத சுத்தமான வன்னித்தமிழை அவரிடம் கேட்கலாம்.

அப்படியான ஒரு நாளில்தான் அவர் பழைய உண்மை நிகழ்வு ஒன்றைக் கூறினார். சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில், அதாவது தாமெல்லாம் சிறுபையனாக இருந்த காலத்தில் முள்ளியவளையில், தற்பொழுது கலைமகள் வித்தியாலயம் இருக்கும் காணிக்கு எதிர்ப்புறமாக அம்பலவி செல்லையா என்பவர் கடைவைத்திருந்தாராம். இவர் காரைதீவைச் சேர்ந்தவர். அவருடைய காலத்தில் தான் சிறுபையனாக இருந்தபோது அந்தக் கடையில்தான் சிலேட்டு, பென்சில் எல்லாம் வாங்குவது வழக்கம்.

கடை வைத்திருந்த அதேவேளையில் கள்ளுத் தவறணை குத்தகைக்கு எடுப்பதும் அவரது முக்கிய வியாபாரங்களில் ஒன்று. அன்றைய ஆண்கள் அரிசியாக, நெல்லாக அவரிடம் கொண்டுவந்து கொடுத்து விட்டு அவரிடம் துண்டு பெற்றுச் சென்று தவறணையில் தாகம் தீர்த்துக் கொள்வதுண்டு.

அந்தநாளில் பொன்னர் என்று இன்னுமொருவர் வாழ்ந்தார். ஆள் ஒரு முஸ்பாத்திப் பேர்வழி தனக்குத் தேவை எதுவென்றாலும் எப்படியோ மற்றவரை ஏமாற்றியென்றாலும் தனது காரியத்தைச் சாதித்துக் கொள்வார்.

ஒரு முறை பொன்னருக்கு மிகவும் நெருக்கடியான பணத் தட்டுப்பாடு. ஒன்றரைச் சதத்துக்கு ஒரு முட்டி கள்ளுவாங்கிக் குடிக்கவும் முடியாத அளவுக்கு பணத்தட்டுப்பாடு. (ஒரு முட்டி நாலு போத்தல்) எனவே ஒரு தந்திரத்தை க்கையாண்டார்.

சாக்கு ஒன்றினில் மண லைக் கட்டிக்கொண்டு சென்று கடையில் அரிசி மூடைகள் இரு க்கும் இடத்தில் குத்தி நிறுத் தினார். இப்படி பலரும் கொண்டு வந்து வைப்பது வழக்கமான நிகழ்வு என்பதால் அம்பலவியாரும் பெரிதாகப் பொருட்படுத்தவில்லை. கையிலே ஏதோ அலுவலாக இருந்த அவர் நின்ற இடத்தில் நின்ற படியே "என்ன பொன்னர் கள்ளுக்குத் துண்டு வேணுமே?" என்று கேட்கவும். இவரும் ஆமாம் என்று கூறி அரிசிக்குப் பெறுமதியான தொகைக்குத் துண்டைப் பெற்றுச் சென்று கள்ளுக்கடைக்குச் சென்று தன் தாக சாந்தியை செய்து கொண்டார்.

ஆனால் அதற்குப்பின்னர் தான் பொன்னருக்குச் சங்கடமான நிலை. கள்ளுக் கொட்டிலுக்கோ, அம்பலவியாரின் கடைக்கோ போவதைத் தவிர்த்துக் கொண்டார். அம்பலவியார் இருக்கும் பக்கம் தலைகாட்டுவதே இல்லை. இத்தனைக்கும் அம்பலவியாருக்கு பொன்னர் கொண்டு வந்து கொடுத்த மூடையை உடனடியாகப் பிரித்துப் பார்க்க வேண்டிய தேவை ஏற்படவில்லை. அம்பல வியாருக்கு விடயம் அம்பல மாகியிருக்கும் என்ற அச்சத்தில் பொன்னர் அவருக்கு தலைமறை வாகவே நடமாடித் திரிந்தார். பொன்னரைக் கண்டு நாள்கள் பலஆகிவிட்டன என்பதை அம்பலவியார் உணர்ந்தாலும் அவருக்கு இருந்த 'பிஸி'யில் அதைப்பற்றிப் பெரிதாக எடுத்துக் கொள்ளவுமில்லை.

கிட்டத்தட்டமாதம் ஒன்றின் பின்னரே பொன்னர் கொண்டு வந்து கொடுத்த மூடையை அவிழ்த்துப் பார்க்கும் சந்தர்ப்பம் கிட்டியது. மூடையில் அரிசிக்குப் பதிலாக மண் இருப்பதைக் கண்டு தான் ஏமாற்றப்பட்டு விட்டதை உணர்ந்து சிரித்துக் கொண்டதுடன் பொன்னர் நீண்டநாள்களாக தனது கண்ணில் தட்டுப்படாமையின் காரணமும் புரிந்தது. அதன் பின்னர் பொன்னரை ஒரு முறை காணவேண்டும் என்பதில் அம்பலவியாருக்கு எண்ணமும் ஏற்பட்டது. ஆனால் பொன்னர் அதற்குப் பிடி கொடாமலே விலத்திவந்தார்.

ஒரு நாள் எதிர்பாராத விதமாக அம்பலவியாரை பொன்னர் மிக நெருக்கமாகச் சந்திக்க நேர்ந்தது. அவரைக் கண்டதும் தான் தாமதம் பொன்னர் ஓடத் தொடங்கினார். அது கண்ட அம்பலவியார்.

"பொன்னர், பொன்னர், ஏன் ஓடுறீர் இஞ்சவாரும்" என்று அழைக்கவே மேற்கொண்டு ஓடமுடியாமல். பொன்னர் அம்பல வியார் முன்னே மிகவும் அடக்க மாக வந்து நின்றார். அம்பலவியார் சொன்னார்.

"ஏன் ஓடினீர் அரிசிக்குப் பதிலாய் மூடையில மண் இருந்ததை நினைச்சுத் தானே? அதுக்கேன் ஓடுறீர். நீர் கொண்டு வந்து தந்தது அரிசிதான். அது என்ரகாலப் பிழை மண்ணாப் போச்சுது. உம்மிலை பிழை யில்லை. என்ர காலப்பிழைக்கு நீர் என்ன செய்யிறது. அதுக்காக கடைக்கும் கள்ளுக் கொட்டிலுக்கும் வராமல் ஏன் மறைஞ்சு திரியிறீர். இப்ப உமக்குக் கள்ளுக்குடிக்கத் துண்டு வேணுமே. இந்தாரும் துண்டு கொண்டுபோய் குடுத்துக் கள்ளைக் குடியும். இனி ஒளிஞ்சு திரிய வேண்டாம்" என்றாராம்.

இந்த உண்மைச் சம்பவத்தை முதியவர் சபாபதியார் சொன்னபோது

"இன்னா செய்தாரை ஒறு த்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல்"

என்ற குறளே நினை வுக்கு வந்தது. அது மட்டுமன்று சிறந்த ஒருவியாபாரி தனது வாடிக்கையாளரை எப்படி தன்வசப்படுத்துகின்றான். மேலும் அதே நபரால் தான் நட்டமடையக் கூடாது என்பதில் எத்தகைய தந்திரத்தைக் கையாள்கின்றான் என்பதும் புரிந்தது.

இத்தகைய அனுபவ பூர்வமான சம்பவங்களைத் கூறி அறிவூட்டும் முதியவர்களை "கிழட்டுச் செல்வங்கள்" என்று முத்தமிழ்க் காவலர் கூறியது மிகப் பொருத்தமன்றோ.

இன்னும் தான் ஒரு சதத்துக்கு ஒரு போத்தல் மண்ணெய்வாங்கியது. ஒரு ரூபாய்க்கு 50 சேர் அரிசி வாங்கியது. 10 சதம் கொண்டு போய் பகல் உணவுக்கு வேண்டிய முழுப் பொருட்களும் வாங்கியமை எல்லாம் கதை கதையாகச் சொல் வார்.

ஒரு நாள் 'முல்லைமணி' சொன்னார் தான் சிறுவனாக இருந்த போது தண்ணீருற்றுச் சந்தியிலிருந்து வந்து கொண் டிருந்த ஒரு பெண் மற்றவரிடம் சொன்னாராம் "இருபத்தைஞ்சு சதம் கொண்டு சந்தைக்குப் போனன் ஒருசதமும் மிஞ்ச வில்லை. சாமான் விலை கூடிப் போச்சு, இனி மனிசர் வாழஏலா" என்று.

நாவண்ணன்

'பிளானறி ஓ கொணரின்'

# இடம் பெயர்ந்தவன்

## அத்தியாயம்-1

திருமதி. சோட்லி (Shortley) மலையில் ஏறி நிற்பதற்காக வந்து கொண்டிருந்த அதேபாதையால், அந்தமயிலும் அவளைப் பின்தொடர்ந்து சென்றுகொண்டிருந்தது. அதைப்பார்க்க ஒரு முழுஅளவிலான அணிவகுப்புப் போல் இருந்தது. அவள் கைகளைக் கட்டிக் கொண்டு போய்க்கொண்டிருந்தாள். எல்லாவற்றையும் பார்த்துவிடக்கூடிய அந்த இடத்திற்கு அவள் ஏறிக்கொண்டிருந்ததை பார்க்கும் போது, அக்கிராமத்தின் மிகமுக்கிய மானவரின் மனைவி ஆபத்துக்கான அறிகுறி ஒன்று ஏற்பட்டு, அது என்னவெனப் பார்க்க வருவது போலவும் தோன்றியது. அவளது இரு பருத்த கால்களும் மலைபோன்ற உறுதியுடன் நின்றுகொண்டிருந்தன. வெளியே துருத்திக் கொண்டிருக்கும் கூரான கருங்கற்கள் நிறைந்த, மேலே போகப்போக குறுகிக்கொண்டு செல்லும் பாதையால் சென்றுகொண்டிருந்தவள், தனது வெளிர் நீலநிற கண்களால் முன்னுள்ள எல்லாவற்றையும் ஊடுருவுவது போல் நோட்டம் விட்டாள்.

அவள் மதியத்தின் கொடும் வெய்யிலையும் பொருட்படுத் தவில்லை. தம்மால் அதை மறைத்து விட முடியும் என போக்குக் காட்டியபடி கிடக்கும் சிதறிய முகில்களுக்கூடாக, சூரியன் நகர்ந்து கொண்டிருந்தது. திருமதி. சோட்லி திரும்பிச் செல்லும் மண்பாதையை நிலையாகப் பார்த்தாள்.

மயில் அவளுக்குப் பின்புறமாக மிக அருகில் வந்து நின்றது. பொன் நிறப் பச்சையும் நீலமும் கலந்த அதன் தோகைகள் சூரிய ஒளியில் மின்னின. அவை தரையில் பட்டும் படாமலும் ஒரு மிதக்கும் ரயிலைப் போல் இரண்டு பக்கமும் விரிந்தன. அதனது பார்வை எவராலும் பார்க்கமுடியாத ஒரு இடத்தில் நிலைத்திருக்க, நீண்ட குழல் போன்ற தனது நீலநிறக் கழுத்தைப் பின்புறமாக இழுத்தது.

திருமதி. சோட்லி நெடுஞ்சாலையிலிருந்து ஒரு கறுப்புக் கார் கேற்வழியாக உள்ளே நுழைவதை அவதானித்தார். நீகிறோ வேலைக்காறர்களான அஸ்ரரு சல்கும் (Astor and sulk) அவளுக்கு 13 யார் தூரத்தில் இருந்த கருவிகள் வைக்கும் கொட்டகையில். வேலைசெய்து கொண்டிருந்தவர்கள். அதை நிறுத்திவிட்டு கார்வருவதைப் பார்த்துக் கொண்டிருந்தனர். மல்பரிமரம் அவர்களை மறைத்திருந்தும் கூட. திருமதி. சோட்லிக்கு அவர்கள் நிற்பது தெரிந்தது.

திருமதி மக்கின்ரயர்(Macintyre) வீட்டுப்படிகளால் வந்து கொண்டிருந்தாள். அவள் முழுமையாக சிரித்துக் கொண்டிருந்தாலும், அதில் ஒரு கலவரமடைந்த தன்மை தென்பட்டது. அவளைத் திருமதி. சோட்லி தூரத்திலிருந்து பார்த்தும் கூட இனம் கண்டு கொண்டாள் இப்போது அழைத்துவரப்பட்டுள்ளவர்களும் சோட்லி குடும்பத்தவர்கள் போலவோ அல்லது நீகிரோக்கள் போலவோ கூலிக்கு அமர்த்தப்படவே கொண்டுவரப் பட்டிருந்தனர். ஆனால் விதிவிலக்காக அவ்விடத்தின் சொந்தக்காரியே அவர்களை வரவேற்க வந்து கொண்டிருந்தாள். சிறந்த ஆடைகளையும் மணிகள் கோர்த்த ஆடையொன்றையும் அணிந்திருந்த மக்கன்ரயர் வாயை முழுமையாகத் திறந்தபடி முன்னே சென்று கொண்டிருந்தாள்.

நடைபாதையில் அவளருகே கார் நின்றது. முதலில் பாதிரியாரே கீழே இறங்கினார். கறுப்பு உடைதரித்த உயரமான அம் முதியவர் வெள்ளைத் தொப்பியொன்று அணிந்திருந்தார். மேல்ச் சட்டையின் கழுத்துப்பட்டை பின்புறமாக இருந்தது. அவர்கள் அப்படி உடை அணிவது தாங்கள் பாதிரிமார் என பிரித்து இனம் காண்பதற்காகவே என திருமதி. சோட்லி தெரிந்து வைத்திருந்தாள். இடம் பெயர்ந்தவர்கள் இங்கு வருவதற்கான ஏற்பாடுகளை பாதிரியாரே செய்திருந்தார். அவர் காரின் பின்கதவைத் திறக்க, ஆணும் பெண்ணுமாக இரு குழந்தைகள் கீழே குதித்தனர். சிறிது மெதுவாகவே மண்ணிறமும் கச்சானின் தோற்றமும் கொண்ட பெண்ணெருத்தி வெளியே வர, அந்த இடம் பெயர்ந்தவன் காரின் முன்கதவைத் திறந்து கொண்டு கீழே இறங்கினான். அவனது பின்பகுதி சிறிது அசைந்தது. உயரம் குறைந்தவனாகவும் பொன்முலாம் பூசிய மூக்குக் கண்ணாடி அணிந்தவனாகவும் அவனிருந்தான்.

முதலில் திருமதி. சோட்லி கண்களைக் குறுக்கி அவனை மட்டும் பார்த்தாள். பின் கண்களைமுழுமையாகத் திறந்து, அந்தப் பெண்ணையும் பிள்ளைகளையும் அவனுடன் ஒன்று சேர்த்து ஒரு குறூப் போட்டோவைப் பார்ப்பது போல் அவர்களைப் பார்த்தாள்.

அவளுக்கு அப்போது தோன்றிய முதல் எண்ணம். அவர்கள் எல்லோரும் சாதாரணமானவர்கள் போல் இருந்ததேயாகும். அவளுக்கு அவர்களைப் பற்றிய கற்பனையில் மூன்று கரடிகள் ஒன்றாக நடந்து போவது போன்ற தோற்றமே எப்போதும் வருவது வழக்கம். அல்லது மரத்தாலான காலணி அணிந்த டச்சுக்காறர்களையோ, நிறையப் பொத்தான்களை உடைய சட்டைகளை அணியும் மாலுமிகளையோ அவர்கள் நினைவுபடுத்திக் கொண்டிருந்தனர். ஆனால் அந்தப் பெண்தான் அணிவது போன்ற சட்டை அணிந்து

> ### பிளானறி ஓ கொணர்(FLANNERY O' CONNOR)
>
> *பிளானறி ஓ கொணர்(1925 – 1964) அதிகமாக ஒருபிரதேச வாதியாக குறிப்பாக அமெரிக்க தெற்குப் பகுதியை பிரதிபலிக்கும் கதைகளை எழுதியவர் எனக் கருதப்படுகிறார். "வைஸ் பிளட்" "வயலற் பியர் இற் எவே" என்பன அவர் எழுதிய இருநாவல்கள். "ஏ குட் மான் இஸ் காட் ரூ பவின்ற்," "எவிறிதிங் தற் இமேயஸ் மஸ்ற் கொன்வேச்" என்பன அவரது சிறுகதை நூல்கள். வாழ்வு முழுவதும் நோயுடன் வாழ்ந்து கொண்டிருந்தவர். இக்கதை கெடுபிடி யுத்தகாலத்தில் கிழக்கு ஐரோப்பாவிலிருந்து அமெரிக்காவுக்கு புலம்பெயர்ந்த மக்கள் பற்றியது. தனது 39 வது வயதில் காலமானார். நோபல் பரிசைத்தவிர மற்றதெல்லா இலக்கியப் பரிசுகளையும் பெற்றவர். போலிஸ்காரர்களில் பெரும்பாலானோர் கத்தோலிக்கர்கள். அமெரிக்காவில் பெரும்பாலானோர் கத்தோலிக்கர் அல்லாத மற்றைய கிறிஸ்தவ மதப்பிரிவினர். மதமுரண்பாடுகள் நன்றாக கதையில் எடுத்துக்காட்டப் பட்டுள்ளது.*


கொண்டிருப்பதையும் பிள்ளைகள் சாதாரணமானவர்கள் போல இருந்ததும் அவளுக்கு வியப்பைத் தந்தது. அந்த மனிதன் [illegible] காலணிகளையும் நீலநிறச் சேட்டும் அணிந்திருந்தான். சடுதியாக திருமதி மக்கன்ரயர் கைகளை நீட்ட, அவன் தனது இடுப்பை சிறிய உதறலுடன் வளைத்து அதனை முத்தமிட்டான்.

திருமதி. சோட்லி தனது கைகளை சடுதியாக வாயருகே கொண்டு சென்று ஒரு செக்கனில் கீழே அவற்றை விட்டு தனது பின் புறத்தில் அழுத்தித் தேய்த்துக் கொண்டாள். திரு. சோட்லி திருமதி. மக்கன்ரயரின் கைகளை இம்மாதிரி முத்தமிட்டிருந்தால், வாரத்தின் நடுப்பகுதி என்று கூடப்

**ஆங்கில மூலம் தமிழில் சு.மகேந்திரன்**

பார்க்காமல் உடனே வேலையிலிருந்து தூக்கி எறியப்பட்டிருப்பான். அப்படியான குழப்பங்கள் பண்ணிக் கொண்டு திரிய நேரமும் அவனுக்குக் கிடைப்பதில்லை.

அவள் கண்களைக் குறுக்கி நன்றாக ஒரு முறை பார்த்தாள். அப்பையன் பேசிக் கொண்டு அக்கூட்டத்தின் நடுவே நின்றிருந்தான். அவனே ஆங்கிலத்தில் அதிகமாக கதைத்துக் கொண்டிருந்தான். போலந்தில் இருக்கும் போது சிறிதளவு ஆங்கிலத்தைக் கற்றிருந்ததால் தகப்பன் போலிஸ் மொழியில் பேசுவதைக் கிரகித்து அதனை திருமதி. மக்கன்ரயருக்கு ஆங்கிலத்திலும் அவள் ஆங்கிலத்தில் கூறுவதை தனது தகப்பனுக்கு போலிஸ் மொழியிலும் கூறிச் செயற்பட்டுக் கொண்டிருந்தான். 12 வயதாகும் அவனது பெயர் ருடோல்ப் (Rudolph) பெண்ணின் பெயர் சிலட்ஜ்விஜ் (Sledgewig) எனபாதிரியார் திருமதி. மக்கன்ரயருக்குக் கூறிக் கொண்டிருந்தார். அப்பெண்ணின் பெயர் மூட்டைப் பூச்சியின் ஆங்கிலப் பெயரான பக் போன்று இருப்பதாகவும், பெலீவில் (Bollweevil) என்ற பெயரிருந்தால் எப்படி இருக்குமோ அதைப்போல் அந்தப் பெயரை அவள் மேலும் நினைத்தாள். அவர்களது கடைசியாக வரும்



பெயர்களை அவர்களாலோ அல்லது பாதிரியாராலோ மட்டும் தான் உச்சரிக்கக் கூடியதாக இருந்தது. அப் பெயர்களிலே தங்களால் உச்சரிக்கக் கூடியதாக கொபில் கூக் (Gobblehook) மட்டுமே இருந்ததால் அவளும் திருமதி. மக்கன்ரயரும் அப்பெயராலேயே அவர்களை வேலைக்கு அமர்த்துவதற்கு அவ்விடத்தை தயாராக்கிய அவ்வாரம் முழுவதும் தமக்குள் அழைத்து வந்தனர். அவர்களுக்கான இருப்பிடத்தை மிகவும் கஸ்ரப்பட்டே அமைக்கவேண்டியிருந்தது. அவர்களிடம் சொந்தமாக எதுவுமே இருக்கவில்லை. ஏற்கனவே எந்தவிதமான தளபாடங்களையோ விரிப்புக்களையோ பாத்திரங்களையோ அவர்கள் தம்வசம் வைத்திருக்கவில்லை என வெளிப்படையாகத் தெரிந்திருந்தது திருமதி. மக்கன்ரயரால் இனிமேல் பாவிக்க முடியாது என கழித்து ஒதுக்கப்பட்டவையிலிருந்து தான் வந்தவர்களின் எல்லாவிதமான தேவைகளும் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. ஜன்னல் சீலைகளை வெறுமையாக்கப்பட்ட கோழிக்குஞ்சுத் தீனிச் சாக்குகளால்ப் போட்டார்கள். இரண்டு சிவப்புச் சாக்குகளும் ஒரு பச்சைச் சாக்கும் தேவைப் பட்டன தனியாகச் சிவப்பு நிறச் சாக்கைப் பாவிப்பதற்கு அவை போதுமானதாக இருக்கவில்லை. தான் ஒன்றும் பணத்தில் புரளவில்லை திரைச்சீலை களை விலைகொடுத்து தன்னால் வாங்க முடியாது என திருமதி. மக்கன்ரயர் கூறிக் கொண்டே இருந்தாள். வந்திருப்பவர்கள் இதற்காக எதுவும் குறைகூற முடியாது எனவும் அவர்களுக்கு நிறங்கள் பற்றிய வேறுபாடுகள் தெரியாது எனவும் அவர்கள் பட்டபாட்டிற்கு எது கிடைத்தாலும் நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும். முதலில் அந்த இடத்திலிருந்து வெளியேறி இங்கே வந்தது அவர்களின் அதிஸ்ரம் தான் எனவும் திருமதி. மக்கன்ரயர் ஏதேதோ பிதற்றியபடி இருந்தாள். முன்பொருமுறை தான் பார்த்த நியூஸ் ரீலில், ஒரு சிறிய அறை முழுவதும் உடல்கள் குவியலாகக் கிடந்தது திருமதி. சோட்லிக்கு நினைவுக்கு வந்தது. அவற்றின் கைகளும் கால்களும் கடற்தாவரங்கள் போல் ஒன்றுடன் ஒன்று பின்னிக்கிடந்ததையும், ஒருதலை ஒருபுறம் அமிழ்ந்திருக்க மற்றென்று வேறொரு புறமும் கைகளும் கால்களும் வெவ்வேறாகவும் மூடிவைக்க வேண்டிய உடலின் பகுதி வெளியே கிடக்க, எதையும் பற்றாமல் ஒருகை உயர்த்தப்பட்ட நிலையில் இருக்க எடுக்கப்பட்டிருந்த புகைப்படத்தின் நினைவு திருமதி. சோட்லிக்கு நினைவுக்கு வந்தது. அதுபடமல்ல உண்மையானது தான் என எண்ணுவதற்குள் அப்படம் மாறுதல் அடைந்தது. 'காலம் கிரமமாக காலடி வைத்தபடி வருகிறது!' என்று அசரீரி கூறுவது போல் இருந்தது.

■ தொடரும்....

புன்சிரிப்பு. செய்து கொண்டே ஒருவன், பொல்லாத பாதகனாக இருக்க முடியும். – வில்லியம் ஷேக்ஸ்பியர்.




# எங்கட அக்காவும் அழுவாளா?



தொல்புரம்
சி. கதிர்காமநாதன்

அக்கா வந்திருப்பாரா?

மனது, விடாமல் இந்தக் கேள்வியை கேட்டுக்கொண்டிருந்தது. வந்து தான் இருப்பார். யாழ்ப்பாணம் போக ஆட்களை விடுகினம் என்று கேள்விப்பட்டவுடன் அக்காவும் உடன் வெளிக்கிட்டிருப்பா. அக்காவுக்கு ஆட்களோடு இருப்பது கஷ்ரமான விடயம். அதுவும் மூத்தவனை வைத்துக் கொண்டு எல்லோரும் இடம் பெயர்ந்து போகும்போது அந்த அமளியில் அக்காவின் குடும்பத்தைப் பார்க்க முடியவில்லை. அவசர அவசரமாக வெளிக்கிட்ட அந்த நேரத்தில் ஒன்றும் செய்ய முடியாமல் இருந்தது.

,அதன்பின் அவ எங்கு தான் இருக்கிறார் என்று தெரியவில்லை. நாங்கள் எல்லோரும் சாவகச்சேரியில் இடமில்லாமல் வடமராட்சிக்கு வந்துவிட்டோம். நாட்கள் கடந்தும் அக்கா பற்றிய தகவல் கிடைக்கவில்லை. எனக்கு விசராகவும், துன்பமாகவும், கலக்க மாகவும் இருந்தது. என்னால் அவவைப் பார்க்காமல் இருக்க முடியாது. அவவோடு கதைக்க வேணும், கோயிக்குப் போகவேணும், அவதரும் சாப்பாட்டை சாப்பிட வேணும். என்னால் அவவுக்கு கொஞ்சம் பகிடிவிட்டுத்தன்னும் அவவைச் சிரிக்கப் பண்ணி அதனைப் பார்ப்பது எவ்வளவு ஆறுதலா கவும், கவலை, துன்பம் மறந்து அவ கலகல என சிரிப்பதைப் பார்க்கப் பார்க்க எவ்வளவு சந்தோசமாகவும் இருக்கும்.

இவ்வளவு சிரிப்பையும், ஆனந்தத்தையும் அவவால் அந்த உடம்புக்குள் எப்படிப் பூட்டிவைத்துக் கொள்ளமுடிந்தது. எனக்கு அவவை சிரிக்கப் பண்ணுவதே அங்கு போகும் போது வேலையாகிவிட்டது. அக்கா குடும்பத்துக்கும் எனக்கும் தொடர்பு எப்படி வந்தது.....?

எங்கள் குடும்பமோ பெரிய குடும்பம் தான். அப்பா அரசாங்க ஊழியர். ஓய்வுபெற முன்னமே இறந்து விட்டார். குடும்பச்சுமை அம்மாவின் தலையில் விழுந்தது. அம்மா பாவம். அம்மாவைப் பார்த்தால் நீங்கள் அன்னை தெரேசா மாதிரி என்று சொல்லுவீர்கள். உண்மையிலே அப்படித்தான் இருப்பா. உருவம், நிறம், உயரம் எல்லாம் அவரே தான். அந்த உருவத்திற்கு அப்பாவின் பென்சனோடு எங்களது சுமையைத் தாங்கும் சக்தி இருக்குமா? நீங்களும் என்னைப் போல முடியாது தான் என்று சொல்லுவீர்கள்.

ஆனால் அம்மாவுக்கு அன்னை தெரேசா மாதிரி மனம் இருந்தது. வலிமையான மனம் இருந்தது. எல்லா சோதனைகளையும் சமாளித்து முடிக்கும் ஆற்றல் இருந்தது. எங்கள் வீட்டுக்கு வந்து அம்மாவின் ருசியான சாப்பாடு சாப்பிடாமல் சென்றோர் குறைவு. அம்மாவின் சமையல் அப்படியானது. தூர இடங்களிலிருந்து வேலை காரணமாக வருபவர்கள் எந்த நேரமாக இருந்தாலும் வீட்டுக்கு வந்து விடுவார்கள். சாப்பாட்டிற்கு பயமில்லை.

காலையில் சந்தி வைரவர் கோயில் மணி ஐந்து மணிக்கு அடிக்க அடுப்பில் வைத்த கேத்தல் இரவு பத்து மணிக்கு மேலும் தண்ணி ஊத்தி ஊத்தி கொதித்தபடி இருக்கும். அம்மா அடிக்கடி எங்களுக்குக் கூறுவார்.

"நான் பிறந்த நேரமோ, பலனோ தெரியாது தோட்டத்துக்குப்போன ஆக்களுக்கு தோசை சுட பத்து வயதில் அடுப்பெரிக்க தொடங்கினனான். இப்ப ஐம்பத்தைந்து வயதுக்கு மேலாகுது இன்னும் முடிந்தபாடில்லை. இடம்மாறி எந்த இடம் போனாலும் சமையலுக்கும் சாப்பாட்டுக்கும் குறைவில்லை."

எங்களுக்கு என்னவோ செய்யும். அந்த நேரத்தில் அம்மாவின் முகத்தில் தோன்றும் உணர்ச்சியைப் புரிந்துகொள்ள முடியாது. எரியும் அடுப்புக்கருகில் கொஞ்சநேரம் நின்று பார்த்தால் தெரியும் அதன் வெக்கை எப்படி யென்று. அம்மா எங்களுக்காகப் பொறுத்துக் கொள்கிறாள். அம்மாவின் பணி இதோடு முடிந்து விடவில்லை. நல்ல காரியமோ, கெட்ட காரியமோ அடுப்படிக்குள் அம்மா தான் முன்நிற்பாள். வவுனியா, மன்னார் போன்ற இடங்களில் அப்பா வேலை செய்யும் போது எங்கள் வீட்டில் நின்று தங்கிப் படித்தவர்கள். எல்லாரும் இன்று நல்லநிலையில் இருக்கிறார்கள். அந்தநேரத்தில் பிரச்சினைகள் வந்தாலும் அம்மா எல்லாவற்றையும் சமாளித்து விட்டார். அம்மாவால் எப்படி இது முடிகின்றது.

அது அம்மாவுக்கு மட்டுமே புரியும். அம்மாவின் இந்த சுபாவம் மூலம் தானோ அக்கா வீட்டுக்கு தொடர்பு ஏற்பட முடிந்தது. அதுவரை அக்காவின் குடும்பம் பற்றி எங்களுக்கு ஒன்றும் தெரிந்திருக்கவில்லை. அம்மாவுக்கு எங்கள் வீட்டை அடுத்து அடுத்ததாகத் தெரிந்தது ஒன்று கோயில் தான். ஊரில் நடக்கும் அத்தனை கோயில் திருவிழாக்களுக்கும் விரதம் இருப்பா. நாங்கள் என்ன சொன்னாலும் கேட்கமாட்டா.

"உங்களுக்கு இப்ப அம்மா செய்யிறது புரியாது. உங்கட காலத்தில தெரியும்."

அம்மா இப்படி சொல்லி விட்டு கோயிலுக்குப் போய் விடுவாள். இப்படியான நேரத்தில் தான் அக்காவின் சிநேகிதம் அம்மாவுக்கு ஏற்பட்டது. அக்காவுடன் தொடர்பு ஏற்பட்டு கதைத்துக் கொண்டு வரும் போதுதான் அக்காவின் தாய் தகப்பன் அம்மாவுக்குத் தெரிந்தவர்களாக இருந்தார்கள். அம்மா கோயிலுக்குப் போய் வந்தபின் அக்காவின் கதையும் இடையில் அடிபடும். அம்மா அக்கா அண்ணாவுடன் சேர்ந்துதான் அதுபற்றிக் கதைப்பார்.

அந்த நேரத்தில் நான் அங்கு நின்றாலோ, போனாலோ என்னைப் பேசிக் கலைத்து விடுவார்கள். பெரியவர்கள் கதைக்கும் போது சின்னவர்கள் அருகில் இருப்பது கூடாதுதானே. எனக்கு அதுக்குப்பின் தான் அக்காவை அறிய வேண்டும் என்று ஆர்வம் வந்தது. வீட்டில் கண்டிப்புக்குப் பஞ்சமில்லை. எந்த விடயமென்றாலும் அம்மா அல்லது அண்ணா உத்தரவில்லாமல் நடைபெறமுடியாது. எங்கு போவதாயினும் இவர்களது அனுமதி தேவை.

எனக்கும் அக்காவைப் பற்றி அறியும் ஆவல் வளர்ந்து கொண்டே வந்தது. அம்மாவும் நேரம் வரும்போது அக்காவைப்பற்றி ஏதோ ஒரு விடயம் சொல்லுவார். கவலைப்படுவார்.

"பாவம், ஏதோ அந்தப்பிள்ளை என்றபடியால் துணிச்சலோட உயிரைக் கொண்டு திரியுது."

"என்ன நடந்தது என்று இன்னமும் தெரியாதோ, அம்மா"

(அக்கா)

"மூத்த பெடியன் யோசிச்சு யோசிச்சு ஒரு மாதிரியாய் போட்டான். (அம்மா)

அவர்கள் கதைத்ததில் சாடையாக் கேட்டதிலிருந்து அக்காவின் வாழ்க்கையில் ஏதோ நடந்திருப்பது தெரிந்தது. அக்காவைப் பார்க்கத்தான் வேண்டும். ஒருநாள் அதற்கு சந்தர்ப்பம் வந்தது.

அன்று சனிக்கிழமை. அம்மா சந்தைக்குப்போய் சாமான் வாங்கிக் கொண்டு விரைவாக வந்து விட்டது தெரிந்தது. கொஞ்ச நேரத்தில் என்னைக் கூப்பிட்டார். கையில் மரக்கறி நிறைந்த பையுடன். எனக்கு உடம்பு அலுப்பாக இருந்தது.

"தம்பி, இதைச் சைக்கி ள்ளை கொண்டு போய்..... அம்மா சொல்லத் தொடங்கினாள். கந்தசாமி கோயில் தேர்முட்டிப் பக்கத்தில் வீடு கேட்டால் காட்டுவினம். அது தான் அக்காவின் வீடு. நான் போக ஆசைப்பட்ட வீடு. உடம்பு அலுப்பு பறந்தது. உற்சாகம் வந்தது. உடனேயே வெளிக்கிட்டு அம்மாவின் கையிலிருந்த மரக்கறிப் பையை வாங்கினேன். என்னுடைய திடீர் உற்சாகம் அம்மாவுக்குத் திகைப்பைக் கொடுத்தது.

"அண்ணாவின்ர சைக்கிள்ளை கவனமாகப்போட்டுவா தம்பி" நான் சைக்கிளில் அக்காவீடு விரைந்தேன். கந்தசாமி கோயில் முன்வாலில் வந்து சைக்கிளை விட்டுக் குதித்தேன். அந்தப் பெரிய அரசமரத்துக்குப் பக்கத்தில் தேர்முட்டி கம்பீரமாக இருந்தது. அதற்குப் பக்கத்தில் நாற்புறமும் வேலியால் அடைத்து மறைத்து இருந்ததுதான் அக்காவின் வீடா?

காற்று வஞ்சகமில்லாமல் வீசியது. அரசமர இலைகள் சலசலத்தன. கோயிலிலிருந்து சிலர் திரும்பிக் கொண்டிருந்தனர். வீதியில் பெடியன்கள் கூச்சல் போட்டு விளையாடினர். படலை சாத்திக்கிடந்தது. நான் படலையைத் தட்டினேன். வயதுபோன அம்மா வீட்டின் உள்ளிருந்து வந்தவர் என்னைக் கண்டு விரைந்து வந்து படலையைத் திறந்தார். நான் உடனேயே மரக்கறிப்பையை நீட்டினேன். என்னை அந்த அம்மா யாரென்று கேட்க நான் சொன்னேன். "உள்ள வா தம்பி. எனக்கு முன்பின் தெரியாத வீடு. உள்ளே போகக் கூச்சமாக இருந்தது.

"கூச்சப்படாமல் வா. உங்கட அப்பாவை முந்தி எங்களுக்குத் தெரியும். அவ சொல்லிக் கொண்டு என்னை உள்ளே அழைத்துப்போக வாசல் தடுப்புச் சீலையை விலக்கியபடி."

"யாரம்மா அது?" எனக் கேட்டபடி ஒரு பெண் உருவம் எட்டிப்பார்த்தது. இது தான் அக்காவா? அது அக்காவே தான். சந்தேகமில்லை. அக்காவை வடிவாகப் பார்த்தேன். அவவைப் பார்த்தால் முன்பு பார்த்த முகம் போல் தெரிந்தது. முன்பு காலிங்கன் தியேட்டரில் அரச படங்கள் வந்தால் அதில்வரும் பெண்மாதிரி அக்கா இருந்தாள். இயற்கையான முகம். சுருண்ட நீண்ட தலைமயிர். முகத்தில் பூச்சுவகைக்கு இடமே யில்லை. நெற்றியில் குங்குமப் பொட்டு பளிச்சிட்டது. கழுத்தில் கையில் ஒன்றையும் காணாமல் வெறுமையாக சட்டையும் சேலையும் உடலை ஒட்டியபடி இருக்க அக்காவின் வயதை உடன் சொல்லக் கஷ்டமாக இருந்தது.

எங்கட அக்காவின் வயது இருக்குமா? கடவுளே எங்கட அக்காவுக்கு இன்னும் கலியாண மாகவில்லையே. அக்காவுக்கும் நாற்பது வயதுக்கு மேலாகிறது. இன்னும் கலியாணம் கைகூடவில்லை. அக்கா அதனை நினைத்து வருத்தமடைகிறாரா தெரியவில்லை. இந்த அக்கா போலதான் எங்கட அக்காவும் நெடு நெடு என்ற வளர்த்தி. உடம்பில் சதை பெரிதாக வைக்க வில்லை. அம்மாவின் வெள்ளை நிறம் தான். அக்கா கலியாணம் முடித்து பொட்டு வைத்தால் இவமாதிரி அழகாக இருப்பாள்.

எங்கட அக்கா இன்று வரை சிடுசிடுப்பு, சினப்பு இல்லாமல் சிரித்துச் சிரித்து எங்களோடு கதைத்துக்கொண்டு, சமைத்துக் கொண்டு, வீட்டைக் கூட்டிக் கொண்டு, உடுப்புகளை தோய்த்துக் கொண்டு, பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டு அக்கா...

அக்காவால் அம்மா போல் எப்படிப் பொறுமையாக இருக்க முடிகின்றது. அம்மாபோல் வீட்டோடு ஒட்டிக்கொண்டு அக்காவுக்குள் சோகமிருக்காதா? குடும்பத்துள் மூத்தவனாகப் பிறந்துவிட்டதால் பொறுமையாக இருக்கின்றாரா? கண்முன்னே நிற்கும் இந்த அக்காவுக்குள் என்ன சோகம் இருக்கிறது.

அக்கா இப்போது என் தலையைக் கோதியபடி இருந்தார். நான் வெட்கத்தில் நின்றேன்.

அக்காவின் அம்மா என்னைப்பற்றி சொல்லிவிட்டார். "முகத்தைப் பார்க்கத் தெரியுது அப்படியே தாயின் முகம்" அக்கா தான் சொன்னார். நான் வீட்டுக்குப் போகும் அவசரத்தில் நின்றேன். அவர்கள் மறித்தாலும் நான் கிளம்பி விட்டேன். அதன் பின்னர் அக்காவீடு போவதற்கு தேவையான சந்தர்ப்பங்களும் இருந்தன. நானும் சந்தர்ப்பங்களை ஏற்படுத் திக்கொண்டேன். அங்கு போன பின்னர்தான் அக்கா வீடு குடும்ப அங்கத்தவர் தெரியவந்தது. வயதான அம்மா. இரண்டு ஆண்பிள்ளைகள். இளையவன் என்னோடு நன்றாய் கதைப்பான். சிரிப்பான். மூத்தவன் கதையு மில்லை, சிரிப்புமில்லை. வலியச் சென்று தான் கதைக்கவேணும். மூத்த அண்ண னைப் பார்க்க அம்மா வீட்டில் சொன்னது ஞாபகம் வரும்.

அவனுக்கு என்ன பிரச்சினை? எதை யோசித்து யோசித்து இப்படியாகி விட்டான். காலப்போக்கில் விடை தெரியுமென்று நினைத்தேன். கிழமையில் ஒரு நாள் தன்னும் அக்காவீடு போய் வந்து விடுவேன். அம்மா தரும் மரக்கறியோ, தேசிக்காயோ கொடுப்பதும் வாங்குவதுமாக சென்று வருவதற்கு எனக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. அக்காவின் சாப்பாட்டில் பச்சைக் காய்கறி வகை நன்றாக இருக்கும். நான் சாப்பிட்டிருக்கிறேன்.

காலம் செல்ல அக்கா வீடு என்வீடுபோல் ஆகிவிட்டது. எங்கும் நான் போய் வந்தேன். கூச்சம் போய்விட்டது. இப்படியான வேளையில் தான் அந்த அல்பம் கையில் கிடைத்தது. அக்கா சிறுவயதில் தனித்து நிற்கும் படம். அக்காவின் முகம் அப்படியே தெரிந்தது. அப்பா, அம்மாவுடன் நின்ற படம். தோழிகளோடு குதூ கலமாக எடுத்த படம் இப்படியாகப் பல படங்கள் இருந்தன. எல்லாமே கறுப்புப்படங்கள் தான். அந்தப் படங்களில் இந்தப்படமும் கண்ணுக்குத் தென்பட்டது. அக்காவோடு இன்னும் ஒருவர் தலைப்பாகையோடு இருவரும் கழுத்தில் மாலைகளாக சிரித்தபடி இருந்தனர். பக்கத்தில் இருப்பவர் யார்? அக்காவின் கணவரா?

நான் படத்தைப் பார்த்தபடி இருந்தேன். என்ன வெல்லாமோ மூளையில் ஓடி மறைந்தன. பல கேள்விகள்

எழுந்தன நிச்சயம் படத்தில் இருப்பது அக்காவின் கணவர் தான். எத்தினயோ கலியாண வீட்டுப்படங்களில் கலியாணம் முடித்தவர்கள் இப்படித்தான் இருந்தார்கள். ஆனால், ஒருநாள் தன்னும் அக்காவின் கணவரைக் காண வில்லையே. எனக்கே இது ஆச்சரியமாக இருந்தது. எவ்வளவு நாட்கள் அக்காவீடு போய்வந்து விட்டேன். ஒரு நாளேனும் இதைப்பற்றிக் கேள்விவந்ததில்லையே. அக்காவின் கணவர் இங்கு இல்லையா? வெளிநாட்டில் வேலை செய்கின்றார் என்றால் கடிதங்கள் வரும். கலர்ப்படங்கள் வரும். போனில் கதைப்பதற்குப் போவார்கள். நான் இங்க பழகியபின்பு ஒருநாள் தன்னும் கடிதமோ, படமோ வந்ததாகத் தெரியவில்லையே. கடைசி போனில் தன்னும் மற்றவர்கள் போல் கதைக்கப்போனதாகத் தெரியவில்லை.

சில நேரங்களில் நான் போகும் போது அக்கா வீட்டில் இல்லாமல் இருப்பாா். அக்கா வீடு திரும்பி வரும்போது களைத்துப் போயிருப்பாள். மூத்த மகனும் கூட வருவான். அவன் முகம் விறைத்தபடி இருக்கும். வீட்டுக் குள் போனதும் அவன் சத்தம் போட்டான்.

"உவங்கள் பேக்காட்டி றாங்கள். ஒண்டும் சொல்ல மாட்டாங்கள். கள்ளங்கள்"

அவன் கத்திக்கொண்டு தன் அறைக்குள் புகுந்து கதவினை அடித்துச்சாத்தி விடுவான். அதன் பின் வீடு அமைதியாகிவிடும். அக்கா வந்து பேசாமல் இருப்பாள். முகத்தில் வாட்டம் தெரியும்.

எதற்கு இப்படியெல்லாம் பேசுகிறன். அக்காவை நேரடியாகக் கேட்டுவிடலாமே. என்ன தயக்கம். ஆனால் அதற்கு மனம் ஒத்துவரவில்லை. மூத்தவன் போல் நானும் அக்காவும் இடைஞ்சல் கொடுக்கக்கூடாது. அக்கா வீட்டுக்கு வெளியாட்கள் வருவதில்லை. எங்கள் குடும்பம் தான் அக்காவோடு கூட உறவாடிக் கொண்டிருந்தது.

மூத்தவன் அதிகநேரம் தாயைச் சுற்றிக்கொண்டிருப்பது தெரிந்தது. அக்கா இப்போ தெல்லாம் கோயிலுக்குப் போவ தைக் குறைத்திருந்தாள். அம்மா இதுபற்றி ஒருநாள் கதைத்தாள். என்ன காரணமென்று தெரிய வில்லை. இந்தநேரத்தில் தான் அந்தப் பிரச்சினை பெரிதாய் எழுந்தது.

மூத்தவனின் கூச்சல், ஆர்ப்பாட்டங்கள் நாளுக்குநாள் அதிகரித்து வந்தன. அயலவர் களும் சத்தம் போடத் தொடங்கினார்கள். இரவில் தங்கள் பிள்ளைகள் பயப் படுவதாகவும், தங்களாலேயே அவனின் கூச்சலைத் தாங்க முடியவில்லை என்று கத்தி னார்கள். அதன்பின்னர் அவனை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போவதற்கு நாங்களும் போகவேண்டி இருந்தது. அண்ணன்மார் பலபேர் சேர்ந்து அவனை காரினுள் ஒட்கார வைக்கப்பட்டபாடு. இவ்வளவு பலம் அவனுக்கு எப்படி வந்தது. அவன் அப்போதும் கூச்சல் போட்டான்.

"எனக்கு உடம்புக்கு ஒண்டுமில்லை. என்னைச் சும்மாவிடுங்கோ. என்னைச் சும்மாவிடுங்கோ. என்ர அப்பாவை உங்களால் கொண்டுவந்து தரமுடியாது. என்னைக் கொண்டு போறியள். உங்களுக்கு வெக்க மில்லையோ? அவன் கூச்சலுடன் கார் மறைய "என்ர ராசா" எனக் கத்தியபடி அக்கா மயங்கி விழுந்தாள்.

ஆஸ்பத்திரியில் இருந்து அவன் வந்தபின் அவன் கதைப்பது விளங்கவில்லை. நாக்கு தடுமாறியது. உடம்பு இளைத்திருந்தது. அவன் தாயிடம் இதைத்தான் அடிக்கடி சொன் னான்.

"அம்மா, இந்த வீட்டை வித்துப்போட்டு எங்கயாவது போவம். இங்கே இருக்கக்கூடாது. அழிவுகாலம் வருகுது.

ஒரு உண்மை எனக்குத் தெளிவாகப் புரிந்தது. அக்காவின் கணவருக்கு ஏதோ நடந்துவிட்டது. மனது ஏதோ ஒன்றை பறி கொடுத்தது போன்ற நிலையிலி ருந்தது. அக்கா இப்போது கோயிலுக்கு போவதில்லை. வீடேகதியென இருக்கத் தொடங்கிவிட்டாள். அம்மாவும் இடையில் போய்ப்பாத்துவிட்டு வருவார். அக்காவிடம் என் மனதில் தோன்றும் சந்தேகங் களைக் கேட்டால் நிம்மதிவரும் போல் இருந்தது. நான் கிழமை க்கு ஒருநாள் தன்னும் போகாமல் விட்டால் அவர்களுக்குக் கஷ்ட மாக இருக்கும்.

எந்த அமளியிலும் அக்கா முகம் பொட்டின்றிக் காணப்பட்டதில்லை. எனக்கு அந்த உண்மை பளிச்சிட்டது. அக்கா பொட்டு வைத்திருப்பதால் அக்காவின் கணவர் இறக்க வில்லை. உயிருடன் தானிருக் கிறார். ஆனால் ஏன் இங்கு வராமல் இருக்கிறார்? சண்டை பிடித்துக் கோபித்துக் கொண்டு போய்விட்டாரா? அக்காவிடம் கேட்க வேண்டியது தான். என்னால் பொறுக்கமுடியாது. அதற்கேற்ற சூழ்நிலையை எதிர்பார்த்துக் காத்திருந்தேன்.

ஒருநாள் வந்தது. அக்கா தனியாக இருந்தாள். கோயிலில் மாலை நேரப் பூசைமணி அடித்து ஓய்ந்தது. அரசமர இலைகள் சலசலத்த சத்தம் தவிர வேறொரு சத்தமும் இல்லை.

"என்ன பெரியவருக்கு யோசனை? அக்கா தான் கேட்டாள். நான் ஒன்றுமில்லை என மழுப்பினேன். அக்கா விடவில்லை. "ஒருநாள் தன்னும் வாய்மூடிக்கொண்டு எனக்கு அருகில் கதிரையை இழுத்து வைத்துக் கொண்டாள்.

அக்கா... என தொடங் கிய எனக்கு தொண்டை அடைத்தது. பேச்சு வர மறுத்தது. கண்கள் என்னை அறியாமல் கலங்கியது. கடைசியில் கேட்டே விட்டேன். அக்கா பீறிட்டுப் பாயும் வெள்ளம் போல சொல்லத் தொடங்கினாள்.

"மூன்று வருசத்துக்கு மேலாக நான் என்னுடைய புருசனைத் தேடிக்கொண்டு இருக்கிறன். லீவிலை வீட்டுக்கு வந்து பொலநறுவைக்கு வேலைக்குப் போனவர். வீடு திரும்பவேயில்லை. இன்னமும் அவரைத் தேடிக்கொண்டுதான் இருக்கிறன். அவர் போய்வந்த, பழகிய இடங்களெல்லாம் விசாரி த்துக் கொண்டுதான் இருக்கிறன். ஒன்றும் தெரிய வரவில்லை. மூத்தவனுக்கு அப்பா என்றால் உயிர். நல்லா படிச்சுக் கொண்டி ருந்தவன். அப்பா காணாமல் போனதோட யோசித்து...

"அப்பா, ஏனம்மா களநாளா வரேல்ல?

"வருவார்"

"அம்மா ஏனம்மா கடிதம் ஒண்டும் போடாமல் இருக்கிறார்"

"போடுவார்"

"அம்மா அப்பா வீட்டை வரவேமாட்டாரா?"

........

"அப்பா.....அப்பா.....

நானும் எத்தன நாளைக் குத்தான் அவனைப் பேய்க் காட்டுறது. அக்கா தலையில் கைவைத்தபடி தொடர்ந்தாள். மூண்டு வருசமும் ஒண்டு மில்லாமல் நான் படுறபாடு. மூத்த வனுக்கு அப்பா காணாமல் போனதிலிருந்து ஒருவரிலும் நம்பிக்கையில்லை. சந்தேகம் தான். இவன்ர குணத்தைக் கண்டு ஒருத்தரும் வீட்டுக்கு வாறேல்லை. நான் யாரோடும் சிரிச்சுக் கதைத்தாலே அவனுக்குப் பிடிக்காது. என்னில ஒரே பயம்.

"ஏனம்மா, உவர் அடிக்கடி வந்து போகிறார்."

"அப்பான்ர சிநேகிதர், எங்கட நிலைமையை நினைச்சு சரியான கவலை. அதுதான் வந்து போகிறார்."

"இனிமேல் ஒருத்தரும் வீட்டை வரக்கூடாது. எல்லாருமே கள்ளங்கள் தான்.

"சரியாகப் பயந்தவன். அப்பா இல்லாததாலே அம்மாவும் எங்களை விட்டுப் போயிரு வாவோ என்ற பயம். விசர்ப் பிள்ளை. என்ர பிள்ளையளுக்காக நான் எவ்வளவு கஷ்டப்படுகிறன். இனியும் அவரைத் தேடிக் கொண்டிருக்கிறதில பலனில்லை. இப்படியே நான் திரிஞ்சால் பிள்ளையளின்ர வாழ்வு மண்ணாய்ப் போயிடும். சனத்து க்கு இதொண்டும் தெரியாது. நான் வடிவாய் இருக்கிறது பொறுக்கேல்ல. புருசனில்லாத எனக்கு பொட்டு என்னத்துக்கு. கோயிலுக்கு கும்பிடவாற சனங்கள் என் காதுபடக் கதைக்கும்.


பாக்கியம், யாரைப் பார்த்துக்கொண்டு இப்படி கும்பிடாமல் நிக்கிறாய்?"

"உங்க வைரவருக்கு முன்னால கும்பிடுற பெடிச்சியைப் பார்த்தியே." புருசனைக் காண வில்லை என்று கொஞ்சம் தன்னும் கவலப்படாமல் பொட்டை யும் வைச்சுக்கெண்டு என்னமாதிரி மினுக்கிக் கொண்டிருக்கிறா.

"எனக்கும் தெரியும். நான் என்றால் எப்பவோ செத்துப் போயிருப்பன் ஒரு நாளைக்குத் தன்னும் அவரைப் பார்க்காமல் இருக்கேலாது. சரி, அவரிட்டை இருந்து கடிதம் வருகுதெல்லே. "எல்லாம் வருகுது. அவரும் போய் பத்து வருசமெல்லே ஆகுது."

நான் ஒண்டும் பெரிசா அதைக் காதில போடுறதில்ல. எனக்கு மனம் இறுகிப்போச்சு. எனக்கு பொட்டும் புருசனும் ஒன்றுதான். நான் செத்தால் தான் என்ர பொட்டு அழியும். அதுவரை என்ர புருசன் என்னோட வாழ்ந்து கொண்டுதான் இருப்பார். என்னத்தை இழந்தாலும் புருசனை இழக்கக்கூடாது.

அக்கா சொல்லிக் கொண்டு பெரிதாகவிம்மி வாய் விட்டு அழுதா. எங்கட அம்மாவும் அப்பா இறந்து போனபோது இப்படித்தான் அழுதா. இப்பவும் அம்மா கத்தி அழுதது காதில் ஒலித்தது. "என்ர ஐயோ! என்ர ஐயோ!... இடையில் என்னை விட்டிட்டுப் போட்டியளே. நான் இந்தப் பிள்ளையளோட என்ன செய்யப்போறன். கடவுளே! அன்று அம்மாவும் அழுதா. இன்று அக்காவும் அழுகிறா. நாளை......



## சபித்திடும் உனக்காய்!....

மா. பரமேஸ்வரன்

என் நேசிப்புக்குரியவளே!
இப்போதெல்லாம்
யமனைப்போல
என்னையுனக்குப்பிடிப்பதேயில்லையே.

உன் வாழ்க்கையின் வண்ணங்களை
சப்பித் துப்பி அதன்மீது
கறுப்பு மூலாம் பூசியவனென
காறியுமிழ்ந்தாய்
என் எண்ணங்களின் எதார்த்தத்தினை
தவறியவையென தவிர்த்து
சிந்தனைகளைச் சிரச்சேதம்
செய்கின்றாய்.

என்னை மட்ட மிட்டு
உன்னை தம்பட்டமிட்ட
சத்தத்தில் என் மௌனமே
குற்றுயிராய் துடித்தது
தினந் தினமாய்....
நான் புரிந்துணர்வு
புல்லாங்குழலினை மீட்டும்
போதெல்லாம்
மூங்கில் காடுகளை
கோபத்தால் சபிக்கின்றாய்.

எந்த வழியில் என்னையுனக்கு
விளங்கப்படுத்துவது?
அத்தனை வழிகளும் பிள்ளைத்தனப்
பிடிவாதத்தால்
அன்றிருந்த A-9 போல
அடைக்கப்பட்டல்லவா போனது.

நேற்றிலிருந்து
உன் விரல்கள் விவாகரத்துத்
தாள்களை வருடும் சத்தத்தில்

என்னுயிரின் வடிவம்
ஓரங்குலம் குறைகின்றது

வேண்டாம் துணைவியே!
வேண்டவே வேண்டாம்....

இன்னும் எமக்குள் முயல்வோம்
விட்டுக் கொடுப்புக்களை
கற்றுக் கொள்வதற்கு!
எமக்காக...
எம் பிள்ளைகளுக்காக.....

## உன்னோடு.....



த.அகிலன்

எப்படி முடிந்தது
உன்னால்—கண்ணே
உன்னை நான்
காப்பதாய் என்
கனவு—ஆனாலும்
இது எப்படி
சாத்தியமாயிற்று
என்மிதமான உனதன்பு
என் குடும்பம்
கிராமம்
சமூகம்
நாடு—என
எவ்வாறு விரிந்தது
பூப்பறித்தாலே
மனசு நோகின உனக்கு
மரம் தறிக்கிற
தெளிவு யார்கொடுத்தது
எது எப்படியாயினும்
என்மிதமான உனதன்பு
இன்னும் அப்படியே
என்பதில் எனக்கு
துளியும் கரவில்லை—அது
இன்னும் புனிதமாயிற்று
உன்னால்....
எதிர்பார்—விரைவில்
நானும் உன்னோடு

# இளையநாதம்

## இலட்சிய மாணவன்

அமெரிக்காவில், ஐந்தாம் வகுப்பு மாணவன் ஒருவனை அவனுடைய தந்தை பாடசாலைக்குக் கூட்டிச் சென்று கொண்டிருந்தார். அக்காலத்தில் ஆபிரிக்க கறுப்பினத்தவரை கொத்தடிமைகளாக அமெரிக்கர்கள் பயன்படுத்தினர். வீதியோரங்களிலும், சந்தைகளிலும் ஆடு, மாடுகளை விலை பேசி விற்பது போல கறுப்பின ஆபிரிக்கர்கள் விற்கப்பட்டார்கள். தந்தையுடன் பாடசாலைக்குச் சென்று கொண்டிருந்த அந்த ஐந்தாம் வகுப்பு மாணவன் கறுப்பர்கள் விற்கப்படுவதை அவதானித்தான். அவன் தன் தந்தையிடம் "ஏன் அப்பா! இவர்களும் மனிதர்கள் தானே?" என்று கேட்டான்.

"ஆம் மகனே! மனிதர்கள் தான். இவர்களை நம் நாட்டவர்கள் வயல்கள், தொழிற்சாலைகள் மற்றும் கடுமையான வேலைகளுக்குப்பயன்படுத்துவார்கள்" என்றார். "அப்பா! இது அநியாயம்" என்று மகன் கூறினான். "மகனே! நீ சொல்வதை நான் பிழை என்று கூறவில்லை. ஆனால் இதைப் பற்றி முடிவெடுக்க நமக்கு எந்த அருகதையும் இல்லையே" என்று தந்தை கூறினார். "அப்பா! அப்படியென்றால் யார் தான் இந்த அநியாயத்தைத் தடுத்து நிறுத்த முடியும் " "மகனே நல்ல சிந்தனையுள்ள ஒரு தலைவர் நம் நாட்டில் உருவாகினால் அவரால் தான் அது முடியும்." "அப்பா! நம் நாட்டிற்கு நான் தலைவராக வருவதென்றால் என்ன செய்ய வேண்டும் என்று சொல்லுங்கள் அப்பா!"



"மகனே நீ நன்றாகப் படித்துப் பட்டதாரியாக வேண்டும். சட்டம், அரசியல் பற்றி முழுமையாகக் கற்க வேண்டும். தேர்தலில் போட்டியிட்டு மக்கள் உன்னை நாட்டின் தலைவராகத் தெரிவு செய்ய வேண்டும் என்றார்"

அப்பா கூறியதைக் கேட்ட மகன் துள்ளிக் குதித்தான். சிந்தித்தான். படித்தான். வளர்ந்தான், சிறந்த சனாதிபதியும் ஆனான். அவன் தான் அமெரிக்க சனாதிபதி ஆபிரகாம் லிங்கன். கறுப்பினத்தவர்களின் விடிவிற்கு வித்திட்டவர் என்பதும், கொத்தடிமை முறை ஒழிக்கப்படுவதற்கு ஆபிரகாம் லிங்கன் பாடுபட்டார், என்பதும் யாவர்க்கும் தெரிந்ததே. பிள்ளைகளே! நாமும் ஒரு இலட்சியத்துடன் கல்வியைத் தொடருவோமாக இருந்தால் நிச்சயமாக நமது இலட்சியமும் நிறைவேறும்.

**ராஜ்குமார்**
**மு/புதுக்குடியிருப்பு ம.வி**

## வாரம் ஒரு குறள்



**சிறுவர்களாகிய நாம் மற்றவர்கள் போற்றப் பெருமையுடன் வாழ வேண்டும். அதற்காக நாம் தற்பெருமையுடன் எம்மை நாமே புகழ்ந்து வாழ்வது கூடாது.**

**நாம் பெரியவர்களை எவ்வாறு மதித்து நடக்கின்றோமோ அவ்வளவிற்கு பெருமை சேரும்.**

**ஆனால் எமது பெருமையை தற்பெருமையாக்கிச் செருக்கடைவோமாயின் அது சிறுமையாகிவிடும்.**

**அதனையே வள்ளுவர் தனது குறள் மூலம் இவ்வாறு விளக்குகிறார்.**

"பணியுமாம் என்றும் பெருமை சிறுமை
அணியுமாம் தன்னை வியந்து."

## வாழைப்பழம்

*வாழைப்பழமாம் வாழைப்பழம்*
*மஞ்சள் நிற வாழைப்பழம்*
*சுவையான வாழைப்பழம்*
*விதையில்லா வாழைப்பழம்*

*முக்கனிகளில் ஒன்றாகும்*
*பிள்ளையாருக்கு பிடித்த வாழைப்பழம்*
*பூசைக்குச் செல்லும் வாழைப்பழம்*
*சிறுவர் விரும்பும் வாழைப்பழம்.*

*பா. தனுசன்*
*தரம் - 7A*
*C.C.T.M.S*
*வவுனியா.*

## தமிழீழம் பற்றிய சில தகவல்கள்

01) தமிழீழ விடுதலைப்புலிகளின் முதல் தாக்குதல் அணித்தலைவர் யார்?
லெப். சீலன்

02) விடுதலைப்புலிகள் வன்னியில் முதல் தாக்கிய பொலிஸ் நிலையம் எது?
ஒட்டுசுட்டான்

03) தமிழீழ விடுதலைப்புலிகளின் மகளிர் படையணி முதல் தாக்குதல் செய்த மாவட்டம் எது?
மன்னார் மாவட்டம்

04) தென் தமிழீழத்தில் முதல் கரும்புலித் தாக்குதல் நடத்தியவர் யார்?
மேஜர் ரங்கன்.

05) கண்டி வீதியில் முதல் தாக்கிய இராணுவ முகாம் எது?
கொக்காவில்.

06) களப்புகளை அதிகம் கொண்ட மாவட்டம் எது?
மட்டக்களப்பு.

தெ. மோகனதாசன்,
கிளி/புன்னைநீராவி வித்தியாலயம்.

## ஓவியத்துக்குள் ஓவியம் கண்டுபிடியுங்கள்




**பயங்கரமான சிங்கத்திற்குப் பயந்து சிங்கத்தின் தலைக்குள்ளேயே முயல் ஒன்று பதுங்கியுள்ளது. பதுங்கியிருக்கும் முயலைக் கண்டுபிடியுங்கள்.**

**இ.ராஜ்குமார்**
**மு/புதுக்குடியிருப்பு ம.வி.**

## கல்வியின் சிறப்பு


செல்வங்களுள் சிறந்த செல்வம் கல்விச் செல்வம். அது ஈடு இணையிலாச் செல்வம். ஆதலால் தான் வள்ளுவர் கேடில் விழுச் செல்வம் கல்வி என்றார். கெடுதல் அல்லது அழிதல் இல்லாத செல்வம் கல்வி என்பதே இதன் பொருள். கல்வி அழிவில்லாதது மட்டுமல்ல, என்றும் நிலைத்து நிற்கக் கூடியது.

பிற செல்வங்கள் அழிந்து விடக்கூடியன. ஒருவரிடமுள்ள கல்வி வெள்ளத்தினால் அழியாது, நெருப்பினால் வேகாது, கள்வர்களால் கொள்ளையிடவும் முடியாது. கல்வி கொடுக்கக் கொடுக்கக்கூடுமே ஒழிய குறையாது.

கல்வி சிறப்புடையது. கல்வி கற்றவரும் சிறப்புடையவர் மன்னனுக்குத் தனது தேசத்தில் தான் சிறப்பு. கற்றவருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு. எனவே ஒரு மன்னனை விடக் கற்றவர் சிறப்புடையவர். ஆகவே எல்லாச் செல்வங்களையும்விடக் கல்விச் செல்வமே உயர்ந்தது. ஆகவே நாங்கள் இளமையிலேயே கல்விச் செல்வத்தைப்பெற்றுச் சிறப்புடன் வாழ்வோம்.


த.தவராணி,
வள்ளிபுனம்.

## சிறுவர் கைவண்ணம்



**லோசிகா பிரபாகரன்**
**தூயமணி முன்பள்ளி**
**வட்டக்கச்சி.**

## குறுக்கெழுத்துப் போட்டி 12




**இடமிருந்து வலம்**
01. ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்று.
08. தாமரை
15. மோதிரம்.
20. ஓவியம்.
27. வெண்மைக்கு எதிரானவை தலைகீழாக உள்ளது.
32. பெண்.

**மேலிருந்து கீழ்**
01. மங்கலப் பொருள்.
23. காட்டு மிருகம் குழம்பியுள்ளது.
36. மாதங்களில் ஒன்று.

**குறுக்கெழுத்துப்போட்டி இல.10 இன் விடைகள்**

**இடமிருந்து வலம்**
01. சூரியகாந்தி.
07. தாலாட்டு.
18. கோதானம்.
21. பணயம்.
34. கலைம(கள்)

**மேலிருந்து கீழ்**
01. சூதாட்டம்.
06. திருகோணமலை.
09. பட்டம்.
17. தாயகம்.
20. முல்லை.
28. மதி.

**குறுக்கெழுத்துப்போட்டி இல.10 இன் பரிசுக்குரியவர்**

*செல்வி. வே.சுபிதா,*
*கிளி / கலவெட்டித்திடல்*
*நாகேஸ்வரா வித்தியாலயம்*
*புளியம்பொக்கணை*

பாராட்டுக்குரியவர்கள்

தனலெட்சுமி, J.S.தீனா,
கிருலப்பனை, கொழும்பு - 06.

வி. நித்தியா
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

அகல்யா அல்க்பான்சஸ்,
ஓடக்கரை வீதி, யாழ்ப்பாணம்.

அணலரசன்.
புன்னைநீராவி,விசுவமடு.

**இளையவர்களே!**
**மேலுள்ள கட்டத்தை வெட்டி சரியான சொற்களை இட்டு நிரப்பி அனுப்புங்கள்.**

குறுக்கெழுத்துப்போட்டி இல.12
**வெள்ளிநாதம்**
**ஈழநாதம்.**
முதன்மைச்சாலை,
கிளிநொச்சி.



# பெண்களுக்கு பொல்லாதது இது காலம்

கோஷி

எம்மவரிடம் ஒரு விந்தையான இயல்பு உண்டு. தனது செயலை மீட்டுப் பார்ப்பதை விடவும் மற்றவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை அறிய அதிகம் ஆசைப்படுவது.

அதிலும் பிரபலங்களின் வாழ்வையும் அவர்களின் உள்வீட்டுப் பிரச்சினைகளையும் அறிவதென்றால் அடங்காத ஆர்வம் இருக்கும்.

பாட்டி சொல்லும் ராஜா, ராணிக்கதைகளும் அரண்மனை அந்தப்புரத்துக் கதைகளும் இந்த உணர்வின் வழி வந்தவைகள் தான்.

இப்பொழுது அதிக பிரபலங்களை உருவாக்கும் - அதுவும் கவர்ச்சி மிக்கதாய் உருவாக்கும் துறையாக சினிமாத்துறை உருவாகிவிட்டது.

எனவே அவர்களின் வாழ்வு பற்றியும், அவர்களின் அந்தரங்கங்கள் பற்றியும் அதிகம் விற்பனையாகிறது.

வர்த்தக நோக்கிலயங்கும் எந்த இதழிலும், எந்தச் சஞ்சிகைகளிலும் இவர் களின் படமோ, கிசுகிசுக்களோ, பேட்டியோ இல்லாமல் இப்போதெல்லாம் அவை வெளி வருவதை காணமுடிவதில்லை. (காணமுடிந்தால் அவை வெளி வர முடிவதில்லையோ?)

சென்றமாதத்தில் நடிகை ஸ்நேகாவினுடனான பேட்டி மட்டுமே மூன்று இதழ் களில் வெளியாகியிருந்தது. (அதே மாதத்தில் நான் பார்த்திராது இன்னும் வெளிவந்திருக்கக் கூடும்)

பேட்டிகளில் இப்போது பத்திரிகையாளர் ஒருவர் பேட்டி காண்பதற்குப் பதிலாக ஒரே துறையில் ஆற்றல் மிக்க ஒருவர் இன்னொருவரையோ, அல்லது ஒரே துறையுடன் சம்பந்தப் பட்ட ஒருவர் இன்னொருவரையோ பேட்டி காண்பது வெளிநாட்டு ஊடகங்களில் அநேகம் பிரயோகிக்கப் படுகிறது. இந்த ஆளுமை வெளிப்பாட்டில் ஆழமான கருத்துக்கள் வெளிப்படுவதற்கு வாய்ப்புக்கள் அதிகம் தான். அப்படிப் பார்க்கும் போது இதுவொரு நல்ல பிரயோக முறையுங்கூட.

ஆனால் இத்தகைய முறையை தமிழ் இதழ்கள் எப்படிப் பயன்படுத்துகின்றன. இரண்டு சினிமாப் பிரபலங்களை இணைத்து விட்டல்லவா அவர்களை விற்பனையாக்குவதில் முண்டியடிக்கின்றன.

இந்த அடிப்படையில் தான் சென்ற மாதம் ஸ்நேகா - பார்த்தீபன் பேட்டி, ஸ்நேகா - லிங்குசாமி (இயக்குனர்) பேட்டி என்று தூள் பறத்தினார்கள்.

சென்ற மாதம் பெண்கள் வேலைத்தளங்களில் எதிர் நோக்கும் பிரச்சினைகள் பற்றி ஒரு இதழ் நால்வருக் கிடையேயான பேட்டியொன்றை எடுத்திருந்தது. ஒருவர் பெண் அரச அதிகாரி, மற்றொருவர் பெண் தனியார் நிறுவன அதிகாரி, அடுத்தவர் பெண் தொழிலதிபர், நாலாமவர் நடிகை ஸ்நேகா.

இத்தகைய ஒருகாத்திரமான கலந்துரையாடலுக்கு ஏன் ஸ்நேகாவை இழுத்து வந்தார்கள்? அவர் துறைசார்ந்தும் ஆழமான பெண்பிரச்சினைகளை வெளிப்படுத்தக் கூடியவர் என்பதாலா? அது தான் இல்லை. அதே மாதத்தில் வெளியாகிய லிங்குசாமியுடனான பேட்டியில் "ஒரு பெண்ணுக்கு எவ்வளவு சுதந்திரம் வேணுமெண்டு நினைக்கிறீங்க" என்று கேட்க "அதிகமா வேண் டாம். ஆனால் கொடுக்கிற சுதந் திரத்திற்கு அவங்க நம்பிக் கையா நடந்துக்கணும். சுதந்தி ரத்தை இப்ப பெண்கள் தப்பா உபயோகிக் கிறாங்கள். அதனால கொஞ்சம் ஸ்பொயிலா (நாசமாக்)கிறாங்கள். அதனால அதிக சுதந்திரம் வேணாமென்று தோணுது" என்று பதிலளிக்கிறார் ஸ்நேகா. இவரைத் தான் பெண்களின் பிரச்சினை பற்றிய கலந்துரையாடலுக்கு அழைத்திருக்கிறார்கள்.

ஏன் இப்படியெல்லாம் நடக்கிறது?

மர்மம் இதுதான்.

தமிழில் ஒலிபரப்பாகும் அநேகமான TV Chanals சென்ற வருடத்தின் கனவுக் கன்னியாக ஸ்நேகாவையே தேர்ந்தெடுத்துள்ளன. அதனால் தான் ஸ்நேகா எல்லாத்திற்காகவும் எல்லாத்திலும் விற்பனையாகிறார்.

கனவுக்கன்னிகளை அதிகமதிகம் உற்பத்தி செய்யும் தொழில்துறை இப்போது சினிமாத்துறைதான்.

எனவே ஊடகங் கள் சினிமாவையும் கனவுக்கன்னிகளையும் அதிகமதிகம் போட்டி யிட்டு விற்பனையாக்க வேண்டியிருக்கிறது.

ஊடகங்களின் அதிகமான விற்பனையில் தான் பண்டங்களின் விளம்பரங்களை அதி கம் விற்கமுடிகிறது.


விளம்பரங்களின் விற்பனை வீச்சில் தான் பண்டங்களின் விற்பனை தங்கியிருக்கிறன.

வர்த்தகமயமாகி விட்ட, மேலும் ஆகிவரும் இந்த உலகிற்கு கனவுக்கன்னிகளை உருவாக்கும் தேவை அதிகம் உண்டு. எனவே இதற்கான ஊக்குவிப்பும் அதிகமாய் நிகழும்.

பெண்களை விற்பனைக்கான கவர்ச்சிப் பண்டமாக மாற்றுவதற்கு அதிகம் ஊட கங்கள் பாடுபடப்போகின்றன என்பது ஒரு புறம்.

மற்றது கவர்ச்சியின் பேரால் எத்தகைய பண்டங்களையும் எங்களுக்குத் தந்து விடப் போகின்றன என் பது மறுபுறம்.

தப்பிப் பிழைக்க எப்படி விழிப்படையப் போகிறோம்.






# ஊர் கோலம்

நீண்ட காலத்திற்கு பின்னர் என்னுடன் ஊர்கோலத்தில் இணைகிறீர்கள். நீங்கள் பாதசாரியுடன் இணையவில்லை அல்லது அவர் உங்களைத் தன்னுடன் இணைத்துக் கொள்ளவில்லை. அவ்வளவுதான்.

பாதசாரியின் 'ஊர் கோலம்' காணல் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. சொல்லக்கூடிய கோலங்கள், சொல்லமுடியாத கோலங்கள், உள்வாங்கி உணர மட்டுமே முடிந்த கோலங்கள், மெல்லவும், விழுங்கவும் முடியாத கோலங்கள் என ஊர்கோலம் அழகுக் கோலங்களாகவும், அலங்கோலங்களாகவும், அமைதிக் கோலங்களாகவும் பார்வையில் பதிந்த வண்ணமேயுள்ளது.

எல்லாமே மனிதக் கோலங்களின் மனக்கோலங்கள் தான்...!

□□□□□

சமாதான சூழல் ஏற்பட்டு விட்டதாகக் கூறத் தொடங்கி ஓராண்டு கடந்து போய்விட்டது.

போர் நின்று விட்டதாக அரசு பிரகடனமும் பிரச்சாரமும் மேற்கொண்டு வந்தாலும் எமது ஊர்களின் கோலங்கள் போர்க் கோலத்தினின்றும் விடுபட்டதாக இல்லை.

சமாதான சந்தோசம் அச்சுறுத்தல்களுக்கும் அவலங்களுக்கும் அவமானங்களுக்கும் அப்பாற்பட்டதாக இருக்கவேண்டும். இல்லையேல் அது சமாதான சந்தேகமாகத்தான் இருக்க முடியும்.

சிறிலங்காப் படையினர் இன்னமும் தமது இராணுவத்தனத்திலிருந்து மனிதத்தனத்திற்கு மாறியதாகத் தெரியவில்லை. ஒன்றிரண்டு விதிவிலக்காக இருக்கலாம்...

சோதனைச் சாவடிகளில் அவர்களின் உளவியல் நடவடிக்கைகள் வெளிப்படையாகவே நிகழ்கின்றன.

தமிழன் சந்தேகிக்கப்படுகின்றான்... தொடர்ந்தும் அவமதிக்கப்படுகின்றான்.... தலைகுனியவைக்கும் நிகழ்வுகள் தொடர்கின்றன.உதாரணத்திற்கு சில உரையாடல்கள்.

1 "என்ன.... நீ புலிதானே....?"
"இல்லை ஐயா...."
"நீ புலிக்குச் சாப்பாடு குடுத்தது தானே...?"
"இல்லை ஐயா... நான் குடுக்கேல்லை...?"
"நீ புதுக்குடியிருப்பில அந்தப் பெரிய பேசுக்கு பக்கத்தில தானே இருக்கிறது...?"
"இல்லை ஐயா... கந்தசாமி கோயிலுக்குப் பக்கத்திலை...."
"கந்தசாமி கோயிலுக்கு புலி வாறது தானே...."
"....."
"என்ன பேசாம நிக்கிறது..."
"இதெல்லாத்தையும் நீங்கள் கை குலுக்கி சிரிச்சுப் பேசுற புலிகளிட்டையே கேட்கலாமே... ஏன் எங்களை உபத்திரவப்படுத்திறியள்..."
"சரி போ... பிரச்சினை வந்தா எல்லாம் தெரியும்"

கேட்டதுக்கு வயது இருபது- பதில் சொன்னவருக்கு வயது அறுபது.

2 என்ன ஐயா சமாதானம் எப்படி... சரிவருமா?
"சரிவந்தா நல்லது"
"சரிவராமல் போகுமா?"
"ஆருக்குத் தெரியும்...?"
"பிரபாகரனுக்குத் தெரியும் தானே..."
"ஏன் ரணிலுக்குத் தெரியாதா...?"
"ஐயா கோபம் வேண்டாம்.. சும்மா தான் கேட்டது.. போங்க... போங்க...'

பார்த்தீர்களா சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போக்கை..

□□□□

"கிரிக்கெட்டிலை இந்தியா... இலங்கை விளையாடினா நீ யார் பக்கம் நிற்பாய்"
"இலங்கைப் பக்கம்..."
"ஏன் இந்தியாவை உனக்குப் பிடிக்காதா?"
"அவங்கள் தான் எங்கட அண்ணனைச் சுட்டு, அப்பாவை அடிச்சுக் காலை முறிச்சவங்கள்... அவங்களை ஆதரிச்சா அண்ணாவுக்கு நான் துரோகம் செய்தவனாகி விடுவேன்..."
"இலங்கை மட்டும் யோக்கியமோ..?
"அது வேற... இலங்கையும் கென்யாவும் விளையாடினா நான் கென்யாபக்கம் தான்.... அவங் களும் எங்களைப்போல அடக்கி ஒடுக்கப்பட்ட இனம்...." –
"........"

புதுக்குடியிருப்புச் சந்தியில் மதி உணவகத்தின் முன்னால் இரு மாணவர்கள் பேசிக் கொண்டது.

பாதசாரி

குண்டுகளில் இருக்கும் வெடி மருந்துச் சத்தத்தை விட அதிகம், கருத்துக்களில் உள்ளது. – ஜான் ஹெய்ல் வின்ஸெண்ட்.

## உங்களை நீங்களே நெறிப்படுத்துங்கள்...



# எல்லா அதிசயங்களுக்கும் அடிப்படை நம்பிக்கையே...

**தன் மனதில் ஒருவர் எண்ணங்களை உருவாக்கிக் கொண்டு, தட்டிக் கொடுத்து, அத்துடன் ஒன்று அல்லது பலவித உணர்ச்சிகளைக் கலக்கும் போது ஒரு உந்து சக்தி பிறக்கும். அந்த நபரின் ஒவ்வொரு அசைவையும் அது வழிநடத்தும் கட்டுப்படுத்தும்.**

**விஞ்ஞான** விதிமுறைகளுக்கு எல்லாம் அப்பாற்பட்ட எல்லா அதிசயங்களுக்கும், புதிர்களுக்கும் அடித்தளம் நம்பிக்கையே.

பிரபஞ்சத்தில் பரவியுள்ள எல்லையில்லா ஞானத்தை நமக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதற்கான ஒரே வழிமுறை நம்பிக்கை.

உண்மையோ, பொய்யோ அதை ஒருவர் தனக்குள்ளே திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டால் கடைசியில் அதை நம்பும்படி ஆகிவிடும். இது எல்லார்க்கும் தெரிந்த விஷயம் தான். ஒவ்வொருவரின் மனதில் எப்படிப்பட்ட எண்ணங்கள் மேலோங்கி இருக்கிறதோ அதைப் போலவே அவர்கள் நடந்து கொள்கிறார்கள்.

தன் மனதில் ஒருவர் எண்ணங்களை உருவாக்கிக் கொண்டு, தட்டிக் கொடுத்து, அத்துடன் ஒன்று அல்லது பலவித உணர்ச்சிகளைக் கலக்கும் போது ஒரு உந்து சக்தி பிறக்கும். அந்த நபரின் ஒவ்வொரு அசைவையும் அது வழி நடத்தும்; கட்டுப்படுத்தும்.

இப்படிப்பட்ட கலவையில் உருவாகும் ஒரு 'காந்த' சக்தி அதைப் போன்ற அல்லது அது சம்பந்தமான எண்ணங்களை ஈர்க்கிறது. உணர்ச்சியோடு கலந்து காந்த சக்தியடைந்த ஒரு எண்ணம் செழிப்பான பூமியில் விதைக்கப்படும் ஒரு விதை போன்றது இந்த விதை முளை விட்டு, துளிர்த்து வளர்ந்து, விருட்சமாகி கிளை பரப்பிக் கொண்டிருக்கிறது. இந்த ஒரு விதையிலிருந்து கணக்கிட முடியாத அளவுக்கு விதைகள் தோன்றும் வரை வளர்ச்சி தொடர்கிறது.

மனதில் மேலோங்கி நிற்கும் எண்ணங்களுக்குத் தோதாக சுருதி சேரும் அதிர்வுகளை இடைவிடாமல் மனம் ஈர்த்துக் கொண்டே இருக்கிறது. ஒருவரின் மனதில் பதிந்துள்ள எண்ணம், யோசனை, திட்டம் அல்லது நோக்கம் எதுவாக இருந்தாலும், அது தனக்கு ஒத்துவரக்கூடிய எக்கச்சக்கமான சமாச்சாரங்களைத் தன் பக்கம் ஈர்த்துக் கொள்கிறது. இப்படிஒத்துவரும் 'சொந்தங்களை'க் கூட்டணி சேர்த்துக் கொண்டு மனம் வலுவடைகிறது. ஒருவரை ஆட்டுவிக்கும் சக்தியாக, உந்து சக்தியாக உருமாறும் வரை இப்படிக் கூட்டணி பலம் சேர்த்துக் கொள்வதை மனம் விட்டு விடாது.

இப்போது மறுபடியும் ஆரம்ப கட்டத்தை நினைவு படுத்திக் கொள்வோம். ஒரு யோசனை, திட்டம் அல்லது நோக்கம் என்ற நிஜமான விதையை மனதில் எப்படி பதிய வைப்பது? இது சுலபம். ஒன்றைத் திரும்பத் திரும்ப நினைவுபடுத்திக் கொள்வது மூலம் இது சாத்தியப்படும். எனவேதான் உங்களுடைய திட்டவட்டமான தலையாய குறிக்கோளை ஒரு அறிக்கை வடிவத்தில் எழுதிக் கொண்டு உங்கள் நினைவோடு பிணைத்துவிடவேண்டும் என்று முன்பு சொன்னேன். இப்படி எழுதியதை ஒவ்வொரு நாளும் திரும்பத் திரும்ப வாய்விட்டு சொல்லிப் பார்க்க வேண்டும் என்பதையும் நினைவுபடுத்திக் கொள்ளுங்கள் இந்த ஒலி அதிர்வுகள் உங்களுடைய ஆழ்மனதை எட்டும் வரையில் இப்படி சுயகட்டளை இட்டுக் கொள்வதை நிறுத்தக் கூடாது. உங்கள் வாழ்க்கையை ஒழுங்குபடுத்திக் கொள்வதற்காக, துரதிர்ஷ்டமான சூழ்நிலையின் பாதிப்புகளையெல்லாம் அடி யோடு துடைத்தெறிந்து விடுவதில் உறுதியாய் இருங்கள்.

உங்களின்மன வலிமையையும், பலவீனத்தையும் அலசிப் பார்த்தால் உங்களுடைய பெரிய பலவீனம் தன்னம்பிக்கை இல்லாமல் இருப்பதுதான் என்பது உங்களுக்குத் தெரியவரும். சுய கட்டளைக் கோட்பாட்டின் மூலம் இந்தக் குறைவைக் கையாளமுடியும். கோழைத்தனத்தை துணிச்சலாக மாற்றிக் கொள்ள முடியும். இந்தக் கோட்பாட்டைப் பின்பற்றுவது நல்ல சுலபம். நல்ல விதமான (ஆக்கபூர்வமான) எண்ணக்கீற்றை எழுதி வைத்துக் கொண்டு,

**நெப்போலியன் ஹில்**

நினைவில் பதிய வைத்து, திரும்பத் திரும்ப அதைச் சொல்லிக் கொள்ள வேண்டும். அவ்வளவுதான். உங்கள் அடி மனதில் இந்த எண்ணக்கீற்று உந்து விசையாக மாறும் வரையில் சுய கட்டளைக் கோட்பாட்டைப் பின்பற்ற வேண்டும்.

### ● தன்னம்பிக்கை சூத்திரம்

ஒன்று : என் வாழ்க்கையின் திட்டவட்டமான குறிக்கோளை அடைவதற்கான திறமை உடையவன் நான் என்பது எனக்குத் தெரியும். அதைச் சாதிப்பதற்காகத் தொடர்ந்து விடாப்பிடியாக செயல்பட வேண்டுமென்று என்னை நானே வலியுறுத்திக் கொள்கிறேன். அதிலிருந்து பின் வாங்கமாட்டேன் என்று இப்போது இங்கேயே உறுதி கூறுகிறேன்.

இரண்டு : என் மனதில் வியாபித்திருக்கும் எண்ணங்களுக்கு செயல்வடிவம் கொடுத்து படிப்படியாக அதை மனம் நிஜமாக்கிக் காட்டும் என்பதை நான் உணர்ந்திருக்கிறேன். நான் எப்படிப்பட்ட மனிதனாக மாற வேண்டும் என்று குறியாய் இருக்கிறேனோ அதைச் சுற்றியே தினமும் அரை மணிநேரம் என் சிந்தனை வட்டமிடும் வகையில் என் எண்ணங்களை ஒரு முகப் படுத்துவேன். இப்படிச் செய்து என் மனதில் ஒரு தெளிவான சித்திரத்தைத் தீட்டிக் கொள்வேன்.

மூன்று : என் மனதில் ஆழமாகப் பதிந்துள்ள ஆசை நிஜமாவதற்கு சில நடைமுறை சாத்தியமான வழிமுறைகளைச் சுய கட்டளைக் கோட்பாடு மூலம் மனம் தேடிக் கண்டு பிடிக்கும் என்பது எனக்குத் தெரியும். எனவே, தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்வதற்காக தினமும் பத்து நிமிடங்களை ஒதுக்குவேன்.

நான்கு : திட்டவட்டமான எனது வாழ்க்கை லட்சியத்தைத் தெளிவாக விளக்கி எழுதியிருக்கிறேன். அதை அடைவதற்குத் தேவையான தன்னம்பிக்கையை நான் வளர்த்துக் கொள்ளும்வரை எனது முயற்சியைத் தொடர்வேன்.

ஐந்து : உண்மையின் அடிப்படையிலும் நீதியின் அடிப்படையிலும் வராத எந்த அந்தஸ்தும், செல்வமும் நிலையானது அல்ல என்பதை முழுமையாக உணர்கிறேன். சம்பந்தப்பட்டவர்களுக்குப் பலன் தராத எந்தக் காரியத்தையும் நான் செய்ய மாட்டேன். நான் பயன்படுத்திக்கொள்ள விரும்பும் சக்திகளையும், பிறரின் ஒத்துழைப்பையும் என் பக்கம் இழுத்துக் கொள்வதில் வெற்றி பெறுவேன். மற்றவர்களுக்குப் பணியாற்ற நான் விரும்புவதால், அவர்களுக்கு எனக்குப் பணியாற்ற தூண்டுதலாக இருப்பேன். பிறரைப் பற்றிய எதிர்மறையான கண்ணோட்டத்தால் வெற்றி கிடைக்காது என்பது எனக்குத் தெரியும். எனவே வெறுப்பு, குரோதம், பொறாமை, சுயநலம், பிறரின் குற்றம் குறைகளைப் பெரிதுபடுத்துவது என்பதையெல்லாம் களைந்து விட்டு எல்லாரிடமும் நேசத்தை வளர்த்துக் கொள்வேன். என் மீதும், பிறர் மீதும் நான் நம்பிக்கை வைக்கப்போவதால் மற்றவர்களையும் என்னை நம்பும்படி செய்வேன். இந்த சூத்திரத்தை முழு மனதோடு ஏற்றுக் கொண்டு என் நினைவில் பதித்துக் கொள்வேன். இதை முழுநம்பிக்கையோடு தினமும் ஒரு தடவை சத்தமாக திருப்பிச் சொல்லி, எனது சிந்தனையிலும் செயலிலும் அதைப் பிரதிபலிக்க வைத்து சுயசார்புள்ள, வெற்றி பெறும் மனிதனாக நான் உயர்வேன்.

இயற்கையின் ஒரு விதி தான் இந்த சூத்திரத்தின் அடிப்படை. இதை யாராலுமே இதுவரை விளக்க முடியவில்லை. இதன் பெயர் என்ன என்பதெல்லாம் முக்கியமல்ல. இதை ஆக்கப்பூர்வமாகப் பயன்படுத்தினால், மனித சமுதாயத்தின் புகழுக்கும் வெற்றிக்கும் அபரிமிதமான பலன் கிடைக்கும் என்பதுதான் இதன் முக்கிய அம்சம், மாறாக இதை அழிவுப் பாதையில் செலுத்தினால் நாசம் தான்.

சுயகட்டளைக் கோட்பாட்டைக் கெட்ட விதமாகப் பயன்படுத்துவோரின் வாழ்க்கை, தோல்வியில் அடிபட்டு வறுமை, துயரம், சோகம் என்றே முடிந்து போகும். எல்லா எண்ணப் பொறிகளும் தத்தம் தன்மைக்கு ஏற்ப நிஜமாகின்றன.

எண்ணப்பொறியில் ஆக்க பூர்வமானது எது? நாசகரமானது எது? என்பது பற்றியெல்லாம் ஆழ்மனம் அலட்டிக் கொள்ளாது. நமது எண்ணப்பொறிகள் மூலம் எந்த விஷயத்தை நாம் ஆழ்மனதுக்குச் செலுத்துகிறோமோ அதன்படி அது செயல்படுகிறது.

எந்த அளவுக்கு இதைப் புரிந்து கொண்டு செயல்படுகிறீர்களோ அதைப் பொறுத்தே உங்களின் அமைதி, செழிப்பு, துயரம், தோல்வி, மரணம் எல்லாமே அமையும்.

எல்லையில்லாத ஞானத்தோடு தொடர்பு கொண்டு, அதைப் பயன்படுத்திக் கொள்ளும் உங்கள் திறமை பற்றி அச்சமும், அவநம்பிக்கையும், சந்தேகமும் உங்கள் மனதில் பரவியிருந்தால் அதைத்தான் சுயகட்டளை விதி கிரகிக்கும். இந்த அவநம்பிக்கை உயர்ச்சியைத்தான் ஆழ்மனம் நிஜமாக்கிக் காட்டும். பாய் மரத்தைக் கையாளுவதைப் பொறுத்து காற்று எப்படி ஒரு கப்பலை கிழக்கிலும் இன்னொரு கப்பலை மேற்குத் திசையிலும் கொண்டு செல்கிறதோ, அதைப் போலத்தான் சுய கட்டளை விதி ஒருவரை உயர்த்தும் அல்லது வீழ்த்தும்.

### ● உங்கள் மூளைக்குள் எப்படிப்பட்ட மேதை புதைந்து கிடக்கிறாரோ?

சாதனைக்கான ஆதார சக்தி உங்களுக்குள்ளே எங்கோ ஒரு மூலையில் நீறு பூத்த நெருப்பாய் மறைந்துள்ளது. அதை ஊதி கொழுந்துவிட்டு எரியச் செய்தால், நீங்கள் கொஞ்சமும் நினைத்துப் பார்த்திருக்க முடியாத சிகரத்தில் உங்களை அழைத்துச் செல்லும். உங்களுக்கு சிம்மாசனம் அமைத்துக் கொடுக்கும்.

வயலின் தந்தியை லாவகமாக மீட்டி அற்புதமான இசையை ஒரு இசை மேதை பொழிய வைப்பது போல உங்கள் மூளையில் முடங்கிக்கிடக்கும் அபார சக்தியைத் தட்டி எழுப்பி நீங்கள் நினைப்பதைச் சாதிக்க முடியும். அந்த சக்திதான் உங்கள் உயர்வுக்கு உந்து சக்தி.

நாற்பது வயதைத் தாண்டிய பிறகும் கூட ஆப்ரஹாம் லிங்கனுக்கு தொட்டதெல்லாம் தோல்விதான். அவர் வாழ்க்கையில் ஏற்பட்ட ஒரு அபாரமான அனுபவம் அவர் நெஞ்சுக்குள்ளும், மூளைக்குள்ளும் முடங்கிக் கிடந்த அந்த மேதையைக் கிளர்ந்து எழச் செய்தது. அதுவரை முகவரி இல்லாத ஆசாமியாக இருந்த அவரை அந்த அனுபவம் தான் மகத்தான மனிதராக மாற்றியது. துயரமும், காதலும் இணைந்த உணர்ச்சிக் கலவை, அந்த அனுபவம். லிங்கனின் உயிருக்குயிரான காதல் மனைவி ஆன் ரட்லட்ஜ் மூலம் கிடைத்த அனுபவம் அது.

நம்பிக்கை மனோபாவமும், காதல் உணர்ச்சியும் ஒரே மாதிரியானவை என்பது சந்தேகமில்லாத விஷயம். ஒருவரின் எண்ணக்கீற்றை தெய்வீகவரமாக மாற்றும் சக்தி உடையது காதல். பலநூறு பேரின் வாழ்க்கையையும், அபார சாதனைகளையும் நான் ஆராய்ந்தபோது, ஒவ்வொருவரின் வெற்றிக்குப் பின்னணியில் ஒரு பெண்ணின் காதல் பக்க பலமாக இருந்ததைக் கண்டேன்.

நம்பிக்கையின் சக்திக்கு சான்று பார்க்க விரும்பினால், அதைப் பயன்படுத்தி வெற்றி பெற்ற சாதனையாளர்களின் வாழ்க்கையைப் படிக்கலாம்.

**சாதனைக்கான ஆதார சக்தி உங்களுக்குள்ளே எங்கோ ஒரு மூலையில் நீறு பூத்த நெருப்பாய் மறைந்துள்ளது. அதை ஊதி கொழுந்துவிட்டு எரியச் செய்தால், நீங்கள் கொஞ்சமும் நினைத்துப் பார்த்திருக்க முடியாத சிகரத்தில் உங்களை அழைத்துச் செல்லும். உங்களுக்கு சிம்மாசனம் அமைத்துக் கொடுக்கும்.**

கிறிஸ்துவ மதத்தின் அடிப்படையே நம்பிக்கைதான். அந்த அபார சக்தி பற்றி எத்தனையோ பேர் திரித்தும் பழித்தும் பேசியிருக்கலாம் என்பது தேவையில்லாத விஷயம். இயேசுநாதர் பிரசங்கத்தின் அர்த்தத்தையும், சாரத்தையும், அவரின் சாதனைகளையும் 'அதிசயங்கள்' என்று கூடச் சொல்வார்கள். அதெல்லாமே நம்பிக்கை தவிர வேறொன்றும் இல்லை. அப்படி ஏதாவது 'அதிசயங்கள்' நடந்திருந்தால் அவையெல்லாம் நம்பிக்கை என்ற மனோபாவத்தால் மட்டுமே படைக்கப் பட்டவை.

நம்பிக்கையின் பலத்தால் எப்படியெல்லாம் சாதிக்க முடியும் என்பதை நிரூபித்துக் காட்டி பெரும் புகழ் பெற்றவர் மகாத்மாகாந்தி. உலகத்திற்கு ஒரு அதிசயமான உதாரணம் இந்த விந்தை மனிதர். அவர் காலத்தில் வாழ்ந்தவர்களிலேயே அதிக சக்தி படைத்த மனிதர் இவர்தான். இத்தனைக்கும் இவரிடம் அதிகாரத்தின் அம்சங்களான பணபலமோ படைபலமோ இல்லை. தன்னுடையது என்று சொல்லிக் கொள்ள வீடு கிடையாது. உடை கூட இல்லை. ஆனால் அவரிடம் அதிகாரம் இருந்தது. இந்த அதிகாரம் எப்படி அவருக்கு வந்தது?

நம்பிக்கைக் கோட்பாட்டைச் சரிவரப் புரிந்து கொண்டதால் அதிகார சக்தியை அவர் உருவாக்கிக் கொண்டார். சுதந்திரம் அடைவோம் என்ற நம்பிக்கையைப் பலகோடி மக்களின் மனதில் துளிர்விடச் செய்த சாதனையால் அவருக்கு அதிகார சக்தி கிடைத்தது.

பலகோடி மக்களின் மனங்களை ஒன்றிணைத்து ஒரு முகமாக ஒரே திசையில் மக்கள் சக்தியை வழி நடத்திய பிரமிப்பான சாதனையை நடத்திக் காட்டியவர் மகாத்மாகாந்தி!

நம்பிக்கையைத் தவிர வேறு எந்த சக்தியால் இந்த பூமியில் இப்படி சாதித்துக் காட்ட முடியும்?

# தண்ணீருக்காக

பிளாஸ்ரிக் போத்தல்களில் அடைக்கப்பட்டு நீர் கடைகளில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளமையை நாம் காணுகிறோம். 1/2 லீட்டரிலிருந்து, 15 லீட்டர் வரையிலான அழகிய கொள்கலன்களில் நீர் விற்பனைக்கு வந்துள்ளது. திறந்துவிடப்பட்டுள்ள போட்டிச்சந்தையில் அமோகமாக நீர் வாணிபம் நடைபெறுகிறது.

மனிதகுலத்திற்குப் பொதுவான இயற்கைதரும் நீரும் கூட வாணிபப்பண்டமாக மாறியுள்ளது வேதனைகுரியது. ஆனால் எங்கும் எதிலும் "யாதுமாகி நிற்கும்" தாராளப் பொருண்மியத்தின் லாப வேட்கையின் நீண்ட தொடர் செயற்பாடுகளில் ஒன்றாக நீர் வாணிபம் விளங்குகிறது.

மனித பாவனைக்கான நீருக்கு ஏற்பட்ட அவலந்தான் என்ன? சுத்த நீருக்கான மனிதத் தேடல் பெரும் அவலமான கதையாக நம் முன் விரிகிறது.

பூமிப்பந்தின் தொண்ணூறு விழுக்காட்டுக்கதிகமான பரப்பளவை நீர் கொண்டுள்ளது. மனிதனின், தாவரங்களின் அன்றாட இயங்குதலில் நீர் பெரும்பங்கை வகிக்கிறது. இயற்கையின் இயங்குதலில், நீர் அழிவதில்லை. ஆனால் சுத்தமான, பாவனைக்கேற்ற நீருக்கு தட்டுப்பாடுள்ளதே.

இதற்கு பாவனைக்குதவாதவகையில் நீர் மாசடைவதுவும், மழைநீர் பொருத்தமான வழிமுறைகளில் சேகரிக்கப்படாது வீணாக கடலைச் சென்றடைவதுமே பொதுவான காரணங்களாகக் கருதப்படுகின்றன.

சுத்தமான நீருக்கான, தட்டுப்பாடு புற நகரப்பகுதி களிலேயே அதிகமாகக் காணப் படுகிறது.

இன்று நிலவும் திட்டமிட்டப்படாத "சுதந்திரப் பொருண்மிய" நடவடிக்கைகள் காரணமாக தொழில் மற்றும் வர்த்தக நகரங்களை நோக்கி, வேலை வாய்ப்புக்குறைந்துவரும் கிராமங்களிலிருந்து மக்கள் நகருகிறார்கள். இவர்கள் புறநகரங் களில் எழும்சேரிப்பகுதிகளில் நிலை கொள்ளுகிறார்கள். நகரங்களில் உள்ள நீர்த்தட்டுப்பாடு காரணமாக, இவர்கள் தொழிற் சாலைகளின் கழிவுநீர்வடியும் வாய்க்கால்கள், நீர்நிலை களிலுமிருந்தே அன்றாட பாவனைக்காக அசுத்த நீரைப் பெறுகிறார்கள். உலகில் வருடாந்தம் 2 மில்லியன் மக்கள் அசுத்த நீப் பாவனையினால் உயிரிழக்கிறார்கள் என்கிறது திடுக்கிடும் தகவல் ஒன்று.

தென்னாபிரிக்காவின் டேபன் நகரின் புறநகர் சேரிகளில் பாவனைக்குகந்த நீருக்காக மக்கள் அரசாங்கத்துடன் மோதுகிறார்கள். இப்பகுதிகளுக்கான நீரினை



அரசாங்கமே விநியோகிக்கிறது. அண்மையில் அரசாங்கத்தினால் நீருக்கான கட்டணம் உயர்த்தப்பட்டபோது மோதல் உருவாகியது. மிகக் குறைந்த வருமான மட்டம் கொண்ட இங்கு வாழும் கறுப்பின, இந்திய வம்சாவளி மக்களால் அதிகரித்த கட்டணத்தைச் செலுத்த முடியவில்லை. மாதாந்த நீர்க்கட்டணம் செலுத்தப்படாத விடத்து அரசாங்கம் நீர் விநியோகத்தைத் துண்டித்து விடுகிறது. மக்களும் வேறு வழியின்றி, நீர்க்குழாய்களைத்திறந்து விடுகிறார்கள். பெரும்திரளாக மக்கள் இதனைச் செய்கிறார்கள். "சட்டமும் ஒழுங்கும் பேணப்பட வேண்டுமே"- காவல்துறையினர் தடுக்க மோதல் வலுக்கிறது. நீதி வழங்கப்படும் என்ற வகையில் மக்களால் பொது நன்மைகருதி வழக்குத்தொடரப்பட்டபோது, வழக்கும் தோற்றுவிட்டது. "நீர் எமது வாழ்வுரிமை. அதை அரசாங்கம் தடுக்கிறது." என்கிறார் லெஸ்ற்கிளிப் புறநகரவதிவோர் சங்கத்தலைவர் திருமதி. பிள்ளை. நகரக்கழிவுநீர் கலக்கும் சிற்றோடைகளே இம் மக்களுக்கான நீர்த் தேவையைப் பூர்த்தி செய்கின்றன. தனியார் மயப்படுத்தலில் "தாகங்கொண்ட" அரசாங்கம் நீர்விநியோகத்தை பிரெஞ்சு நிறுவனமொன்றுக்குக் கையளித்துள்ளது.



பாவனைக்குகந்த நீரைப் பெறுவதில் இந்தியாவில் மோசமான நிலையைக் காணுகிறோம். நீர் தேடிகிராமத்துப் பெண்கள் மிக நீண்டதூரம் நடக்கிறார்கள். நகரத்தில் குழாய் நீர் வசதியுள்ளவர்களிலும் பார்க்க கிராமப்புற குழாய்நீர் வசதியற்ற வர்கள் நீருக்காக அதிகளவு செலவளிப்பதாக ஒப்பீட்டுத்தகவல் தெரிவிக்கிறது. நீர்தேடலுக்கான உழைப்பும், நேரமும் அன்றாட வருமானத்திலும் அதிகமான செலவீனமாகி விடுவதுமுண்டு. குஜராத் மாநிலத்தில், கிராமப்புற மக்கள் முன்னுதாரணமாக வரவேற்கத்தக்க நடவடிக்கைகளில் இறங்கியுள்ளனர். பாரம்பரிய மழைநீர் சேகரிப்பு முறைகளில் (RAINWATER HARVEST) வீடுகளில் மழைநீர் சேகரிப்பதோடு, சிறு நீர்நிலைகளையும் அமைத்துள்ளனர். அத்துடன் 400 சிறு குளங்களும் மனித உழைப்பின் மூலம் அமைக்கப்பட்டுள்ளன. அரசாங்கமோ அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களோ எவ்வித ஒத்துழைப்பையும் மக்களுக்கு வழங்கவில்லை, மக்களும் நாடவில்லை. இதன் காரணமாக கடும் வரட்சிக்காலத்திலும் கூட குளாய்கள், நீர்நிலைகள், கிணறுகள் வற்றுவதில்லை.

தமிழ் நாட்டில், சென்னை மாநகராட்சி, கோடைக்கால வரட்சியைத் தவிர்ப்பதற்காக மழைநீர் சேகரிப்பைக் கட்டாய மாக்கியுள்ளது புதிதாகக் கட்டப்படும் வீட்டு வளவுகளில், வழிந்தோடும் மழைநீர் எளிமை யான வடிகட்டலுடன் சிறு குழி களில் சேகரிக்கப்படுகிறது. இதனால் நிலத்தடிநீரின் அளவு அதிகரிக்கிறது. தமிழீழப் பிரதேசங்களிலும், பாவனைக்குகந்த நீருக்காக மக்கள் நீண்ட தூரம் செல்வதைக் காணுகிறோம். வரட்சிக்காலங்களில் இவ்வவலம் அதிகரிக்கிறது.

சூழலை மாசுறுத்தும் மனித செயற்பாடுகளும், காடழிப்பும் வரட்சிநிலை அதிகரிப்பிற்குத் காரணம் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. நீர்வளத்தினை குறைந்த பட்சமாகத்தக்க வைத்துக் கொள் வதற்கு சூழல் பாதுகாப்பு முக்கியத் துவம் பெறுகி றது என்பது உணரப்பட்டாலும் கூட, சூழல் பாதுகாப்பிற் கான நடைமுறைகள்: சர்வதேச நியம, சட்ட வடிவங்கள் பெறு வதற்கு மேற்குலகத்தின் சுயலாப நோக்குகள் இடர்களை ஏற்படுத்து கின்றன.

இயற்கைச் சூழல் பாதுகாப்பும் பாவனைக்குகந்த நீர்வளமும் ஒன்றுடன் ஒன்று பிணைக்கப்பட்டுள்ளன. இவ்வகையில் தமிழீழத்தில் காடழிப்பு செயற்பாடுகள் முற்றாகத் தடுக்கப்பட்டுள்ளமையும், மீள்காடு உருவாக்கமும் எதிர்காலப்பயனுறுதி வாய்ந்தவை. அதேபோன்று மழைநீர் சேகரிப்புக்கான திட்டமிடுதலும், விரைந்த செயற்படுகையும் மிக்க அவசியமான, நடவடிக்கைகளாக முன்னெடுக்கப்பட வேண்டியவையாகும். அத்துடன் விவசாயத்திலும், அன்றாட நீர்ப்பாவனையிலும் பொருத்தமான நீர் முகாமைத்துவ செயற்பாடுகள் கவனிப்பிற்குரியவை.

**இ.இமையவன்**

இவ்வாரம், ஜப்பானில் இடம்பெற உள்ள மூன்றாம் உலகநாடுகளின் நீர்வளம் குறித்த சர்வதேச கருத்தரங்கு, நீர்வளம் குறித்த ஆய்வுகளையும், செயற்படுகைக்கான வழிமுறைகளையும் முன்னிறுத்தும் என்ற நம்பிக்கையை ஊட்டுகின்றது. பாவனைக்குகந்த நீர் தேடல் எனும் எரியும் பிரச்சினைக்கு தீர்வு நீர்வள அதிகரிப்பே.

# மீள்கட்டுமான அபிவிருத்தியில் மக்கள் பங்களிப்பே முக்கியமானது

மிக நீண்டகாலத்திற்குப் பின்னர் மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகப்பெரியதொரு அபிவிருத்தித்திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு வாகரையில் வடக்கு கிழக்கு சமூக மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வாகரை சுற்றயற்கூறு வைத்தியசாலைக்கான அடிக்கல் நடப்பட்டுள்ளது.

அரை நூற்றாண்டு கால வரலாற்றைக் கொண்ட வாகரை வைத்தியசாலை 1990ம் ஆண்டு காலப்பகுதியில் நடைபெற்ற, தமிழீழ விடுதலைப் போரின் உச்சக்கட்ட நிலை யுத்தத்தில் இராணுவத்தினரால் முழுமையாகத் தாக்கி அழிக்கப்பட்டது.

மட்டக்களப்பு திருமலை பிரதான வீதியில் உள்ள பிரதேசம் தன் பொலிவிழந்து இன்று வாடிப்போய்க் காட்சி தருகிறது.

பெருந்தொகையான மக்களை தன்னகம் கொண்டிருந்த மட்டக்களப்பின் முக்கிய உற்பத்திகள் பலவற்றை விளைவித்துத் தந்த வண்ணமுள்ள வாகரை தன்னை விட்டு வெளியேறி கலைந்து திரியும் சிதறிக்கிடக்கும் தம் மக்களை உள்வாங்க முடியாத நிலையில் இன்றுள்ளது.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள முக்கிய பிர தேசங்களில் ஒன்றான வாகரையில் வடக்குக் கிழக்கு சமூக மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் முதற்படியில் வாகரை வைத்தியசாலை அமைக்கப்படுகிறது.

வைத்தியசாலையின் அடிக்கல் நாட்டு விழா நிகழ்வில் கலந்துகொண்ட ஆசிய அபிவிருத்திவங்கியின் இலங்கைக்கான பிரதிநிதி இது இவ் அபிவிருத்தித் திட்டத்தின் முதற்கட்டமே. நேரில் வந்து இப்பகுதி மக்களைப் பார்த்த போதுதான் வைத்திய வசதியின்றி இவர்கள் எந்த அளவு தூரம் சிரமங்களை அனுபவித்திருப் பார்கள் என்பது விளங்குகிறது என்றார்.

பிரதேசத்தின் நிலைமைகளைப் பார்வையிட்ட போது அதனை விடவும் யுத்தத்தின் கொடுமை மிகக்கொடூரமானதாக இருந்திருக்கும் எனவும் புலனாகிறது என பிரதிநிதி யோன் ஆர் கூனி தெரிவித்தார்.

கடலோரப் பிரதேசமான வாகரை மற்றும் வாகரையை அண்டிய பகுதிகள் கடந்த இருபது வருட கால யுத்தத்தில் சிதைவுற்று இராணுவத்தினரின் மிக அதிகப்பாடான நெருக்கு வாரங்களினூடு துவண்டு நிமிர்கிறது.

அரச பிரதிநிதிகளோ வெளிநாட்டு மற்றும் மனிதா பிமான உதவி புரிவோரோ இராணுவத்தினரின் அனுமதியின்றி இப்பகுதிகளினுள் உள்நுழைய முடியாத நிலை கடந்த வருடம் ஏற்படுத்தப்பட்ட யுத்த நிறுத்த உடன்பாடு மூலம் குறைக்கப்பட்டுள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தைகள், அபிவிருத்தித் திட்டங்கள் எல்லாமே பொய்ப்பிரச்சாரம் என விசம நோக்கில் தம்கருத்தை முன் நிறுத்தி வந்தவர்களின் வார்த்தைகளுக்கெல்லாம் இவ் வைத்தியசாலையின் அடிக்கல் நாட்டு வைபவம் ஒரு வாயடைப்பாக மாறியுள்ளது.

கல்வி,சுகாதாரம், போக்குவரத்து சேவைகளில் பெரும் இன்னல்களை அனுபவித்து வந்த வாகரைப் பிரதேச மக்கள் இன்னும் ஒரு வருட காலத்தினுள் மீண்டும் தம் நலன் பேணும் வைத்தியசாலையினைப் பெறவுள்ளனர்.

கரையோர மக்களின் முக்கிய தொழிலான கடற் தொழிலுக்கு பெயர் போன வாகரை மீண்டும் தன் மெய்மை நிலையை விரைவில் பெற்றுக் கொள்ள உள்ளது.

நெகோட் என அழைக்கப்படும் வடக்குக் கிழக்கு சமூக மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் முதலாவதாக ஆரம்பித்துள்ள வாகரை வைத்திய சாலை அமைப்புத் திட்டம் முழுமையான வெற்றியுடன் நிறைவுபெறவேண்டும்.

அதுவே சமாதான நோக்கிலும், அபிவிருத்தி நோக்கிலும் ஒரு சாராரின் சந்தேகப் பார்வைகளில் இருந்து நெகோட்டின் கனவான துரித மீளமைப்பு, அதிக அபிவிருத்தி என்ற எண்ணப்பாடு, உறுதிப்பாடு நிறைவேறியதாக அமைவதற்குச் சான்றாகும்.

அதற்கு நெகோட்டின் நோக்கான "துரிதம்" என்ற நிலைக்கு தமிழ் பேசும் மக்கள் முழு அளவில் ஒத்துழைப்பதே பெருந்தன்மையும் கடமையும் ஆகும்.

கட்டட இடிபாடுகளையும் காடு

**அதிரன்**

வளர்ந்த பசுமை நிலங்களையும் காண வேண்டியுள்ள தமிழீழ மண்ணின் முழு நிலப்பரப்பும் புதுப் பொலிவுடன் செழித்து, வளம் கொழிக்க இன்றைய சமாதானச் சூழலில் ஆரம்பிக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் உண்மையில் நம் வாழ்விடங்கள் நோக்கியவையே.

யாரை நம்பியும் இல்லை என்ற நிலையை உருவாக்கி விட்ட தமிழ் மக்களின் போராட்டம் இன்று மிகப் பெரிய மக்கள் போராட்டமாக வடிவமாற்றம் பெற்று வளர்ச்சி பெறுகிறது. இது நம் அனைவரதும் கனவுகளையும் நிறைவேற்றுவதாக இருக்கட்டும்.

## ஈழநாதத்தின் வார வெளியீடான வெள்ளி நாதத்தின்

### விளம்பரக் கட்டணம்

| | உட்பக்கம் கறுப்பு வெள்ளை | பின் பக்கம் வர்ணம் (கலர்) |
|---|---|---|
| முழுப்பக்கம் | 12000\= | 20000\= |
| அரைப்பக்கம் | 6000\= | 10000\= |
| செ. மீ. கொலம் | 60\= | 100\= |
| ஒப்பந்த அடிப்படையில் | 48\= | 80\= |


## தமிழீழ மாவட்ட நீதிமன்று,கிளிநொச்சி

வழ.இல:-10/2002
தன்மை:-மணநீக்கம்.
வழக்காளி:
நாகநாதன்-உதயகுமார்
இல:53,ஸ்கந்தபுரம், கிளிநொச்சி.

"எதிர்"
உதயகுமார்-சுசிலாதேவி
மே/பா.தங்கரெத்தினம்
(கிளியம்மா)
கோபிகுடியிருப்பு, துணுகாய்.

### இடைக்காலத்தீர்வை

இந்த 2002ம் ஆண்டு 9ம் மாதம், 16ம் நாள், இவ்வழக்கில் வழக்காளியும் அவரது சட்டத்தரணியும் சமுகமாயிருக்க, இம்மன்றின் நீதியாளர் திரு.செ.மயூரன் அவர்கள் முன்னிலையில், மன்றின் திறந்த அமர்வில் வழங்கப்பட்ட தொடர் சட்ட நடவடிக்கைகளின் அடிப்படையில் அமைந்த ஒருமுகத் தீர்ப்பின் படி எதிராளியானவர் 25-8-2002 அன்று ஈழநாதம் பத்திரிகையில் பகிரங்கமாகப் பிரசுரிக்கப்பட்ட பகிரங்க அறிவித்தலுக்கமைய "தான்" நேரடியாகவோ, அல்லது தனது நிலையில் சட்டப்படியான அக்கறையுடையோர் ஊடாகவோ, மன்றில் தோன்றி எவ்விதமான சட்ட நடவடிக்கைகளையும் உரியகாலப் பகுதியில் மேற்கொள்ளாமையினால் வழக்காளியின் கோரிக்கையை மன்று ஒருமுக விளக்கத்தின் அடிப்படையில் ஏற்று, 1994-7-15 அன்றைய நாள் வழக்காளிக்கும், எதிராளிக்கும் ஊரறிய இடம்பெற்ற திருமணப்பதிவையும், உறவையும் இரத்துச் செய்து, வழக்காளியும், எதிராளியும் திருமணத்திற்கு முன்பிருந்த சட்டநிலையை அடைகிறார்கள் என வெளிப்படுத்தி இவ் இடைக்காலத் தீர்வை பதியப்படுகின்றது.

இந்த 2002ம் ஆண்டு, ஐப்பசி மாதம்.---நாள்.

வரைந்தவர்:- திரு.தா.இ.குலசேகர்,
வழக்காளியின் சட்டத்தரணி,
இரத்தினபுரம், கிளிநொச்சி. (8009)

திரு.த.செந்தூரன்,
மாவட்டநீதியாளர்,
தமிழீழ நீதிமன்றம்,
கிளிநொச்சி.

## தமிழீழ மாவட்ட நீதிமன்று,கிளிநொச்சி

வழ.இல:- 10/2002

"வழக்காளி"
நாகநாதன் உதயகுமார்
இல: 53 ஸ்கந்தபுரம்
கிளிநொச்சி.

"எதிர்"
உதயகுமார்-சுசிலாதேவி
மே.பா.தங்கரெத்தினம்
(கிளியம்மா)
கோபிகுடியிருப்பு
துணுக்காய். எதிராளி

### பகிரங்க அறிவித்தல்

மேற்படி எதிராளிக்கு!

இவ்வழக்காளியானவர், எதிராளியான உமக்கு எதிராக தனக்கும், உமக்கும் இடையிலான திருமண உறவை இரத்துச் செய்யுமாறு கோரி, மணநீக்க வழக்கை 3-6-2002 அன்று மன்றில் தாக்கல் செய்தபோது மன்று இவ்வழக்குத் தொடர்பான வழக்கறிக்கைப் பிரதியை உமக்கான அழைப்பாணையுடன் சேர்ப்பிக்க நடவடிக்கை எடுத்து 9-7-2002 அன்று இவ்வழக்கைக் கூப்பிட்டபோது எதிராளியான நீர் மேற்படி முகவரியில் இல்லையென்று முறைநிறைவேற்றுநரின் அறிக்கை மூலம் உறுதி செய்யப்பட்டதால், மன்று நீர் இவ்வழக்கில் தோன்றும் வகையில் பகிரங்க அறிவித்தல் பிறப்பித்து அப்பகிரங்க அறிவித்தல் 25-8-2002 அன்றைய நாள் ஈழநாதம் மக்கள் தினசரியில் பிரசுரமாகியும் குறிப்பிட்ட நாட்களுக்குள் நீர் நேரடியாகவோ அல்லது உமது நிலையில் சட்டப்படியான அக்கறையுடையோர் ஊடாகவோ மன்றில் தோன்றி எவ்விதமான சட்ட நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாமையினால் மன்று இவ்வழக்கை 26-8-2002 அன்று கூப்பிட்டு ஒருமுக விளக்கத்திற்கு தவணையிட்டு 16-09-2002 அன்று ஒருமுக விளக்கம் நடைபெற்றது. அதன் அடிப்படையில் 16-09-2002 மன்றில் வழங்கப்பட்ட ஒருமுக தீர்ப்பின்படி வரையப்பட்ட இடைக்காலத் தீர்வையின் பிரதி இத்துடன் இணைத்து இப்பகிரங்க அறிவித்தலுடன் உமக்கு பகிரங்கப்படுத்தப்படுகின்றது. எனவே இவ்விடைக்காலத் தீர்வை தொடர்பில் உமக்கு ஏதும் ஆட்சேபனை இருப்பின் அல்லது இத்தீர்வை முற்றாக தீர்வையாக்க முடியாது என்பதற்கு காரணம் இருப்பின்....இப்பகிரங்க அறிவித்தல் இடைக்காலத் தீர்வை என்பன வெளியிடப்பட்ட தினத்தில் இருந்து மூன்று மாத காலத்திற்குள் மன்றில் தோன்றித் தெரிவிக்குமாறு இவ்வழக்கின் தன்மையைக் கருதி சட்டப்படி உமக்கு சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது. தவறின் இடைக்காலத் தீர்வை முற்றான தீர்வையாக்கப்படும் என்பதை உமக்கு இப்பகிரங்க அறிவித்தல் ஊடாக அறியத் தரப்படுகின்றது.

"மன்றின் கட்டளைப்படி"

வரைந்தவர்:- திரு.தா.இ.குலசேகர்,
வழக்காளியின் சட்டத்தரணி,
இரத்தினபுரம், கிளிநொச்சி. (8008)

பதிவாளர்,
தமிழீழமாவட்ட
நீதிமன்று,
கிளிநொச்சி.


SONY SONY SONY SONY SONY SONY SONY SONY SONY SONY SONY

SONY
FD Trinitron
WEGA




சமதிரை (Flat TV)
தொலைக்காட்சிப்பெட்டி

சீடில்சின் உத்தரவாத பத்திரத்தை வற்புறுத்தி வாங்கவும்

"இப்பத்திரம் இல்லாமல் உங்கள் சொனியை வீட்டிற்குக் கொண்டு செல்ல வேண்டாம்"

சீடில்ஸ்

ஏக விநியோகஸ்தர் கிங் பரட்ஸ்
இல.20, பிரதான வீதி,
வவுனியா.
T.P: 23123


## எழுத்தாளர்களுக்கு!

எழுதத் தெரிந்தும் எழுதாது உறங்கும் எமது எழுத்தாளர்களே! உங்களிற்கு எழுத்துத்துறையில் ஆர்வமில்லையா? அல்லது எங்களோடு உங்களிற்கான தொடர்பு இல்லையா? கவலையை விடுங்கள். உங்கள் சுயவிபரத்துடன் எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள். உங்கள் முன்னேற்றத்திற்கு நாங்கள் எங்களது கரங்களைத் தருகிறோம்.



அனுப்பவேண்டிய முகவரி:
வெள்ளிநாதம்
யாழ்.சாலை,
கிளிநொச்சி.


# சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கி
# SOCIO ECONOMIC DEVELOPMENT BANK

## எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்!
## உங்களின் எதிர்காலத்தை வளமாக்கிக் கொள்ளுங்கள்!

- உங்களின் வாசலிலேயே சேமிப்புக்கணக்குகளை ஆரம்பிக்கலாம்.
- சேமிப்புகளுக்கு அதிகூடிய வட்டி.
- சேமிப்புக்கெதிராக கடன் பெறும் வாய்ப்பு.
- சுயதொழில் முயற்சிக்கான கடன்கள்.
- இலகுவான தவணைக்கால மீளளிப்புகள்.

### சேமிப்புத்திட்டங்கள்

- எதிர்கால எழில் – சிறார்களுக்கானது
- தாருகம் – மாணவர்களுக்கானது
- மகளிர் மாண்மியம் – மகளிருக்கு
- தோட்டத்தேட்டம் – விவசாயிகளுக்கு
- உழைப்பின் ஊற்று – தொழில் புரிவோருக்கு
- வாழ்வின் வளம் – வலுவிழந்தோருக்கு

### மற்றும் நிலையான வைப்புகள்




கிளைகள் : கிளிநொச்சி – புதுக்குடியிருப்பு – மல்லாவி – விசுவமடு – முழங்காவில் – முல்லைத்தீவு.

(7809)

# நேர்நோக்கு

## அழிவை நோக்கிய வழியில்

சமாதான நடவடிக்கைகளுக்கு எதிராக சிறிலங்காவின் தலைவியும் நிறைவேற்று அதிகாரங்கள் கொண்டவரும், முப்படைகளின் தளபதியுமான சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் சமாதானத்தை விரும்பும் மக்களுக்குப் பெரும் விரக்தியை ஏற்படுத்தியுள்ளது. அதிலும் கடந்த வாரம் விடுதலைப்புலிகளின் வியாபாரக் கப்பல் மீது இவரது கட்டுப் பாட்டிலுள்ள கடற்படையினர் சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து நடத்திய தாக்குதலானது மீண்டும் ஒரு யுத்தத்தைத் தோற்றுவித்து விடுமோ என்ற அச்சத்தை இம் மக்கள் மத்தி யில் ஏற்படுத்தியிருந்தது. எனினும் விடுதலைப் புலிகளின் சகிப்புத் தன்மை இதனைத் தவிர்த்துள்ளது.

சிறிலங்காவில் இரு வேறுபட்ட அதிகாரமையங்கள் அதன் அரசியலமைப்பின் கீழ் உருவாக்கப்பட்டுள்ளன. ஒன்று பாராளுமன்றம் இரண்டு நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி. இவ் இரு மையங்களுக்கும் முரணான சக்திகள் தெரிந்தெடுக்கப்படும் சாத்தியமும் தவிர்க்க முடியாத விடயமாகும். எனினும் அவ்வாறு ஒரு நிலைமை தோன்றினால் இவ்இரு சக்திகளும் ஒத்துச் செயற்படாவிடின் சிறிலங்காவின் நிர்வாகம் சீர்குலை வுக்கு உள்ளாவதும் தவிர்க்க முடியாததாகும்.

சுமார் 20 வருடங் களுக்கு மேலாக தீவிரயுத்தத் தில் ஈடுபட்ட பின்னர் உலகின் அனுசரணையுடன் சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகையில் அதற்கு ஆதரவு வழங்க வேண்டியது. அனைவ ரினதும் கடமையாகும். இது நாட்டின் தலைவிக்கு இன்றிய மையாத ஒரு கடமையாகும். இதற்கு ஆதரவு வழங்காவிடினும் முட்டுக் கட்டையாவது போடாதிருப்பது மக்களுக்கு ஆற்ற வேண்டிய மிகப்பெரிய கடமையாகும்.

சமாதான முயற்சிகள் தவறான வழியில் செல்வதாக மக்கள் கருதினால் மக்களுக்கு எதிரானதாக அது இருந்தால்- மக்களின் விருப்பத்திற்கு மாறானதாக இருந்தால் அவ்விடயத் தில் சனாதிபதி தலையிட்டுச் சீர் செய்வதில் தவறு எதுவுமில்லை. அவ்வாறு மக்கள் கருதுவதாக சனாதிபதி சந்திரிகா குமார துங்க உணர்ந்திருந்தால் அவருக்கு உள்ள அதிகாரத் தைப் பயன்படுத்தி ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தைக் கலைத்திருக்க முடியும். அவ்வா றான விருப்பம் அவருக்கு உள்ளமையும் வெளிப்படையாகும்.

ஆனால் நிலைமை அவ்வாறாக இல்லை. சமா தான முயற்சிகள் சீரான முறையில் சென்று கொண்டி ருக்கையில் ரணில் விக்கிர மசிங்கவின் அரசாங்கத்தைக் கலைத்தால் அது எதிர்மறை யான விளைவை ஏற்படுத்தும் என்பதாலேயே சனாதிபதி சந்தி ரிகா அம்முயற்சியில் இறங் காது இருக்கிறார்.

இந்நிலையில் சமா தான முயற்சிகளை எவ்வாறா யினும் சீர் குலைத்துவிட எடுக்கப்பட்டுவரும் முயற்சி களானது மக்களுக்கு விரோத மானதாகும்.

சிறிலங்காவின் இரு அதிகாரமையங்களில் ஒன்றுடன் அதாவது அரசாங் கத்துடன் செய்து கொள்ளப்பட்ட புரிந்து ணர்வு ஒப்பந்தத்தை மதித்து நடக்க வேண்டியது. அவ் அரசாங்கத்தின் ஒவ் வொரு அங்கத்தினது மட்டுமல்ல மற்றைய அதிகார மையத்தினதும் கடமையாகும். அவ்வாறு இல்லாவிடின் நிர் வாகச் சீர்குலைவும் அதனால் நாட்டிற்குப் பெரும் கேடு ஏற்படுவது தவிர்க்க முடியாத தாகும்.

ஒப்பந்தத்தை மதித்து நடக்காதது மட்டுமல்ல அதனைச் சீர்குலைக்கும் வகை யில் நடந்து கொள்வது என்பது சிறிலங் காவைப் பேரழிவுக்கு இட்டுச் செல்லக்கூடியதாகும்.

சமதானத்தை விரும்பும் மக்கள் சமாதான நடவடிக்கைகளையும் அதற்கு அத்தி வாரமாக அமைந்துள்ள புரிந் துணர்வு ஒப்பந்தத்தையும் மீறி நடக்கும் இச்சக்திகளை இனங்கண்டு அவர்களுக்கு எதிராக அணி திரள்வது இன்றியமையாத தாகும்.

வேலவன்

### சமாதானம்...

கைகுலுக்கும் வேளை கால்களை இடறி விழுத்தும் தந்திரோபாயத்தின் பெறுபேறுகளின் ஆபத்தை உலக வரலாற்றில் பல பக்கங்களில்- அதுவும் ஒடுக்கப்பட்ட நாடுகளின் விடுதலைப்போராட்ட அனுபவங்களில் அழுத்தமாக பதிவு செய்யப்பட்டுள்ளதை நாம் உணர வேண்டிய கால கட்டமும் இதுவேயாகும்.

சிறிலங்காவின் இரட்டை ஆட்சியை நடாத்தும் சந்திரிகாவுக்கும் ரணிலுக்கும்மிடையே சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பான ஒரு இணக்கப்பாட்டை, ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கையை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை தெரிந்து கொண்டும் அதனை ஏன் இன்னும் ஏற்படுத்தாது கண்மூடி நிற்கிறது சர்வதேச சமாதானசமூகம்?

பேரினவாத சக்திகள் அமைதிக்கும் சமாதானத்திற்கும் எதிராக மூர்க்கத்தனமாக குரல் கொடுத்துப் போராடுவதைக் கண்டிக்கத்தவறும் கண்காணிப்பாளர்கள், தமிழ்ப் பகுதிகளின் நியாயமான தமது வாழ்வியல் அரசியல் உரிமைகளுக்காக 'சாத்வீக'ரீதியில் போராடும் மக்களை மட்டுமே அடக்கி வாசிக்குமாறு ஆலோசனை அச்சுறுத்தல் விடுப்பது ஏன்?

இராணுவ சமநிலைப் பற்றி அடிக்கடி கூறும் இதே குழுவினர் விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கடத்தக்கூடாது, ஆட்களைச் சேர்க்கக்கூடாது, இடுப்புப்பட்டி அணியக் கூடாது, ஆயுதங்களுடன் நடமாடக் கூடாது, புதிய முகாங்கள் அமைக்கக்கூடாது என்றெல்லாம் அடுக்கடுக்காக விதிகளைக் கூறும் அதே வேளையில் அமெரிக்கா - இலங்கை கூட்டு இராணுவப் பயிற்சியை கை கட்டி ரசிக்கிறது, சிறிலங்கா அரசின் புதிய ஆயுதத் தளபாடக் கொள்வனவினை மௌனமாக அங்கிகரிக்கிறது. சிறிலங்கா ஆயுதப்படைகளின் அடாவடித்தனங்களை, கடற்படையினரின் காட்டு மிராட்டித்தனங்களை, அத்துமீறல்களை, விமானப்படையினரின் வேவு நடவடிக்கைகளை கண்களை மூடிப்பார்த்துக்கொண்டிருக்கின்றது என்றால் 'இராணுவ சமநிலை' என்ற வார்த்தைக்கு அவர்கள் தவறாக அர்த்தம் கொண்டுள்ளார்கள் என்றே எண்ணத் தோன்றுகின்றது.

இவையும் இவை போன்ற பலவும் 'சமாதானம்' குறித்த, அமைதி நடவடிக்கை குறித்த, அரசியல் தீர்வு குறித்த தமிழ் மக்களின் நம்பிக்கைகளை, எதிர் பார்ப்புகளை கேள்விக்குறியாக்கி வருகின்றது.

குறிப்பாக கடற்படையினரின் அத்துமீறல்களும் அடாவடித்தனங்களும் நியாயமற்ற முறையில் இன்னும் தெளிவாகச் சொல்வதானால் பாதுகாப்பு அமைச்சராலும் அவரது அமைச்சகத்தாலும் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு ரணிலின் அரசின் அறிவுறுத்தல்களையும் மதிக்காது முப்படைத் தளபதியான சந்திரிகாவின் ஆணைக்கு இணங்கி அவரது பரிபூரண ஆசீர்வாதத்துடன் அவரது அரசியல் அபிலாசைகளுக்கு ஏற்ப தொடர்ந்து வருவதை சமாதான ஏற்பாட்டாளர்களும் கண்காணிப்புக் குழுவினரும் அசட்டை செய்வதானது அவர்களின் சமாதான முயற்சிகளுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் பேரினவாத நோக்கத்திற்கும் அனுசரனை வழங்குவதாகிவிடும்.

அண்மையில் நடைபெற்ற விடுதலைப்புலிகளின் கப்பல் மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பானபாதுகாப்பு அமைச்சினதும் கடற்படையினரதும் அறிக்கைகளில் காணப்படும் முரண்பாடுகளே உண்மை நிலையை உரைக்கப் போதுமானவைகளாகும்.

இந்த நிலையில் வெறுமனே நம்பிக்கைகளின் அடிப்படையில் செய்யப்பட்ட போர்நிறுத்த உடன்பாட்டினை நம்பிக்கைகள் தளர்ந்து கொண்டு போகும் இந்த நிலையில், மீளாய்வு செய்து மாற்றங்களை ஏற்படுத்த வேண்டிய கட்டாயத்தினை இந்த ஓராண்டு கால - சமாதானகால - அனுபவங்கள் ஏற்படுத்தியுள்ளன.

ஆயுதப் படைகளை பூரண கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் அதிகாரவலுவும், சமாதான எதிர்ப்பு நடவடிக்கையாளர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கும் துணிவும், அரசாங்கத்திற்கு இல்லாதவரை, பேச்சுவார்த்தைகளும் உடன்படிக்கைகளும் எவ்வித அர்த்தத்தை கொண்டிருக்கப் போவதில்லை.

முக்கிய பிரச்சினைகளில் முடிவெடுத்து அதனைச் சட்டரீதியாக அமுல்நடத்தும் பூரண அதிகாரம் அரசுக்கு இல்லையெனில் - அதற்காக சனாதிபதியின் தலை அசைப்புக்கு காத்திருக்க வேண்டிய நிலையே அரசுக்கு தொடருமெனில் 'சமாதானம்' பேச்சுவார்த்தை மேமையில் மட்டும் பேசப்படும் ஒரு வார்த்தையாகவே இருக்கும்.

பேச்சுவார்த்தைகள் தொடர்பான ஒரு தீர்க்கமான முடிவுக்கும் போர் நிறுத்த உடன்பாடு தொடர்பான மாற்றங்களுக்கும் ரணிலும் சந்திரிகாவும் ஒரு புரிந்துணர்வு இணக்கப்பாட்டிற்கு வருவதை சமாதான ஏற்பாட்டாளர்களும் சர்வதேச சமூகத்தினரும் முதலில் உறுதி செய்து கொள்ளவேண்டிய அவசியமும் உள்ளது.

இந்த இரு தரப்பினரதும் இணக்கம் தான் சமாதானம் தொடர்பான எதிர்கால நம்பிக்கைகளுக்கு ஆதாரமாக இருக்கக் கூடும். இந்த இணக்கம் சாத்தியம் இல்லை எனில் சிறிலங்காவின் இரட்டை ஆட்சிப் போக்கில் சமாதானப் பேச்சுவார்த்தை என்பது வெறுமனே காலத்தைப் போக்கடிக்கும் நடவடிக்கையாகவே இருக்கும்.

உறுதியான அரசியல் தீர்வுக்கு வழிசமைக்காத நிலையில் புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்தி என்பவற்றுக்கான நடவடிக்கைகள் எதுவும் எந்தவிதமான நம்பிக்கையையும் நிரந்தர சமாதானம் குறித்து எமது மக்களுக்கு ஏற்படுத்தப்போவதில்லை என்பது மட்டும் நிச்சயமான விடயமாகும்.

## படத்திற்கு மெருகூட்டுங்கள்-10



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

படத்திற்கு மெருகூட்டுங்கள்- 10

..........................................................

..........................................................

..........................................................

..........................................................

பெயர் : ..........................................................

முகவரி : ..........................................................

..........................................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள்- 09



இ. கிர்த்திகன்,
இல. 114/2
தருமபுரம்.

### பரிசுக்குரிய வரிகள்

கல்லறை தழுவிடும் கரங்கள்
உந்தன் கண்மணியின் மேனியைத் தேடும்
வந்தவரை வென்றவர் நீங்கள் என்று
உந்தன் வாயது மெல்லப் பேசும.

### பாராட்டுக்குரிய வரிகள்

வீரத்தாயே! நீ கருவறையில் சுமந்தவன்
கல்லறையில் என்று வெம்புகிறாயா?
கல்லறையில் மட்டும்மல்லத் தாயே!-இவன்
அனைத்து மக்களின் நெஞ்சறையிலுமுள்ளான்.

து.கிரி,
வன்னி.-

சத்தமிட்டு முத்தமிடுகின்றேன்-உன்
சாதனையால் தலைநிமிர்ந்தேன்
சந்ததிகள் உன்னைப் போற்ற-நீ
சாகவில்லை சரித்திரமாய் வாழ்கின்றாய்.

அ.ஜெயசுதா,
கரைச்சி வடக்கு
அபிவிருத்தி நிறுவனம
தருமபுரம்.

ஓ அன்னையே சந்தனப்பேழையில் காணாத-உன்
சேய்முகத்தை கல்லறையில் தேடுகின்றாயா?
கவலையை விடம்மா நாளை மலரும் ஈழத்தில்
உன் மகவின் பூமுகத்தை நீ காண்பாய்.

அ. கலைவாணி,
கோம்பாவில்,
புதுக்குடியிருப்பு.

விடியலுக்காக உழைத்த உன் வீரப்புதல்வன்
சாகவில்லையம்மா-உறங்குகின்றான்.
ஈழம் விடியும் வேளை உன் மகன்
ஈழத்தின் விடிவெள்ளியாய் ஒளிர்வான் தாயே.

மேதினி.செ
விசுவமடுச்சந்தி
விசுவமடு.

விடிவுக்கு முந்திய-தன்
வீரனின் முடிவினால்
விழவில்லையிந்த ஆலமரம்.
விழுதுக்கும் வீரமூட்டுகிறது!

சி. நந்தினி,
தபாலகஒழுங்கை,
யோகபுரம்,
மல்லாவி.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை
அருச்சுனா புகைப்படக் கலையகம்
புதுக்குடியிருப்பு கிளிநொச்சி.
வழங்குகின்றது.

# சிறுகதைத் தொகுப்பு வெளியீட்டு விழா புரிதல்





புரிதல் சிறுகதைத் தொகுப்பின் ஆசிரியர் தீபா குமரேசன் உரையாற்றுகின்றார்.

மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள் மதிப்பீட்டுரையினை ஆற்றுகின்றார்.

15.03.2003 அன்று புதுக்குடியிருப்பு ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலயத்தில் இடம் பெற்ற சிறுகதைத் தொகுப்பு வெளியீட்டு விழாவில் தீபா குமரேசின் 'புரிதல்' எனும் சிறுகதைத் தொகுப்பு வெளியிட்டு வைக்கப்பட்டது. இந்சிறுகதைத் தொகுப்பின் வெளியீட்டுரையினை செல்வி தமிழினி ஆற்றினார். இந் நிகழ்வின் கேணல். சங்கர் அவர்களின் பாரியார் தொகுப்பை வெளியிட்டு வைத்தார். தொடர்ந்து மதிப்பீட்டு உரைகளை செல்வி பிருதுவி [போராளி], திருமதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்களும் நிகழ்த்தினர்.

மேலும் சிறப்புரையினை க.வே பாலகுமாரன் நிகழ்த்தினார். இந் நிகழ்வில் பெருமளவான படைப்பாளர்களும் போராளிகளும் கலந்து சிறப்பித்தனர்.

# லெப்.கேணல் பாலேந்திரா பயிற்சிக் கல்லூரியில்

## 13.03.2003





பயிற்சி முடித்து வெளியேறும் வீரர்களினுடைய அணிவகுப்பு மரியாதையும் அதனைப் பார்வையிடும் தளபதிகளும் கீழே உள்ள படத்தில் காணலாம்.

கரடியனாறு லெப்.கேணல் பாலேந்திரா பயிற்சிக்கல்லூரியில் இடம்பெற்ற அதிகாரிகள் பயிற்சிநெறி நிறைவு நிகழ்வை காண வந்திருக்கும் மக்கள் கூட்டம் மேலே.





பயிற்சி பெற்ற போராளிகளுக்கு மூத்த தளபதி கேணல் கருணா சான்றிதழ்களை வழங்குவதைக் கீழே உள்ள படத்தில் காணலாம்.

இந்நிகழ்வில் பெருமளவான பயிற்சி பெற்ற போராளிகளின் பெற்றோர்களும் கலந்து கொண்டு தங்கள் பிள்ளைகளுக்கு பதக்கங்கள் வழங்கி கௌரவித்தனர்.



இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு மார்ச் மாதம் 21ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.